

பக்கம் 07

சிரிய இரசாயன அழிப்புக்கு ரஷ்யா பாதுகாப்பு வழங்கும்



பக்கம் 22

யாழ்ப்பாணத்தில் முதல் முறையாக தேசிய மேசைப் பந்தாட்ட போட்டி



பக்கம் 23

இலங்கை அணியை வீழ்த்தி பாக். வெற்றி


# உதயன்

UTHAYAN - A Lively National Tamil Daily

சுடர்: 29 கதிர்: 024 வள்ளுவர் ஆண்டு: 2044 | மார்கழி 05, வெள்ளி 20.12.2013

பக்கம் : 24

வன்னி : ரூபா.20

யாழ். : ரூபா.20

கொழும்பு : ரூபா.30




மப்பான வானிலை

29 C 24 C

# சந்திரசிறியை எதிர்ப்பதற்கு வடக்கு - கிழக்கு இணைவு

## அடுத்த கட்ட நகர்வுக்காக 24 ஆம் திகதி வவுனியாவில் கூடுகின்றது கூட்டமைப்பு

யாழ்ப்பாணம், டிசெம்பர் 20
வட மாகாண ஆளுநர் ஜி.ஏ. சந்திரசிறியின் தன்னிச்சையான - மாகாணசபை சட்டங்களை மீறிய செயற்பாடுகளால் அங்கு எழுந்துள்ள பிரச்சினை தொடர்பில் அடுத்த கட்டநகர்வுக்கான முடிவை எடுப்பதற்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வடக்கு, கிழக்கு மக்கள் பிரதிநிதிகள் எதிர்வரும் 24ஆம் திகதி வவுனியாவில் ஒன்றுகூடவுள்ளனர்.

இதன்போது, தமிழர் தாயகத்தில் தொடரும் இராணுவ ஆக்கிரமிப்பு, அரசியல் தீர்வு நடவடிக்கையில் அரசு காட்டும் அசமந்தப் போக்கு ஆகியவை உட்பட முக்கிய விடயங்கள் தொடர்பிலும் தீர்க்கமான முடிவு ஒன்று எடுக்கப்படும் என்றும் கூட்டமைப்பு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

வவுனியா நகரசபை மண்டபத்தில் காலை 9 மணிக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த முக்கிய சந்திப்பில் கூட்டமைப் பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், வடக்கு மாகாண முதலமைச்சர், வடக்கு மாகாண அமைச்சர்கள், கூட்டமைப்பின் வடக்கு மாகாணசபை உறுப்பினர்கள் மற்றும் கிழக்கு மாகாண எதிர்க்கட்சித் தலைவர் உட்பட கூட்டமைப்பின் கிழக்கு மாகாணசபை உறுப்பினர்கள் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆளுகைக்குள் வடக்கு மாகாணசபை வந்த பின்னர் கட்சியின் வடக்கு, கிழக்கு மக்கள் பிரதிநிதிகள் முதன்முதலாக ஒன்றுகூடி நடத்தும் முக்கிய சந்திப்பு இதுவென்பது குறிப்பிடத்தக்கது.

நேற்று நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் நடைபெற்ற

21 ஆம் பக்கம் பார்க்க

## உடுத்துறையில் ஆழிப் பேரலை நினைவு நிகழ்வு

வடமராட்சி, டிசெ. 20
ஆழிப்பேரலை அனர்த்தத்தில் காவு கொள்ளப்பட்ட ஆயிரக்கணக்கானோரை நினைவு கூருவதற்காக உடுத்துறை நினைவாலயத்தைச் சிரமதானம் மூலம் துப்புரவு செய்யும் பணியை உடுத்துறை கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் இன்று 20 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முதல் ஆரம்பிக்கின்றது.

நினைவு தினத்துக்கு முதல் நாள் வரை இந்தச் சிரமதானப் பணி தொடர்ந்து நடைபெறும்.

யாழ். மாவட்டத்தில் குறித்த அனர்த்தத்தில் ஆயிரத்து 400 இற்கும் அதிகமானோர் வடமராட்சி கிழக்கில் காவுகொள்ளப்பட்டனர். அவர்களின் உடல்கள் உடுத்துறை ஆழிப் பேரலை நினைவிடத்தில் அடக்கம் செய்யப்பட்டிருந்தன.

காவு கொள்ளப்பட்டோரின் நினைவு தினத்தை கடந்த காலங்களைப் போல இம்முறையும் உடுத்துறை நினைவாலயத்தில் அனுஷ்டிக்க உடுத்துறைக் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் விரிவான ஏற்பாடுகளை இன்றிலிருந்து செய்து வருவதாக சங்கத் தலைவர் பொ.பிரேமதாஸ் தெரிவித்தார். (த-8)

## முதல்வரின் அனுமதிக்காக காத்திருக்கும் வாகனங்கள்



யாழ்ப்பாணம், டிசெ. 20
நெல்சிப் திட்டத்தில் வழங்கப்பட்ட கனரக வாகனங்கள் வெயிலிலும் மழையிலும் கடந்த இரண்டு மாத காலமாக வடக்கு மாகாண முதலமைச்சரின் அனுமதிக்காகக் காத்திருக்கின்றன.
வடக்கு மாகாண உள்ளூராட்

21 ஆம் பக்கம் பார்க்க

## இலங்கைக்கு எதிரான தீர்மானத்துக்கு பிரிட்டனும் பங்காளியாக இருக்கும்

### அந்நாட்டு வெளிவிவகார அமைச்சர் தெரிவிப்பு

லண்டன், டிசெ. 20
ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் சபையில், இலங்கைக்கு எதிராகத் தீர்மானம் கொண்டு வரப்படுவதற்குப் பிரிட்டனும் பங்காளியாக இருக்கும் என்று அந்நாட்டு வெளிவிவகார மற்றும் பொதுநலவாய அமைச்சர் ஹுயோ ஸ்வாயர் தெரிவித்துள்ளார்.



பொறுப்புக் கூறுதல் உள்ளிட்ட விடயங்களில் இலங்கை தொடர்பில் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில்

21 ஆம் பக்கம் பார்க்க

## தெரிவுக்குழுவின் காலம் மேலும் 6 மாதம் நீடிப்பு


கொழும்பு, டிசெ. 20
தேசிய இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் பொருட்டு அமைக்கப்பட்டுள்ள நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் காலம் இரண்டாவது தடவையாகவும் ஆறு மாத காலங்களுக்கு நீடிக்கப்பட்டுள்ளது.

தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு அனைத்துக் கட்சிகளையும் உள்ளடக்கிய நாடாளுமன்றத் தெரிவுக்குழு

21 ஆம் பக்கம் பார்க்க

## அரச மும்மொழிக் கொள்கை வெறும் வாய்ப் பேச்சுத்தான்

### இன்னும் தனிச் சிங்களத்தில் கடிதங்கள்



Chairman: (+94) 011 2556510

Secretary: (+94) 011 2556621

Office: (+94) 0112556624, 0112671324

Fax: (+94) 011 2556836, 011 2556837

நிதி ஆணைக்குழு

FINANCE COMMISSION
(Established under Article 154 R of the Constitution)

My No: FC/9/1/2014

Your No

Date: 2013.10.08

2014

(රු.'000)

රු. 1,012,152,000/-

2013.10.01 ... FC/3/2/2014 ...

யாழ்ப்பாணம், டிசெ. 19
மும்மொழிக் கொள்கையை நடைமுறைப்படுத்துமாறு இலங்கை அரசினால் தொடர்ச்சியாக வலியுறுத்தப்பட்டு வருகின்ற போதும் நடைமுறையில் அது கடைப்பிடிக்கபடுவதில்லை என்று அரச திணைக்கள அதிகாரிகள் சுட்டிக் காட்டுகின்றனர்.

தமக்கு அனுப்பப்படும் கடிதங்கள் இன்னமும் தனிச் சிங்கள மொழியிலேயே அனுப்பப்படுவதாக அவர்கள் தெரிவிக்கின்றனர்.

தமிழர் ஒருவருக்கு அவர் தமிழ்

21 ஆம் பக்கம் பார்க்க

## கருத்தடையின் பின் இளம் பெண் சாவு முழு விசாரணை கோரிக் கணவர் மனு

*யாழ்ப்பாணம், டிசெ. 20*
*கட்டாயக் கருத்தடைக்கு உட்படுத்தப்பட்ட பெண் உயிரிழந்தமை தொடர்பில் முழுமையான விசாரணைகள் நடத்தப்படவேண்டும் எனக் கோரி உயிரிழந்த பெண்ணின் கணவர் யாழ். நீதிவான் நீதிமன்றில் நேற்று விடுத்த கோரிக்கையை ஏற்றுக்கொண்டு எதிர்வரும் ஜனவரி மாதம் 24 ஆம் திகதிக்கு வழக்கை ஒத்தி வைத்துள்ளது நீதிமன்றம்.*

*கிளிநொச்சி மலையாளபுரத்தைச் சேர்ந்த சதீஸ்குமார் மஞ்சுளா (வயது 26) என்ற இளம் தாயொருவர் கடந்த நவம்பர் மாதம் 28 ஆம் திகதி உயிரிழந்திருந்தார்.*

21 ஆம் பக்கம் பார்க்க

## பிரிட்டன் எம்.பிக்கள் குழு அரச செலவிலே அழைப்பு

### ஒத்துக்கொண்டார் அமைச்சர் பீரிஸ்

கொழும்பு, டிசெ.20
இலங்கையின் நிலவரங்களை நேரில் கண்டறிந்து கொள்வதற்காகப் பிரிட்டன் நாடாளுமன்ற உறுப்பினர்களை அரசின் செலவில் அழைத்துவந்தமை உண்மைதான் என்று நேற்றுச் சபையில் ஒப்புக்கொண்டார் வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ்.

இலங்கை நாடாளுமன்ற உறுப்பினர்களும் பிரிட்டன் அரசின் செலவில் அங்கு சென்று விடயங்களை ஆராய்ந்த சம்பவங்களும் இதற்கு முன்னர் இடம்பெற்றிருக்கின்றன என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

நாடாளுமன்றில் நேற்று நடைபெற்ற பொதுநிர்வாக, உள்ளூராட்சி அலுவல்கள் அமைச்சு மீதான குழு நிலை விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இலங்கையில் நடைபெற்ற

21 ஆம் பக்கம் பார்க்க

## புலமைப்பரிசில் பரீட்சைக்கு 2016 முதல் தடை

### *கல்வியமைச்சு அறிவிப்பு*

*கொழும்பு, டிசெ.20*
*2016 ஆம் ஆண்டிலிருந்து 5 ஆம் வகுப்பு புலமைப்பரிசில் பரீட்சை நடைபெறாது எனக் கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.*

*இதற்குப் பதிலாகத் தவணைப் பரீட்சை போன்றதொரு பரீட்சை வைக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.*

*கல்வியமைச்சில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.*

*அவர் மேலும் தெரிவித்ததாவது,*

*"2016 ஆம் ஆண்டிலிருந்து இனிப் புலமைப்பரிசில் பரீட்சை நடைபெறாது. இந்தப் பரீட்டையானது தற்போது போட்டித்*

21 ஆம் பக்கம் பார்க்க

# சுகாதாரத் தொண்டர்களும் நியமனம் கோரிக் கவனவீர்ப்பு

## சுகாதார சேவைகள் அலுவலகம் முன்னால்

யாழ்ப்பாணம், டிசெ. 20

17 வருடங்களாக நியமனமும் இன்றி, சம்பள அதிகரிப்பும் இன்றிப் பணியாற்றி வரும் யாழ்.மாவட்ட சுகாதாரத் தொண்டர்கள் தமக்கு நிரந்தர நியமனம் வழங்குமாறு கோரி நேற்று வியாழக்கிழமை முதல் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை வாயிலில் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர். இன்று வெள்ளிக்கிழமையும் இந்தப் போராட்டத்தைத் தொடரவுள்ளதாகச் சுகாதாரத் தொண்டர்கள் தெரிவித்தனர்.

பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளைத் தாங்கியவாறு சுகாதாரத் தொண்டர்கள் இந்தப் போராடடத்தில் ஈடுபட்டனர்.

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:-

விலைவாசி உயர்வு உட்பட பல நெருக்கடிகளுக்கும் மத்தியிலேயே நாம் கிராமங்கள், நகரங்கள் தோறும் சென்று பணியில் ஈடுபட்டு வருகிறோம். "தாய் சேய் நலன் காத்தல், டெங்குக் கட்டுப்பாட்டில் ஈடுபடல், விலங்கு விசர் நோயைத் தவிர்த்தல், காசநோயைத் தவிர்த்தல், பாலியல் தொற்றுக்களைத் தவிர்த்தல், மலேரியாவைத் தடுத்தல் உட்பட பல வேலைகளை நாம் முன்னெடுத்து வருகிறோம்.

வெயில் மழை எதுவும் பாராது நாம் பணிகளை உரிய காலத்தில் முன்னெடுக்க வேண்டும்.



1997 ஆம் ஆண்டு தொடக்கம் நாம் சுகாதாரத் தொண்டராகப் பணிபுரிந்து வருகிறோம். தரம் -8 சித்தியடைந்திருந்தால் போதும் என்று கூறியே எங்களைப் பணிக்கு அமர்த்தியிருந்தார்கள். தற்போது நியமனத்துக்கு ஜீ.சீ.ஈ. சாதாரண தரம் சித்தியடைந்திருத்தல் வேண்டும் என்று கேட்கிறார்கள். எமக்கு நியமனம் வழங்குவதாகக் கூறிய வாக்குறுதியை அவர்கள் நிறைவேற்ற வேண்டும்.

5 வருடங்கள் முதல் 16 வருடங்கள் வரை சேவையாற்றிய சுமார் 300 பேர் இவ்வாறு பணியாற்றுகிறோம். 30 வீதமானோர் திருமணமாகியவர்கள் பல வருடங்களாக நியமனம் தருவதாகக் கூறியதனாலேயே நாம் தொடர்ந்தும் இதே பணியில் ஈடுபட்டுள்ளோம். சீருடை, காலணி, போக்குவரத்துச் செலவுக்கு என எந்தவொரு கொடுப்பனவும் எமக்குத் தருவதில்லை. எழுதுவதற்கு பேனா, தாள்கள் கூட எமது செலவிலேயே பெற வேண்டியுள்ளது.

எனவே எமக்கு நிரந்தர நியமனம் வழங்க வேண்டும். அது வரை நாம் தொடர்ச்சியாகப் போராட்டத்தில் ஈடுபடுவோம் - என்றார். (த-4)

# நாளை மின் தடை

யாழ்ப்பாணம், டிசெ. 20

உயர் அழுத்த மின் விநியோக மார்க்கங்களில் பராமரிப்பு மற்றும் கட்டமைப்பு வேலைகளுக்காக நாளை சனிக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.30 மணி வரை வைமன் வீதி, கோவில் வீதி, றக்கா வீதி, இராசாவின் தோட்டம், பழைய பூங்கா, அத்தியடி புது வீதி, சோமசுந்தரம் அவனியூ, முலவைச் சந்தி, ஓ. எல். ஆர் பிரதேசம், கச்சேரி நல்லூர் வீதி, கச்சேரியடி, சுண்டுக்குளி, புங்கன்குளம், ஈச்சமோட்டை, பாசையூர், மணியந்தோட்டம், உதயபுரம், நெடுங்குளம், கொழும்புத்துறை ஆகிய இடங்களில் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று யாழ்.பிரதேச மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார். (ஒ)

# இளம் பெண்ணை காணவில்லை

யாழ்ப்பாணம், டிசெ. 20


திருமணமான 30 வயதுடைய பெண் ஒருவர் கடந்த 18 நாள்களாகக் காணாமற் போயுள்ளார் என்று உறவினர்களால் முறைப்பாடு செய்யப்பட்ட விடயம் குறித்து ஊர்காவற்றுறைப் பொலிஸாரால் நீதிமன்றுக்கு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் ரயில் நிலைய வீதியைச் சேர்ந்த ஞானசீலன் கௌதினி என்ற பெண்ணே காணமற் போயுள்ளார்.

கடந்த 2 ஆம் திகதி தனது வீட்டிலிருந்து முற்பகல் 10 மணிக்குப் புறப்பட்டு ஊர்காவற்றுறை சூரியவத்தையிலுள்ள உறவினர்களின் வீட்டுக்குச் செல்வதாகக் கூறிச் சென்றவர் இதுவரை வீடு திரும்பவில்லை. உறவினர் வீட்டிலும் அவர் இல்லை. கடந்த ஏப்ரலில் அவர் திருமணம் செய்து கொண்டார். அவரது கணவன் பிரான்ஸில் உள்ளார் என்று பொலிஸாரால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-4)

# சட்டத்துறை மாணவர் நேற்றுப் போராட்டம்

## யாழ். பல்கலைக் கழகத்தில்




யாழ்ப்பாணம், டிசெ. 20

தமது பரீட்சைப் பெறுபேறுகளைக் காலதாமதம் செய்யாது விரைவில் வெளியிடுமாறு வலியுறுத்தி யாழ். பல்கலைக்கழக சட்டத்துறை மாணவர்கள் பல்கலைக்கழக துணை வேந்தர் அலுவலகம் முன்பாக நேற்று கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

பல்வேறு வாசகங்கள் பொறிக்கப்பட்ட பதாகைகளை ஏந்திய வண்ணம் முதலாம், இரண்டாம், மூன்றாம் வருடங்களைச் சேர்ந்த சட்டத்துறை மாணவர்கள் இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர். ' குறிப்பிட்ட ஒரு வருடத்தின் முதல் அரையாண்டுப் பரீட்சை நடைபெற்றால் அந்தப் பெறுபேறு அடுத்த பரீட்சை நடைபெறவுள்ள நிலையிலும் வெளிவருவதில்லை. முதல் பரீட்சையில் மாணவர்கள் சித்திபெறத் தவறியிருந்தால் அடுத்த பரீட்சையில் அதனை திரும்ப எழுத முடியாதவாறு அடுத்த பரீட்சையும் நிறைவடைந்த பின்னரே பெறுபேறு வெளியாகிறது. இதனால் பல வகைகளில் நாம் சிரமங்களை எதிர்கொள்கின்றோம். எனவே பெறுபேறுகளை விரைவாக வெளியிட வேண்டும் என்று போராட்டத்தில் ஈடுபட்ட மாணவர்கள் கூறினர்.

இது தொடர்பில் யாழ். பல்கலைக்கழகச் சட்டத்துறைத் தலைவர் கலாநிதி த. கலாமணியுடன் தொடர்பு கொண்டு கேட்ட போது,

சில வருடங்களுக்கு முன்னரே யாழ். பல்கலைக்கழகத்தில் சட்டத்துறை ஆரம்பிக்கப்பட்டது. அதனால் போதியளவில் விரிவுரையாளர்கள் இல்லை. அண்மையில் தான் விரிவுரையாளர்களின் எண்ணிக்கை ஐந்தாக அதிகரிக்கப் பட்டுள்ளது.

பரீட்சை நடைபெற்றால் விடைத் தாள்களைக் கொழும்பு பல்கலைக்கழகத்துக்கு அனுப்பி அங்குள்ள சட்டத்துறை விரிவுரையாளர்கள் மூலமே திருத்த வேண்டியுள்ளது. அவர்கள் இதனை எமக்கு ஒரு உதவியாகவே செய்து தருகிறார்கள். வர வேண்டிய பெறுபேறு இன்னும் இரண்டு வாரங்களில் கிடைத்து விடும். எம்மாலான அனைத்து நடவடிக்கைகளையும் முன்னெடுத்து வருகிறோம் - என்றார். (த-4)

# பள்ளி வாசல் விவகாரம்; உரிய கவனம் எடுப்பேன்

## ஹக்கீமிடம் கூறினார் ஜனாதிபதி

யாழ்ப்பாணம், டிசெ. 20

அத்தியடி மஸ்ஜிதுல் ஹிபா, களுபோவில மஸ்ஜித்துல் தாருல் சாபீய் தெஹிவளை தாருல் அர்க்கம் பள்ளிவாசல் மூடப்பட வேண்டும் என எழுந்துள்ள பிரச்சினையில் உரிய கவனம் எடுக்கப்படும் என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பள்ளிவாசல் விவகாரம் தொடர்பில் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமுக்கும் ஜனாதிபதிக்கும் இடையில் அலரி மாளிகையில் நடைபெற்ற சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

குறித்த பள்ளிவாசல்களில் தொழுகைகள் நடத்த வேண்டாமெனப் பொலிஸாரால் அறிவிக்கப்பட்டதையடுத்து அப் பகுதியில் பதற்ற நிலை ஏற்பட்டது.

இந்நிலையில் அமைச்சர் ரவூப் ஹக்கீமுக்கும் ஜனாதிபதிக்கும் இடையில் சந்திப்பொன்று நேற்று இடம்பெற்றுள்ளது.

இச் சந்திப்பில், பள்ளிவாசல்களில் தொழுகை நடத்த தடை விதிக்கப்பட்டமை தொடர்பிலும் ஏற்படவுள்ள இன,மத முரண்பாடுகள் பற்றியும் பேசப்பட்டுள்ளது.

இதற்குப் பதிலளித்த ஜனாதிபதி,

" பள்ளிவாசல்களை மூடும்படி உருவாகியுள்ள பிரச்சினை தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார்.

இந் நிலையில், பொலிஸார் தொழுகையை தடை செய்யவில்லை. கொஹுவல பிரதேத்தில் குர் ஆன் மத்ரஸாவாக நடத்தி வரப்பட்ட இடம் தற்போது தொழுகைக்காக பயன்படுத்தப்படுவதாக பௌத்த பிக்கு ஒருவர் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார். அது தொடர்பிலான விசாரணைகள் நடைபெற்று வருகின்றன. என பொலிஸ் பேச்சாளர் சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் அஜித் ரோகண தெரிவித்துள்ளார். (த-10)

# உள்ளூர் உற்பத்தியை மேம்படுத்த நாம் தயாராகவே இருக்கிறோம்

## வடக்கு வர்த்தக அமைச்சர் கருத்து



யாழ்ப்பாணம், டிசெ. 20

சிறு தொழில் முயற்சிகளை ஊக்குவிப்பதன் மூலம் எமது பிரதேசத்தின் தொழில் துறையில் பெரும் மாற்றத்தைக் கொண்டு வர முடியும். தொழில் முயற்சிகளுக்கு நாங்கள் உதவத் தயாராக இருக்கிறோம் என வடக்கு மாகாண மீன் பிடி போக்குவரத்து வர்த்தக அமைச்சர் பா.டெனீஸ்வரன் தெரிவித்தார்.

யாழ். வணிகர் கழகத்தின் ஏற்பாட்டில் வங்கி அதிகாரிகள் - வர்த்தகர்களுடனான சந்திப்பு நேற்று வியாழக்கிழமை யாழ் வணிகர் கழகத்தில் சங்கத் தலைவர் எஸ். ஜெயசேகரம் தலைமையில் நடைபெற்றது. இதில் கலந்து உரையாற்றும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

தென்பகுதியில் இருந்து வரும் வர்த்தகர்களால் இங்குள்ள வர்த்தகர்கள் பெரும் பிரச்சினைகளை எதிர் கொள்கின்றனர். ஆனாலும் தென்பகுதி வியாபாரிகளை சட்ட ரீதியாகத் தடை செய்ய முடியாது. அடிப்படை உரிமைகளை மீற முடியாது.

இவ்வாறான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு விரைவில் நியதிச் சட்டத்தை உருவாக்க சட்டத்தரணிகள் கொண்ட குழு அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

இன்று தென் பகுதியில் இருந்து வரும் வியாபாரிகளிடம் பொருள்களை மக்கள் கொள்வனவு செய்வதால் உள்ளூர் வியாபாரிகள் பெரும் நட்டத்தை எதிர் கொள்ள வேண்டியுள்ளதாகத் தெரிவிக்கின்றனர். தரமான பொருள்களை எமது பிரதேசத்தில் உற்பத்தி செய்தால் இந்த நிலை ஏற்படாது. வணிகர் கழகம் இது குறித்து கவனம் செலுத்த வேண்டும் காங்கேசன் துறை துறைமுகம், பலாலி விமான நிலையம் தொடர்பாக ஏற்கனவே கலந்துரையாடப்பட்டுள்ளது. காங்கேசன்துறை துறைமுகம் ஊடாக இந்தியாவில் இருந்து பொருள்களைக் கொண்டு வர நடவடிக்கை எடுக்க வேண்டும். இதன் மூலமும் எமது பகுதி வர்த்தக நடவடிக்கைகளை மேம்படுத்த முடியும்.

நிதி நிறுவனங்களில் கடன் பெறுபவர்கள் நன்றாகச் சிந்தித்தே கடன் பெற வேண்டும். அதே போல கடன் வழங்குபவர்களும் கடன் பெறுபவர்கள் குறித்து கண்காணிப்புடன் இருத்தல் வேண்டும். பனம் பொருள் தொடர்பாக கவனம் எடுக்கும் பட்சத்தில் அது பயனுள்ளதாக இருக்கும். போரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வணிகர் கழகம் பல தரப்பட்ட உதவிகளை வழங்கியுள்ளது. இயற்கை அனர்த்தங்கள் மற்றும் சவால்களைத் தாண்டி எமது அபிவிருத்தியை முன்னெடுக்க வேண்டிய அதே சமயம் எமது உரிமைகளையும் வென்றெடுக்க வேண்டியுள்ளது என்றார். (ஐ-7)

# பருத்த உடல் பெண்களை இலகுவில் நோய் தாக்கும்

*சுகவாழ்வுக் கிளினிக்கில் பரிசோதனை மேற்கொள்ளுமாறு மருத்துவர் சங்கம் அறிவுறுத்து*

தென்மராட்சி, டிசெ.20

உடல் பருத்த பெண்களை நோய்கள் இலகுவில் தாக்கக் கூடிய நிலைமை காணப்படுவதால் அத்தகையோர் அருகில் உள்ள மருத்துவமனையில் நடத்தப்படும் பெண்களுக்கான சுகவாழ்வுக் கிளினிக்கில் பரிசோதனைகளை மேற்கொள்ளுமாறு அரச மருத்துவர் சங் கத்தின் மாதாந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

"உடல் பருப்பதால் பெண்களுக்கு ஏற்படும் பாதிப்புகள்" என்னும் தலைப்பில் வெளியிடப்பட்ட அறிக்கையில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

உடல் பருத்த பெண்களுக்கு நீரிழிவு, இருதய அடைப்பு, நாரிப்பாதிப்பு, முழங்கால் பாதிப்பு, கர்ப்பம் தரிப்பு வீதம் குறைவு போன்றவை ஏற்பட வாய்ப்பு உள்ளன.

உடல் பருத்த பெண்களுக்கு கர்ப்பம் ஏற்பட்டால் கர்ப்ப காலத்தில் பிறப்புறுப்பில் நோய்கள், நீரிழிவு, இரத்த அமுக்கம் போன்றவை ஏற்பட்டு சுகப் பிரசவம் இடம்பெறாத நிலை ஏற்படும்.

அத்துடன் உடல் பருமனான பெண்களுக்கு கர்ப்பப்புற்று, கர்ப்பவாசல் புற்று, மார்புப் புற்று, சூலகப்புற்று நோய் ஏற்பட வாய்ப்பு உண்டு.

கர்ப்ப காலத்தில் தாய்க்கும் பிள்ளைக்கும் பாதிப்பு ஏற்பட வாய்ப்புள்ளதுடன் பால் சுரக்கும் அளவு குறைவு, பாலூட்டும் காலம் குறைவு ஆகியவற்றால் இடம்பெறும்.

எனவே உடல் பருமனால் பெண்களுக்கு ஏற்படும் எதிர் விளைவுகளைத் தடுக்க அருகில் உள்ள மருத்துவமனையில் நடைபெறும் சுகவாழ்வுக் கிளினிக்கில் உடற் பரிசோதனைகளை மேற்கொள்ளுமாறும் குறிப்பிடப்பட்டுள்ளது. (வ-9)

# சைக்கிளை கைவிட்டு தப்பியோடிய திருடன்

யாழ்ப்பாணம், டிசெ.20

கிராம அலுவலர் வீட்டில் இரும்புக் குழாயைத் திருடிச் செல்ல வந்த திருடன் தமது சைக்கிளையும் கைவிட்டு ஓடித் தப்பினார். குருநகர் பகுதியில் இல ஜே/71 கிராம அலுவலரது வீட்டிலேயே மேற்படி திருட்டு முயற்சி இடம் பெற்றது.


சம்பவம் குறித்துக் கூறப்படுவதாவது:-

செவ்வாய்க்கிழமை நள்ளிரவு 1.30 மணியளவில் வீட்டில் உள்ளவர்கள் உறக்கத்தில் இருந்தவேளை அங்கிருந்த இரும்புக் குழாயைத் திருடும் நோக்கில் வீட்டு வளவினுள் நுழைந்த திருடன் அடுக்கி வைக்கப்பட்டிருந்த குழாய்களில் சிலவற்றை இழுத்தெடுத்த வேளை ஏற்பட்ட சத்தத்தில் விழித்துக் கொண்டனர் வீட்டுக்காரர். திருடனைப் பிடிக்கத் துரத்திக் கொண்டு ஓடியதில், திருடன் தான் கொண்டு வந்த சைக்கிளையும் கைவிட்டுத் தப்பிச் சென்றுள்ளான்.

இது தொடர்பாக உடனடியாகவே பொலிஸாருடன் தொடர்பு கொண்டதை அடுத்து சம்பவம் நடைபெற்ற கிராம அலுவலரது வீட்டுக்குப் பொலிஸார் விரைந்த போதும் திருடனைப் பிடிக்க முடியவில்லை.

எனவே சம்பவம் குறித்து விசாரணைகளை மேற்கொண்டதுடன் திருடனால் கைவிடப்பட்ட சைக்கிளையும் பொலிஸார் எடுத்துச்சென்றுள்ளனர். (வ-7)

# மது விற்பனை நிலையத்தை அகற்றக்கோரி பேரணி



மன்னார், டிசெ.20

மன்னார் பெரியகடை கிராமத்தில் மக்கள் குடியிருப்புக்கு அருகில் தனியார் ஒருவருடைய வீட்டில் தற்போது அமைக்கப்பட்டு வரும் மது விற்பனை நிலையத்தை உடனடியாக அகற்றக்கோரி பெரியகடை மாதர் கிராம அபிவிருத்திச் சங்கமும், பெரிய கடை கிராம மக்களும் இணைந்து நேற்று வியாழக்கிழமை முற்பகல் 10 மணியளவில் எதிர்ப்புப் பேரணி ஒன்றை மேற்கொண்டனர்.

மன்னார் பெரியகடை உப்பள பிரதான வீதியில் ஒன்று கூடிய கிராம மக்கள் குறித்த மது விற்பனை நிலையத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து பேரணி ஒன்றை ஆரம்பித்து பெரிய கடைப் பகுதியில் அமைக்கப்பட்டு வரும் மது விற்பனை நிலையத்தினூடாக ஊர்வலமாக மன்னார் நகர சபையைச் சென்றடைந்தனர்.

மன்னார் பெரியகடை கிராமத்தில் மக்கள் குடியிருக்கும் பகுதியில் தனியார் வீடு ஒன்றில் மது விற்பனை நிலையம் ஒன்று அமைக்கப்பட்டு வருகின்றது.

பெரியகடை கிராமம் பிரதான இடத்தில் அமைந்துள்ளது. இந்தக் கிராமத்தைச் சேர்ந்த எவரும் குறித்த மதுபான சாலையை அமைக்க ஆதரவு வழங்கவில்லை.

நீர் வடிகாலமைப்பு மற்றும் சமுர்த்தி உதவித்திட்டம் ஆகியவற்றுக்கு கிராம மக்களிடம் பெற்றுக்கொள்ளப்பட்ட கையொப்பங்களை தவறான முறையில் பயன்படுத்தி இந்தக் கிராம மக்களும் ஆதரவு வழங்குவதாகத் தெரிவித்து குறித்த மது விற்பனை நிலையத்தை அமைத்து வருகின்றனர்.

இந்த இடத்தில் அமைப்பது மது விற்பனை நிலையம் என்று ஒரு சில வாரங்களுக்கு முன்புதான் கிராம மக்களுக்குத் தெரிய வந்தது. இந்த நிலையிலே கிராம மக்கள் அனைவரும் இணைந்து எதிர்ப்புப் பேரணியில் ஈடுபட்டோம் என அந்த மக்கள் தெரிவித்தனர்.

அதனைத் தொடர்ந்து மன்னார் நகர சபையின் தலைவர் எஸ்.ஞானப்பிரகாசம், உப தலைவர் ஜேம்ஸ் ஜேசுதாஸ், நகர சபை உறுப்பினர் என்.நகுசீன் ஆகியோரிடம் மனுவை கையளித்தனர். தொடர்ந்து மக்கள் பேரணியாகச் சென்று மன்னார் பிரதேச செயலக அதிகாரிகளிடமும் தமது மனுவைக் கையளித்தனர்.

இதன் போது மன்னார் மறைமாவட்ட ஆயர் இராயப்பு ஜோசேப்பு ஆண்டகை, மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் அருட்தந்தை இம்மானுவேல் செபமாலை, உட்பட அந்தக் கிராமத்தைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான மக்களும் கலந்து கொண்டனர். (வ-12)

## பயிற்சி முடித்து வெளியேறினர் 242 தமிழ் பொலிஸார்

யாழ்ப்பாணம், டிசெ. 20

242 தமிழ்ப் பொலிஸார் கடந்த செவ்வாய்க்கிழமை தமது ஒரு வருடகாலப் பயிற்சிகளை முடித்து வெளியேறியுள்ளனர். அவர்கள் வடக்கு - கிழக்கிலுள்ள பொலிஸ் நிலையங்களில் கடமையாற்றவுள்ளனர்.

பொலிஸ்மா அதிபர் என். கே. இலங்கக்கோன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில், அவர்கள் பயிற்சி முடித்து வெளியேறியமைக்கான சான்றிதழ்கள் வழங்கப்பட்டு சேவையில் இணைத்துக்கொள்ளப்பட்டனர். இந்த நிகழ்வில் 233 பொலிஸ் வாகனச் சாரதிகளும் பயிற்சிகளை முடித்து வெளியேறியுள்ளனர்.

2008 ஆம் ஆண்டுக்குப் பின்னர் இதுவரையில் 892 தமிழ் பொலிஸார் சேவையில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது (வ-5)

## வர்த்தகர்களுக்கு அபராதம்

தென்மராட்சி, டிசெ.20

வர்த்தக நிலையத்தில் திகதி காலாவதியான பொருள்களை விற்பனைக்கு வைத்திருந்த நான்கு வர்த்தகர்களுக்கு நேற்று சாவகச்சேரி நீதிமன்றில் அபராதம் விதிக்கப்பட்டது.

யாழ்.மாவட்டச் செயலக பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையால் நடத்தப்பட்ட திடீர் பரிசோதனையின் போது அகப்பட்ட தென்மராட்சி பிரதேச வர்த்தகர்களுக்கு எதிராக சாவகச்சேரி நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

வழக்குகள் நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது வர்த்தகர்கள் குற்றத்தை ஒப்புக்கொண்டதை அடுத்து இருவருக்கு தலா 10 ஆயிரம் ரூபாவும் இருவருக்கு தலா 3 ஆயிரம் ரூபாவும் அபராதம் விதிக்கப்பட்டது. (வ-9)

# சாரதி வெற்றிடங்களை நிரப்புவதில் வடமாகாண சபையில் முறைகேடுகள்

*உடனடி நடவடிக்கை எடுக்குமாறு முதலமைச்சருக்குக் கடிதம்*

வட மாகாணசபையின் நிர்வாகத்தின் கீழ் உள்ள திணைக்களங்களில் நிலவும் சாரதிகளுக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்கு எடுக்கப்பட்ட முயற்சியில் முறைகேடுகள் காணப்படுவதாகவும் இது தொடர்பில் உடனடியாக நடவடிக்கை எடுக் குமாறும் வடமாகாண சபை உறுப்பினர் வைத்திய கலாநிதி சி.சிவமோகன் வட மாகாண முதலமைச்சருக்கு அவசர கடிதம் ஒன்றை எழுதியுள்ளார்.

அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

வட மாகாணசபை நிர்வாகத்தின் கீழ் உள்ள திணைக்களங்களில் நிலவும் சாரதி வெற்றிடங்களை நிரப்புவதற்காக வடமாகாணசபைத் தேர்தல் நடைபெறுவதற்கு முன்னர் அவசர அவசரமாக சாரதிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டு போட்டிப் பரீட்சை ஒன்றும் நடத்தப்பட்டது. இருந்தும் சாரதிகளை இந்தப் போட்டிப் பரீட்சை மூலம் தேர்ந்தெடுப்பதில் பல பிரச்சினைகள் தோன்றியதன் காரணமாக மாகாண சபைத் தேர்தலுக்கு முன்பாக நேர்முகத் தேர்வு நடத்தி ஆட்சேர்ப்பு செய்ய முடியாத நிலையில் ஆளுநரின் கீழ் இயங்கிய வட மாகாண நிர்வாகம் இருந்ததாக நான் அறிகிறேன்.

தற்போது போட்டிப் பரீட்சைக்கான புள்ளிகள் வழங்கப்பட்டு உரியவர்களுக்கு அனுப்பப்பட்ட நிலையில் அதற்கான நேர்முகப் பரீட்சையை இந்த மாதம் நடத்துவதற்கு பிரதிப் பிரதம செயலாளர் நடவடிக்கை எடுத்துள்ளதுடன் நியமனத்தையும் வழங்குவதற்கும் தயாராகி வருவதாக அறிய முடிகின்றது.

தற்போதைய போட்டிப் பரீட்சையில் இரண்டு பாடங்களிலும் 170 புள்ளிகளுக்கு மேல் பெற்றவர்கள் மட்டுமே நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட விருப்பதாகவும், அவர்களுக்கே நியமனம் வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருவதாகவும் தகவல்கள் கிடைத்துள்ளன.

போட்டிப் பரீட்சையில் 170 புள்ளிகளுக்கு மேல் எடுத்தவர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படும் போது ஏற்கனவே ஒப்பந்த அடிப்படையில் பல ஆண்டுகள் பணியாற்றிக் கொண்டிருப்பவர்களின் சேவை முடிவுறுத்தப்பட வேண்டிய ஒரு பரிதாபகரமான நிலை ஏற்படும் என்பதைத் தங்களின் கவனத்துக்குகொண்டு வருகின்றேன்.

ஆகவே, பின்வரும் விடயங்களை தாங்கள் மாகாணத்தின் முதலமைச்சர் என்ற வகையிலும் மாகாணத்தின் நிதி அமைச்சர் என்ற வகையிலும் மாகாண பொது நிர்வாகம் தங்கள் முழுக்கட்டுப்பாட்டில் இருக்கின்றது என்ற வகையிலும் தாங்களுக்கு முன்வைக்கிறேன்.

பிரதிப் பிரதம செயலாளரால் நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ள நேர்முகப் பரீட்சையைத் தற்காலிகமாக இடைநிறுத்த வேண்டும். அமைய அடிப்படையிலும் ஒப்பந்த அடிப்படையிலும் நீண்டகாலமாக சாரதிகளுக்கான சகல தகைமைகளுடனும் பணியாற்றுபவர் களுக்கு நிரந்தர நியமனம் வழங்கி உறுதி யான தீர்வைக் காண வேண்டும். சாரதிகள் பற்றாக்குறை காரணமாக சிற்றூழியர் தரத்தில் இருந்து கொண்டு தற்காலிக சாரதிகளாக பணியாற்றுபவர்களை இனங்கண்டு நிரந்தர சாரதி களாக நியமனம் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண் டும். மேற்படி சேவையாற்று பவர்களின் நிரந்தர நியமனம் இறுதியாக்கப்பட்ட பின் மிகுதி யாகவுள்ள வெற்றிடங்களுக்கு போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்தவர்களை நியமிப்பது நன்று.

எமது திணைக்களங்களின் வேலைத்திட்டங்களை நிறைவேற்றுவதற்காக நீண்டகாலமாக உழைத்து வரும் அமைய, தற்காலிக மற்றும் ஒப்பந்த அடிப்படையிலான சாரதிகளின் நலன்கள் தங்களால் பாதுகாக்கப்படவேண்டும் என்ற நோக்கிலேயே மேற்படி யோசனைகளை முன்வைத்துள்ளேன் - எனவும் அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-402)

# மீன்பிடி அமைச்சருடன் போதகர்கள் சந்திப்பு



மன்னார், டிசெ.20

மன்னார் மாவட்ட போதகர்களுக்கும், வடக்கு மாகாண மீன்பிடி, போக்குவரத்து, வர்த்தக, வாணிபம் மற்றும் கிராம அபிவிருத்தி அமைச்சர் பா.டெனீஸ்வரனுக்கும் இடையில் விசேட சந்திப்பொன்று திங்கட்கிழமை மாலை மன்னார் சாந்திபுரத்தில் அமைந்துள்ள மகிமையின் ஆலயத்தில் இடம்பெற்றது.

இதன்போது தங்களது பிரச்சினைகள் தொடர்பாக போதகர்கள் தமது கருத்துக்களை அமைச்சரிடம் முன்வைத்தனர். இதன்போது அமைச்சர் தமது உரையில்; மதங்களினூடாக மக்களை சமாதானமாக வாழ வைக்க வேண்டும்.

நிலையான அபிவிருத்தியை நான் மக்களுக்கு வழங்குவேன், வெகு விரைவில் சர்வ மத அமைப்பை மீளக்கட்டி அமைக்கவேண்டும். அதனூடாக அனைத்து மதங்களைச் சார்ந்தவர்களும் ஒற்றுமையாக வாழும் நிலை நிச்சயமாக உருவாகும் என்று தெரிவித்தார். அமைச்சர் டெனீஸ்வரன் பொறுப்புக்களை ஏற்றுக் கொண்ட பின்னர் மன்னாரிலுள்ள சகல அமைப்பினரையும் சந்தித்து அங்கு நில வும் பிரச்சினைகள் தொடர்பாகக் கலந்துரையாடி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (க-12)

# களை நாசினிகளுக்கு கட்டுப்படாத களைகள்

முல்லைத்தீவு, டிசெ.20

முல்லைத்தீவு நெல் வயல்களில் களை நாசினிகளுக்கும் கட்டுப்படாத நிலையில் சில வகைக் களைகள் வளர்ந்து காணப் படுவதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

இந்த வருட கால போக நெற் செய்கையில் களைகள் வயல் நிலங்களில் அதிகமாகக் காணப் படுகின்றன. அவற்றை அழிப்பதற்கான களை நாசினிகளுக்குஅதிகளவுபணத்தைச்செலவிட வேண்டியுள்ளதாக விவசாயிகள் தெரிவிக்கின் றனர்.

நெற் சப்பி, கோழிச்சூடான், சேறுபடாச் செல்வன், கோரை வகைகள் எனப் பல்வேறு வகைக் களைகள் நெற் பயிர்களுடன் போட்டி போட்டுக் கொண்டு வளர்ந்துள்ளன.

ஒவ்வொரு வகைக் களைக்கும் அதற்கேற்ற களை நாசினியை விசிற வேண்டியுள்ளது. இந்தக் களை நாசினிகள் ஒவ்வொன்றையும் கொள்வனவு செய்வதற்கு அதிக பணத்தைச் செலவிட வேண்டியுள்ளது. ஆனால் அவையும் உரிய பயன்களைத் தருவதில்லை. இதனால் ஏக்கர் ஒன்றுக்கு சுமார் 6,000 ரூபா தொடக்கம் 7,000 ரூபா வரையும் செலவழித்தும் பயன் கிடைக்க வில்லையென விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

மேலும் சேறுபடாச் செல்வன் களையை களை நாசினி எவற்றாலும் கட்டுப்படுத்த முடியவில்லை எனவும்- விவசாயிகள் தெரிவிக்கின்றனர். (க-500)

# வடக்கு மாகாண அபிவிருத்தியை பாதிக்க திட்டமிட்ட செயற்பாடு

## *மதுசாரம், சிகரெட் சார்ந்த நிறுவனங்கள் செயற்படுவதாக ஹெல்த்தி லங்கா நிறுவன இணைப்பாளர் தெரிவிப்பு*

யாழ்ப்பாணம், டிசெ.20

வடக்கு மாகாணத்தில் திட்டமிட்ட வகையில் பெரியளவில் அபிவிருத்தியில் பின்னடைவை ஏற்படுத்தும் நோக்குடன் மதுசாரம், சிகரெட் சார்ந்த நிறுவனங்கள் தமக்கான சந்தை வாய்ப்பைப் பெற்றுள்ளன. இதன் விளைவு எதிர்காலத்தில் வடக்கில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும். எனவே இதனை ஆரம்பத்திலேயே தடுத்து நிறுத்துவதற்கான நடவடிக்கைகளை நாம் மேற்கொள்ள வேண்டும் என்று ஹெல்த்தி லங்கா நிறுவனத்தின் இணைப்பாளர் தெய்வேந்திரம் உதயரூபன் தெரிவித்தார்.

ஹெல்த்தி லங்கா மதுசாரத்துக்கு எதிரான தமிழ் இளைஞர் அணியின் வருடாந்த மாநாடு நேற்று முன்தினம் யாழ்.நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் அவர் தொடர்ந்து உரை நிகழ்த்தும் போது:-

வடக்கில் போர் முடிவடைந்து மக்கள் அபிவிருத்தியை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றனர். அவர்களுடைய வாழ்வியல் வளர்ச்சிக்காகப் பாடுபட்டுக் கொண்டிருக்கின்றனர். அவ்வாறு இருக்கையில் தமிழ் மக்களுடையவாழ்வியல்வளர்ச்சிக்குத் தடையாக மது சாரம், சிகரெட் பாவனை உள் ளது.

ஏனெனில் வடக்கை நோக்கி வந்த நிறுவனங்களில் அதிகம் மதுசாரம் சிகரெட் சார்ந்த கம்பனிகள் என்பது குறிப்பிடத்தக்கது. தென்னிலங்கைப் பகுதியில் மதுசாரம் சிக ரெட் பாவனை குறைகின்ற போது வடக்கு, கிழக்கில் சந்தை வாய்ப்பை குறித்த நிறுவனங்கள் பெற்றுள்ளன. தென்னிலங்கையில் ஏற்பட்டுள்ள வீழ்ச்சியை வடக்கு, கிழக்கில் அவர்கள் இலாபமாகப் பெற்றுள் ளனர்.

திட்டமிட்ட வகையில் சமூகத்தில் பெரிய பின்னடைவை ஏற்படுத்துவதற்காக இத்தகைய நிறுவனங்கள் முயல்கின்றன. எதிர்காலத்தில் இதனால் ஏற்படக்கூடிய விளைவுகளைத் தடுக்க இளைஞர்கள் ஒன்றிணைந்து இந்த விழிப்புணர்வு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். இது குறித்து தவறான சமூகத்தின் பிழையான எண்ணங்களைத் தளர்த்தி மாற்றத்தை ஏற்படுத்தஒன்றிணைந்து செயற்படுவோம்- என்றார். (வ-14)

# வவுனியா பொது நூலகத்தில் போதிய நூல்கள் இல்லை

## *விசனம் தெரிவிக்கின்றனர் வாசகர்கள்*



வவுனியா, டிசெ.20

வவுனியா நகரசபை பொது நூலகத்தில் போதிய நூல்கள் இல்லையென வாசகர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

வவுனியாவிலுள்ள பெரும்பாலான வாசகர்கள் வவுனியா நகரசபை பொதுநூலகத்துக்கு வருகை தருகின்றனர். வாசகர்களுக்கென பல்வேறு வசதிகள் இங்கு ஏற்படுத்தப்பட்டுள்ளன. ஆனால் பழைய தமிழ் நூல்கள், வரலாற்று நூல்கள், இளம் படைப்பாளிகளால் வெளியிடப்படும் அண்மைக்கால நூல்கள் என்பன இங்கு காணப்படவில்லையென வாசகர்கள் தெரிவிக்கின்றனர்.

தேசிய ரீதியில் இரண்டாவது சிறந்த நூலகமாக இந்த நூலகம் தேசிய ரீதியில் தெரிவு செய்யப்பட்ட தாக அறிய முடிகின்றது. ஆனால் சிறந்த பல நூல்களைக் கொள் வனவு செய்யாமல் இருப்பது வருத்தம் தருவதாகவும் வாச கர்கள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக இந்த நூலகத்தின் பிரதம நூலகரான திருமதி பாமினி உருச்சந்திரனிடம் தொடர்பு கொண்டு கேட்ட போது:

நகர சபைகளின் கீழ்வரும் நூலகங்களுக்கு இடையே தேசிய ரீதியில் நடத்தப்பட்ட போட்டியில் இந்த நூலகம் இரண்டாவது இடத்தைப் பெற்றுள்ளது.

மேலும் தேசிய நூலக ஆவணமாக்கல் சபையின் ஆலோசனைக்கு அமைவாக வாசகர்களால் அதிகளவில் பயன்படுத்தப்படாத பழைய புத்தகங்கள் ஒதுக்கித் தள்ளி வைக்கப்பட்டுள்ளன.

புதிய நூல்கள் கொள்வனவு செய்வதற்கென வவுனியா நகரசபை ஆண்டுதோறும் 3 லட்சம் ரூபாவை ஒதுக்கி வருகின்றது.

ஆனால் நூலகத்தில் போதிய இடவசதி இல்லாததும், நூல்களைக் கொள்வ னவு செய்வதில் ஏற்படும் சிரமங்களும் நூல்களின் கொள் வனவுக்குத் தடையாக உள் ளன.

தினமும் சுமார் 300 பேர் வரையில் இந்த நூலகத்தைப் பயன்படுத்துவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (க-402)

# மரண அறிவித்தல்

## ஆறுமுகம் வேதாபரணம்

மாதகலைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் தற்போது இந்தியாவில் வசித்தவருமாகிய ஆறுமுகம் வேதாபரணம் நேற்று (19.12.2013) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகம் மற்றும் இராசமணி தம்பதியரின் அன்புமகனும் காலஞ்சென்ற மகாதேவன், மதியாபரணம், சிவலட்சணம், சிவஅன்பு, வேலழகி ஆகியோரின் அன்புச்சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை நிகழ்வு இன்று (20.12.2013) வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியளவில் இந்தியாவின் சேலத்தில் நடைபெறும். இவரது துக்க அனுஸ்டிப்பு அன்னாரின் சகோதரராகிய ஆறுமுகம் - சிவலட்சணம் அவர்களின் நாச்சிமார் கோயிலடி, சுதுமலை வடக்கு மானிப்பாயில் உள்ள இல்லத்தில் நடை பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நாச்சிமார் கோயிலடி,
சுதுமலை வடக்கு, மானிப்பாய்.

தகவல்:
சகோதரர்கள்

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் ★ 14 ★ 09 ★ 1943



மறைவு ★ 20 ★ 12 ★ 2012

## அமரர் எலியாஸ் மரியநாயகம்

*ஆண்டுகள் ஒன்று சென்றாலும்*
*ஆறவில்லை உங்கள் நினைவுகள்*
*என்றும் எம்மை*
*விட்டகலாத தெய்வமே!*
*உங்கள் ஆத்மா சாந்தியடைய*
*இறைவனை வேண்டுகின்றோம்.*

என்றும் உங்கள் நினைவுகளுடன்
குடும்பத்தினர், மைத்துனர்கள்.

(42784)(10.14)

# ஜனாதிபதியிடம் மீண்டும் பேறறிவாளன் கருணை மனு



டில்லி, டிசெ.20

இந்தியாவின் முன்னாள் பிர தமர் ராஜீவ் காந்தி படு கொலையில் விதிக்கப்பட்ட தூக்குத் தண்டனையை ரத்துச் செய்யக் கோரி பேரறிவாளன், இந்திய ஜனாதிபதியிடம் மீண்டும் கருணை மனு அளித் துள்ளார்.

உச்ச நீதிமன்ற வழக்கறிஞர்கள் நா.ராஜாராமன், இரா.கிருஷ்ணமூர்த்தி மற்றும் துரைச் செல்வன் ஆகியோரே ஜனாதிபதி அலுவலகத்தில் இந்தக் கருணை மனுவைக் கையளித்துள்ளனர்.

அதில், ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட பேரறிவாளனின் வாக்குமூலம் திருத்தப் பட்டது என்று விசாரணை அதிகாரியான தியாகராஜன் அண்மையில் கூறியிருக்கிறார். இதனைக் கருத்தில் கொண்டு ஏற்கனவே நிராகரிக் கப்பட்டிருக்கும் தனது கருணை மனுவின் மீது மறுபரி சீலனை மேற் கொண்டு தமக்கு விதிக்கப்பட்ட தூக்குத் தண்டனையை நீக்க வேண்டும் என்று கூறப்பட் டுள்ளது. (வ)

**பாதுகாப்பு உத்தியோகத்தர் வெற்றிடம்**

நேர்முகத்தேர்வு - 20.12.2013
நேரம் - 2.30 PM வயதெல்லை 50 இற்குள்
இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம்.
இல. 56, 2 ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.
(யாழ். மத்திய கல்லூரியை அண்மித்ததாக)

# நாளைய உதயனில்

இவ்வருடம் (2013) சாதாரணதர பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்குரிய உயர்தர கற்றல் வழிகாட்டலுக்கான இலவச விண்ணப்பப்படிவம் நாளைய உதயனுடன் வெளிவரும்.

# கண்ணீர் அஞ்சலி

எமது அரசடி விநாயகர் ஆலயத்தின் முன்னாள் பிரதம குருவான **சிவஸ்ரீ சந்திரா ஸ்ரீபதிக்குருக்கள்** அவர்களின் அன்புத்தாயார்.

## திருமதி ஈஸ்வரிஅம்மா சந்திரா

அவர்களின் பிரிவால் துயரடைந்துள்ள அன்னாரின் குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்கு கொள்வதுடன் அன்னாரின் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆலய பரிபாலனசபையினரும்,
ஆலயக்குருக்களும்.

அரசடி விநாயகர்ஆலயம்,
மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

# மரண அறிவித்தல்



## நாகர் மாணிக்கம்

ஊரெழு மேற்கைப்பிறப்பிடமாகவும், சோதி வேம்படி வீதி, மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட நாகர் மாணிக்கம் நேற்று (19.12.2013) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகர் - நாகி தம்பதியரின் மகனும் காலஞ்சென்றவர்களான சின்னக்குட்டி - செல்வி தம்பதியரின் மருமகனும் நாகேஸ்வரியின் அன்புக்கணவரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.12.2013) வெள்ளிக்கிழமை பி.ப. 1 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சோதிவேம்படி வீதி,மானிப்பாய்.

தகவல்:
குடும்பத்தினர்.

உதயன்
20/12/2013



# குமுதினி நினைவு மண்டபம் புதிய முறையில் அமைக்கப்படும்

*நெடுந்தீவு பிரதேச சபைச் செயலாளர் தெரிவிப்பு*

நெடுந்தீவு துறைமுகப் பகுதியில் அமைந்துள்ள குமுதினி படுகொலை நினைவு மண்டபம், இறந்து போன எமது உறவுகளின் பெயர் விவரங்களைக் கொண்டதாக புதிய முறையில் அமைக் கப்படவுள்ளன என்று நெடுந்தீவு பிரதேச சபையின் செயலாளர் எஸ்.தம்பிராசா தெரிவித்தார்.

நெடுந்தீவின் அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல் செவ்வாய்க்கிழமை பிரதேச சபை மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கை யில் ;

குமுதினி நினைவு மண்டபம் பிரதேச சபையால் தகர்க்கப்பட்டுவிட்டதாக தவறான செய்திகள் வெளியாகியிருந்தன. குறிப்பிட்ட மண்டபம் வசதி குறைந்ததாகவும் வெளியில் இருந்து வருவோர் தங்கி உணவுண்ணும் இடமாகவும் காணப்பட்டது.

நினைவாலயம் ஒன்று இவ்வாறு பயன்படுத்தப்படுவதும், அதனால் மாசடைவதும் ஏற்கக் கூடியதல்ல. மண்டபத்தை சிறப்பான முறையில் அமைக்க வேண்டும் என்ற யோசனைக்கு ஏற்கனவே பிரதேச சபை உறுப்பினர்கள் ஒப்புதல் அளித்திருந் தனர். அதற்கமைய புதிய மண்டபத்தை அமைப்பதற்கா கவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது.

புதிய மண்டபம் அமைக்கப்பட்டு குமுதினி நினைவுச் சதுக்கம் என்றபெயர்வளைவும் அமைக் கப்படும். படகில் இருந்து கொண்டே அதனைக் காணக் கூடியதாக அதன் புனரமைப்புப் பணிகள் இடம்பெறும். அண்மித்தாக உள்ள பிரதேச சபையின் விற்பனைக் கூடத்தில் நெடுந்தீவில் உற்பத்தியாகும் பனம் பொருள்கள் உட்பட உள்ளூர் உற்பத்திப் பொருள்கள் அனைத்தும் விற்பனைக்கு வைக்கப்படும். அதே வேளை தேநீர்தவிர்ந்தஏனைய உணவு வகைகள் அந்த விற் பனைக் கூடத்தில் விற்பனை செய்யப்பட மாட்டாது. குறித்த பகுதியைச் சுத்தமாக வும், புனிதமாகவும் பேண நடவடிக்கை எடுக்கப்படும். குமுதினி நினைவுச் சதுக்கப் புனரமைப்புக்கு ரூபா ஒரு லட்சம் ரூபா நிதி ஒதுக்கப் பட்டுள்ளது. எனினும் மேலதிகமாக நிதி தேவைப்படுவதால் பொது அமைப்புக்கள் இதற்கு உதவ வேண்டும்- என்று வேண்டு கோள்விடுத்துள்ளார். (வ-7)

# மாற்றுத் திறனாளி கல்வி கற்க உதவி

*மாகாணசபை உறுப்பினர் சயந்தன் முன்வந்தார்*

*தென்மராட்சி, டிசெ.20*

*பௌர்ணமி விழாவில் பாடலிசைத்து பார்வையாளர்களை பரவசப்படுத்திய பார்வையற்ற (மாற்றுத் திறனாளி) பத்து வயது மாணவியான கீர்த்தனா றெஜிறொபின்சனுக்கு விரும்பும் கலைத்துறையைக் கற்க தரம் 11 வகுப்பு வரை கல்விக்கான செலவைப் பொறுப் பெடுத்தார் வடமாகாணசபை உறுப்பினர் கேசவன் சயந்தன்.*

*தென்மராட்சி கல்வி வலயத்தின் மார்கழித் திங்கள் முழுநிலா நாள் கலைவிழா நிகழ்வில் கைதடி நவீல்ட் பாடசாலை மாணவி இன்னிசை விருந்தளித்தார்.*

*தனது இனிமையான குரல் வளத்தால் பார்வையாளர்களைக் கவர்ந்த மாணவி தொடர்ந்து தமது இசைத் திறனை விருத்தி செய்வதற்கு ஏற் படும் செலவை தரம் 11 வரை கற்கும் காலம் வரை பொறுப் பேற்பதாக மாகாண சபை உறுப்பினர் கே.சயந்தன் தனது சிறப்பு விருந்தினர் உரையில் தெரிவித்தார்.*


**"_"**

**விரும்பும் கலைத்துறையைக் கற்க தரம் 11 வகுப்பு வரை கல்விக்கான செலவைப் பொறுப் பெடுத்தார் வடமாகாண சபை உறுப்பினர் கேசவன் சயந்தன்.**

*தென்மராட்சி கல்வி வலயத்தால் நடத்தப்படும் முழுநிலா நாள் நிகழ்வுகளில் வலயத்துக்கு உட்பட்ட கைதடி நவீல்ட் பாட சாலையில் கற்கும் மாற் றுத் திறனாளிகள் பங்குபற் றுவது குறிப்பிடத்தக்கது. (வ-9)*

# மீன் சந்தையில் இடநெருக்கடி

*தரையிலிருந்து மீன் வியாபாரம்*



வலி.தென்மேற்கு.டிசெ.20

வியாபாரிகளின் நலன்கருதி வலி.தென்மேற்கு பிரதேச சபையால் பல இலட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட மீன் சந்தையில் ஏற்பட்டுள்ள இட நெருக் கடி காரணமாக வியாபாரிகள் மீண்டும் வெளியில் வைத்து மீன் வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளனர். இதனால் வெறிச்சோடிக் கிடக்கும் சந்தைக்கட்டடம் கட்டாக்காலிநாய் கள் படுத்து றங்கும் மண்டபமாக மாறியுள்ளது.

சந்தையின் நிலை குறித்துப் பிரதேசசபையின் மாதாந்தக் கூட்டத்தில் சுட்டிக்காட்டியுள்ள உறுப்பினர் எஸ். பரமகுரு வியாபாரிகளின் நலன் கருதி தகுந்த இடத்தில் இட வசதி யுடன் சந்தையை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு பதில் தவிசாளரைக் கோரியுள்ளார்.

காக்கைதீவு இறங்குதுறையிலுள்ள கூறு மண்டபத்தில் வைத்து மீன்வர்களிடமிருந்து கடலுணவைக் கொள்முதல் செய்யும் வியாபாரிகள் குறித்த மண்டபத்துக்கு அருகில் வெறுந் தரையில் வைத்து வியாபாரத்தில் ஈடுபட்டு வந்தனர்.

இதனால் ஏற்படும் சுகாதாரச் சீர்கேடுகுறித்துவலிதென்மேற்கு பிரதேச சபையின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டதை அடுத்து வியாபாரிகளினதும் பாவனையாளர்களினதும் நலன் கருதி கடற்கரையோரமாக கூறு விலை மண்டபத்துக்கு அருகில் பல இலட்சம் ரூபா செலவில் மீன் சந்தைக்கட்டடம் அமைக்கப்பட்டது.

வியாபாரிகளின் எண்ணிக்கைக்கு ஏற்றவாறும், பாவனையாளரின் வருகைக்கேற்றவாறும் சந்தைக் கட்டடம் அமைக் கப்படாததால் சில மாதங்களாகச் சந்தைக் கட்டடத்தைப் பயன் படுத்தி வந்த வியாபாரிகள் மீண்டும் கட்டடத்துக்கு வெளியில் தரையிலிருந்து வியாபாரம் செய்வதில் ஈடுபட்டுள்ளனர். சுகாதார விதிமுறைகளுக்கு முரணாக இவ்விதம் கடலுணவு விற்பனை செய்யப்படுவது குறித்துக் கவலை தெரிவித்துள்ள குறித்த உறுப்பினர் வியாபாரிகளுக்கும் பாவனையாளர்களுக்குமாகத் தகுந்த இடத்தில் சந்தைக் கட்டடத்தை அமைக்குமாறு கோரியுள்ளார். (வ-115)

# நல்லுண்ணி வீதியினை புனரமைக்க ஒத்துழைக்குக

*வலி.தென்மேற்கு பிரதேச சபை உறுப்பினர் வேண்டுகோள்*

யாழ்ப்பாணம், டிசெ.20

வலி.தென்மேற்கு · பிரதேச சபைக்குட்பட்ட பிரான்பற்று நல்லுண்ணி வீதி புறநெகும திட்டத்தில் மீள் புனரமைக் கப்படவுள்ளது. எனவே புனரமைப்பின் போது வீதி அகலிப்புக்கு அந்தப் பகுதி மக்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று குறித்த பிரதேச சபை உறுப்பினர் சி.மகேந்திரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

'புறநெகும' அபிவிருத்தி திட்டம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்;

புறநெகும திட்டத்தின் கீழ் வலி.தென்மேற்கில் 6 வீதிகள் மீள்புனரமைப்புச் செய்யப்படுகின்றன. இதில் பிரான்பற்று நல்லுண்ணிவீதி மீள்புனரமைப்புக்காக கற்கள் பறிக்கப்பட்டுள்ளன.

இந்த வீதி புனரமைப்பு நடைபெறும்முன்னர்வீதி அகலிப்புக்கு ஒத்துழைப்பு வழங்க மக்கள் முன்வரவேண்டும். பெரும்பாலான மக்கள் பூரண ஒத்துழைப்பு வழங்கி வருகின்றனர். அகலிப்புப் பணிகளுக்கு இது வரை ஒத்துழைப்பு வழங்காத ஏனையோரும் பூரண ஒத்துழைப்பை வழங்கினால் இந்தத் திட்டம் விரைவில் பூரண நன்மை தருவதாக அமையும்- என்றார். (வ-50)

**"_"**

**இந்த வீதி புனரமைப்பு நடை பெறும் முன்னர் வீதி அகலிப் புக்கு ஒத்துழைப்பு வழங்க மக்கள் முன்வரவேண்டும்.**

# மீள்குடியமர்வுக்கான நிதியில் குடியேற்ற நடவடிக்கைகள்

யாழ்ப்பாணம், டிசெ.20

யாழ்.மாவட்ட மக்களின் மீள்குடியமர்வுக்காகப் பயன்படுத் தப்பட வேண்டிய நிதியை குடியேற்ற நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தியமையைத் தொடர்ந்து ஒதுக்கீடு செய்யப் பட்டிருந்த ஒரு மில்லியன் ரூபா நிதியை மீள்குடியேற்ற அமைச்சு வேறு பகுதிக்கு மாற்றியுள்ளது.

வலி.வடக்கில் மூன்று கிராம சேவையாளர் பிரிவில் மக்களை குடியேற்றுவதற்காக முயற்சிகள் முன்னெடுக்கப் பட்டன. பலாலி கிழக்கு மற்றும் பலாலி வடக்கு ஆகிய இரு கிராம சேவையாளர் பிரிவுகளிலும், மற்றுமொரு பகுதி கோப்பாய் பிரதேச செயலர் பிரிவின் வளலாய் ஆகியவற்றிலுமே மக்களைக் குடியேற்றுவதற்கான முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டன.

இதற்காக மேற்குறித்த பகுதிகள் மற்றும் கீரிமலை- மாவிட்டபுரம் வீதியின் ஒரு பகுதியில் அமைந்திருந்த சிமெந்துத் தொழிற்சாலை காணியிலும் துப்புரவுப் பணிகள் மும்முரமாக முன்னெடுக்கப்பட்டன.

அதனையடுத்து அமைச்சின் மேலதிக செயலாளர்கள் யாழ்ப் பாணத்துக்கு வந்து கள நிலைமைகளை நேரடியாக அவதானித்தனர். இதன்போது மக்களை அவர்களது சொந்த இடங்களில் மீள்குடியமர்த் தாமல் வேறு இடங்களில் குடியேற்றுவதற் காகவே இந்த நடவடிக்கைகள் முன்னெடுக் கப்பட்டுவருவது தெரிய வந்தது.

அதனைத் தொடர்ந்து மக்களின் மீள்குடியமர்வு நடவடிக்கைகளுக்கு மட்டுமே மீள்குடியேற்ற அமைச்சால் நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என்று தெரிவிக்கப்பட்டு அந்த நிதி வளலாய் பிரதேசத்துக் மாற்றப் பட்டுள்ளது. இந்தவிடயம்தொடர்பில் யாழ். மாவட்ட அரச அதிபரைநேற்றுமுன்தினம்தொடர்பு கொள்ள முயன்ற போதும் அது பயனளிக்கவில்லை. (வ-5)



# நரம்பியல் கிளினிக்

*சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில்*



சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் யாழ்.போதனா வைத்தியசாலை நரம்பியல் நிபுணர் திவாகரனின் நரம்பியல் கிளினிக் எதிர்வரும் 27 ஆம் திகதி காலை 8 மணிக்கு நடைபெறும் என்று அறிவிக் கப்பட்டுள்ளது.

இந்தக் கிளினிக் மாதாந்தம் இரண்டாவது, நான்காவது புதன்கிழமைகளில் மருத்துவமனைக் கிளினிக் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

நரம்பியல் கிளினிக்கில் கலந்து கொண்டு பயன்பெறவிரும்பும் பொது மக்கள், மருத்து வமனை பொது வைத்தியநிபுணர்அல்லது வைத் திய அதிகாரிகளின் பரிந் துரையுடன் நரம்பியல் சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெறலாம் என்று அறிவிக்கப்பட் டுள்ளது. (வ-9)

# கண் கிளினிக் நடைபெறாததால் ஏமாற்றத்துடன் திரும்பிய நோயாளர்

*சாவகச்சேரி வைத்தியசாலையில் புதனன்று*

யாழ்ப்பாணம், டிசெ. 20

சாவகச்சேரி வைத்தியசாலையில் கண் சிகிச்சை பெற வந்த 50இற்கும் மேற்பட்டவர்கள் நீண்ட நேரம் காத்திருந்ததன் பின்னர் சிகிச்சை நடைபெறாது என அறிவிக்கப்பட்டதால் பெரும் ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றனர்.

யாழ்.போதனா வைத்தியசாலை கண் சிகிச்சை நிபுணர் திருமதி ம. சரவணமுத்து பிரதி புதன்கிழமை தோறும் சாவகச்சேரி வைத்தியசாலையில் கண் சிகிச்சை வழங்குவார் என அறிவிக்கப்பட்ட நிலையிலேயே தாம் தூர இடங்களில் இருந்து பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் வைத்தியசாலைக்கு வந்ததாக பாதிக்கப் பட்டவர்கள் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் காலை 7 மணியள வில் இருந்து முழுங்காவில், பூநகரி, பளை, வடமராட்சி கிழக்கு, தென்மராட்சி போன்ற இடங்களில் இருந்து நோயாளர்கள் வைத்தியசாலையில் கூடியுள்ளனர். எனினும் கண் சிகிச்சை நடைபெறாது என்று வைத்தியசாலை தரப்பில் எவரும் அவர்களிடம் தெரிவிக்கவில்லை.

நீண்டநேரம் காத்திருந்து விட்டு நோயாளர்கள் சென்று வினவியபோதே ஜனவரி மாதத்தில் இருந்துதான் அவ்வாறு 'கிளினிக்' நடை பெறுமெனத் தெரிவிக்கப்பட்டதாக பாதிக்கப்பட்டோர் தெரிவித்தனர்.

இதனால் நோயாளர்கள் பெரும் ஏமாற்றம் அடைந்து திரும்பிச் செல்ல நேரிட்டது.


தூர இடங்களில் இருந்து வந்து இவ்வாறு நீண்ட நேரம் காத்திருந்து விட்டு திரும்பிச் செல்ல வேண்டி ஏற்பட்டது என பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்தனர்.

இந்த விடயம் குறித்து வைத்தியசாலை பொறுப்பதிகாரியிடம் தொடர்பு கொண்டு கேட்ட போது அவர் கருத்துக் கூற மறுத்துவிட்டார். (ஐ-9)

# துணைத் தூதரை மீட்காது மன்றுக்கு வரமாட்டேன்

*சல்மான் குர்ஷித் கூறுகின்றார்*


புதுடில்லி, டிசெ.20
இந்தியத் துணைத் தூதர் தேவ்யானியை மீட்காமல் நாடாளுமன்றுக்கு வரமாட்டேன் என்று தெரிவித்துள்ளார் இந்திய மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் சல்மான் குர்ஷித்.
அமெரிக்காவில் விஸா முறைகேடுகள் தொடர்பாக இந்திய துணைத் தூதர் தேவ்யானி கோபர்கேட் கைது செய்யப்பட்ட விவகாரம் குறித்து நாடாளுமன்றில் கருத்துத் தெரிவிக்கும்போதே இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.
இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,
"அமெரிக்காவால் கைது செய்யப்பட்டுள்ள தேவ்யானியை மீட்டு நாட்டுக்கு திரும்ப அழைத்து வருவேன். தேவ்யானியை மீட்காமல் நான் நாடாளுமன்றுக்குத் திரும்பி வர மாட்டேன். அவரைக் கைது நடவடிக்கையில் இருந்து வெளியே கொண்டு வந்துவிட்டு, அதன் பின்னர் அமெரிக்கா மீது இந்தியா எடுக்க வேண்டிய நடவடிக்கை குறித்து முடிவெடுக்கப்படும்." என்று தெரிவித்துள்ளார். (ற)



அமெரிக்காவில் உள்ள இந்திய துணைத் தூதரக பெண் அதிகாரி தேவ்யானி கோபர்கேட் கைது செய்யப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து இந்தியத் தலைநகர் புதுடில்லியில் உள்ள அமெரிக்கத் தூதரகத்துக்கு வெளியே பொதுமக்கள் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டனர்.

# காங்கிரஸ் - ஆத்மி கட்சிகளிடையே இரகசியமான உடன்பாடு

*பா.ஜ.க. குற்றச்சாட்டு*



புதுடில்லி, டிசெ.20
காங்கிரஸ் கட்சியின் நிர்ப்பந்தத்துக்குப் பணிந்து டில்லியில் ஆட்சி அமைக்கும் தமது நிலைப்பாட்டை ஆம் ஆத்மி கட்சி மாற்றிக் கொண்டுள்ளது என்று குற்றஞ்சாட்டியுள்ளார் பா.ஜ., தலைவர் ஹர்ஷ வர்தன்.
இதுகுறித்து அவர் கூறுகையில்,
"ஆம் ஆத்மி கட்சிக்கும், காங்கிரஸ் கட்சிக்கும் இடையே இரகசிய உடன்பாடு ஏற்பட்டுள்ளது. அதனால்தான் எந்தக் கட்சியின் ஆதரவையும் ஏற்க ஆம் ஆத்மி மறுப்பதுடன் ஆட்சி அமைக்கவும் தயக்கம் காட்டி வருகிறது.
பா.ஜ.கவை ஆட்சி அமைக்க விடக்கூடாது என்ற நோக்கத்தில் இவர்கள் ரகசியக் கூட்டணி வைத்துக் கொண்டுள்ளனர். ஆம் ஆத்மி கட்சி என்பது காங்கிரஸின் நகல். தேர்தலுக்கு முன்னரே தங்களுக்குள் இரகசியக் கூட்டணியை அமைத்துக் கொண்ட இவ்விரு கட்சிகளும், தற்போது அரசு அமைப்பதில் மக்களின் கருத்தைக் கேட்பதாக நாடகம் ஆடுகின்றன. இவை அனைத்துமே ஏற்கனவே முடிவு செய்யப்பட்டு விட்டன." என்று தெரிவித்துள்ளார். (ற)

# நாடாளுமன்றத் தேர்தலுக்கு அனைவரும் தயாராகுங்கள்

*காங்கிரஸ் கட்சி உறுப்பினர்களை அழைக்கிறார் சோனியா காந்தி*

புதுடில்லி, டிசெ.20
அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலுக்குத் தயாராகுமாறு தமது கட்சியினருக்கு அழைப்பு விடுத்துள்ளார் காங்கிரஸ் கட்சியின் தலைவி சோனியா காந்தி.
புதுடில்லியில் நடைபெற்ற காங்கிரஸ் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட்டத்திலேயே இவ்வாறு அவர் அழைப்பு விடுத்துள்ளார்.
இதுகுறித்து அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது,
"நாடாளுமன்றத் தேர்தலுக்கு கட்சியினர் ஆர்வத்தோடு தயாராக வேண்டிய தருணம் இது. அண்மையில் முடிந்த சட்டசபைத் தேர்தலில் காங்கிரஸ் அடைந்த தோல்வி குறித்து எவ்விதமான அவநம்பிக்கையையும் கட்சியினர் ஏற்படுத்திக் கொள்ள வேண்டாம். மாறாக நாடாளுமன்றத் தேர்தல் போரை எதிர்கொள்ள ஆயத்தமாவோம்.
ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசு பல்வேறு நலத்திட்டங்களை கொண்டுவந்திருந்தாலும் அவற்றை மக்களிடம் சரியான முறையில் கொண்டு செல்லாததே மாநில சட்டசபைத் தேர்தல் தோல்விக்கு காரணம். மக்கள் தீர்ப்பை ஏற்றுக்கொள்ள வேண்டும். எதிர்காலத்தில் மக்களிடம் காங்கிரஸ் தனது திட்டங்களை திறம்பட விளக்க வேண்டும்.
உணவு பாதுகாப்புச் சட்டம், நில அபகரிப்புச் சட்டம், மனிதக் கழிவுகளை மனிதர்களே அகற்றுவதை எதிர்க்கும் சட்டம் போன்ற சட்டங்களை காங்கிரஸ் மக்கள் நலனுக்காக நிறைவேற்றியது. ஆனால் எதிர்க்கட்சிகள் காங்கிரஸ் தலைவர்களை தனிப்பட்ட முறையில் விமர்சிப்பதில் மட்டுமே குறியாக இருந்தன. எதிர்க்கட்சிகள் பரப்பி வரும் பிரிவினைவாத, வகுப்புவாதக் கருத்துக்களை முறியடித்து, எதிர்வரும் தேர்தலில் நாம் வெற்றி பெறுவோம்" என்று தெரிவித்துள்ளார் சோனியா காந்தி. (ற)

# மீனவர் பிரச்சினையை பா.ஜ.க. அரசு தீர்க்கும்

*பொன்.ராதாகிருஷ்ணன் தெரிவிப்பு*

பா.ஜ.க. ஆட்சிக்கு வந்ததும் தமிழக மீனவர்களின் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும் என்று தெரிவித்துள்ளார் பொன். ராதாகிருஷ்ணன்.
ராமேஸ்வரத்தில் ஊடகவியலாளர்களைச் சந்தித்துக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.



அங்கு அவர் மேலும் கூறியதாவது:
" இந்தியாவின் அடுத்த பிரதமராக வர மோடி ஒருவருக்கே தகுதியுள்ளது. அதற்கான பணிகளில் பா.ஜ.க. தீவிரமாக ஈடுபட்டு வருகிறது. தமிழ்நாட்டை பொறுத்த மட்டில் எங்கள் கட்சியுடன் கூட்டணி வைத்துகொள்ள வருபவர்களை வரவேற்கிறோம். அதேவேளையில் எந்த கட்சியுடனும் கூட்டணி வைத்துகொள்ள நாங்கள் எதிர்பார்த்திருக்கவில்லை. தி.மு.க. தலைவர் பா.ஜ.க. குறித்து பேசும்போது, வாஜ்பாய் போன்ற தலைவர்கள் காலத்தில் இருந்த கட்சி போன்று, இப் போதைய கட்சி இல்லை எனச் சொல்லியிருக்கிறார். அப்படியானால் அண்ணா காலத்து தி.மு.க. போல் இப்போதைய காலத்து தி.மு.க. இல்லை என்று நாங்கள் சொன்னால் அவர் ஏற்றுக்கொள்வாரா? எங்களை பொறுத்தவரை மோடியை பிரதமராக ஏற்பவர்கள் மட்டுமே எங்களுடன் கூட்டணி வைக்க முடியும். தேர்த லுக்கு பின் பா.ஜ.க.வுக்கு தி.மு.க. ஆதரவு கொடுக்குமா? என்பது தேர்தல் முடிவுக்கு பின்தான் தெரியவரும்.
தமிழக மீனவர்கள் பிரச்சினைகள் குறித்து நாடாளுமன்றத்தின் கவனத்தைக் கவரும் வகையில் தமிழக நாடாளுமன்ற உறுப்பினர்கள் செயற்படவில்லை. அப்படி செயற்பட்டிருந்தால் மீனவர்களின் பிரச்சினைக்குத் தீர்வு கிடைத்திருக்கும். இனி அமையப் போகும் பா.ஜ.க. ஆட்சியின் போது மீனவர்கள் பிரச்சினைக்கு நிச்சயம் தீர்வு காணப்படும்" என்று தெரிவித்துள்ளார். (ற)

# காங்கிரஸால் தி.மு.கவுக்கு பெரும் பாதிப்பே ஏற்பட்டது

*அந்தக் கட்சியின் புதுவை மாநில அமைப்பாளர் விசனம்*

சென்னை, டிசெ.20
2011ஆம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் காங்கிரஸ் கட்சியால்தான் தி.மு.க. பெரும் பாதிப்பைச் சந்தித்தது என்று தெரிவித்துள்ளார் அந்தக் கட்சியின் புதுவை மாநில அமைப்பாளர் எம்.ஏ.எஸ். சுப்பிரமணியன்.

**கூட்டணித் தர்மத்தை மதித்து செயற்பட்டதால் தி.மு.க.தான் பாதிக்கப்பட்டது. காங்கிரஸ் கட்சியின் நிர்வாகச் சீர்கேட்டால் தான் புதுவையில் 2011 ஆம் ஆண்டு தேர்தலில் தி.மு.க. ஆட் சியை இழந்தது.**

இதுகுறித்து அவர் கூறுகையில்,
"2004ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் காங்கிரஸ் கட்சிக்கு பெரும்பான்மை இல்லாத நிலையில் தி.மு.க. ஆதரவில்தான் மத்தியில் ஆட்சியை நடத்தினர். கடந்த 2009ஆம் ஆண்டு தேர்தலிலும் காங்கிரஸ் ஆட்சி அமைய தி.மு.க. தான் உறுதுணையாக இருந்தது.
இலங்கைத் தமிழர் பிரச்சினையில் மத்திய அரசு துரோகம் செய்ததால்தான் தி.மு.க. மத்திய அரசை விட்டு வெளியில் வந்தது. 2006 ஆம் ஆண்டு தமிழகத்தில் தி.மு.க. அரசில் பங்கேற்காமல் காங்கிரஸ் வெளியில் இருந்து ஆதரவு தந்தது என்று மாநில காங்கிரஸ் தலைவர் ஏ.வி.சுப்பிரமணியன் கூறியுள்ளார்.
அதேபோன்றுதான் புதுச்சேரியிலும் காங்கிரஸ் அரசில் தி.மு.க. இடம் பெறவில்லை. தி.மு.க. அமைச்சர்கள் இருந்திருந்தால் மக்களுக்குச் சிறப்பாகச் சேவை புரிந்திருப்பர். கூட்டணித் தர்மத்தை மதித்து செயற்பட்டதால் தி.மு.க. தான் பாதிக்கப்பட்டது. காங்கிரஸ் கட்சியின் நிர்வாகச் சீர்கேட்டால் தான் புதுவையில் 2011 ஆம் ஆண்டு தேர்தலில் தி.மு.க. ஆட்சியை இழந்தது. தி.மு.கவினர் உழைப்பால் தான் காங்கிரஸ் 7 தொகுதிகளையாவது வெல்ல முடிந்தது. காங்கிரஸ், என். ஆர். காங்கிரஸ் அரசுகளின் நிர்வாக சீர்கேட்டைப் பார்த்துள்ள மக்கள், விரைவில் தி.மு.க. ஆட்சியை எதிர் நோக்கி உள்ளனர்" என்று தெரிவித்துள்ளார். (ற)




## 71 ஊடகவியலாளர்கள் சாவு

நியூயோர்க், டிசெ.20

2013ஆம் ஆண்டில் உலகம் முழுவதும் 71 ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டுள்ளனர். இது கடந்த ஆண்டைக் காட்டிலும் 20 சதவீதம் குறைவானதாகும் என்று கூறப்படுகின்றது.

உயிரிழப்புகள் குறைந்துள்ளபோதும், அவர்களது பணிகள் தொடர்பாக தாக்கப்பட்ட, மிரட்டப்பட்ட செய்தியாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளன என்றும் தெரியவருகின்றது.

கைது செய்யப்பட்ட செய்தியாளர்களின் எண்ணிக்கை 826 ஆகவும், மிரட்டப்பட்ட மற்றும் தாக்குதலுக்கு உள்ளான செய்தியாளர்களின் எண்ணிக்கை 2, 160 ஆகவும், கடத்தப்பட்டவர்களின் எண்ணிக்கை 87 ஆகவும், அவர்களது நாடுகளை விட்டு வெளியேற்றப்பட்டவர்கள் 77 ஆகவும், ஊடகவியலாளர்கள் கொலை செய்யப்பட்ட சம்பவங்கள் 6 ஆகவும் உள் ளன என்று புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன. (ற)

# சிரிய இரசாயன அழிப்புக்கு ரஷ்யா பாதுகாப்பு வழங்கும்

மொஸ்கோ, டிசெ.20

சிரியாவில் உள்ள இரசாயன ஆயுதங்களை அழிக்கும் செயற்பாட்டின் போது அதற்குப் பாதுகாப்பு வழங்கத் தாம் தயாராக உள்ளதாக அறிவித்துள்ளது ரஷ்யா.

ரஷ்யாவின் வெளிவிவகார அமைச்சர் சேர்கி லவ்ரோவை மேற்கோள்காட்டி அந்த நாட்டு ஊடகங்கள் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளன.

சிரியாவில் காணப்படுகின்ற பெரும் அளவான இரசாயன ஆயுதங்களை, அமெரிக்காவுக்கு சொந்தமான கப்பல் ஒன்றில் ஏற்றி நடுக்கடலில் வைத்து அழிக்க ஐக்கிய நாடுகள் சபை தீர்மானித்துள்ளது.

எனினும் சிரியாவின் பல்வேறு பகுதிகளில் உள்ள ஆயுதங்களை லடாகியா பகுதிக்கு எடுத்துச் செல்வதில் பாதுகாப்பு சிக்கல்கள் இருக்கின்றன என்று கண்காணிப்பாளர்கள் தெரிவித்திருந்தனர்.



இந்த நிலையில் இரசாயன ஆயுதங்களை லடாகியா பகுதிக்கு எடுத்துச் செல்வதற்கான பாதுகாப்பு மற்றும் போக்குவரத்துஉதவிகளைவழங்கத்தமது நாடு தயாராக இருப்பதாக அந்த நாட்டின் வெளிவிவகார அமைச்சர் தெரிவித்துள்ளார். (ற)

## தொலைபேசி ஒட்டு கேட்பு: அமெ. செனட்சபை ஆதரவு

நியூயோர்க், டிசெ.20

தொலைபேசி உரையாடல்களை இரகசியமாகப் பதிவு செய்யும் அமெரிக்காவின் செயற்பாட்டுக்கு ஆதரவு தெரிவித்துள்ளனர் அந்தநாட்டு செனட் சபை உறுப்பினர்கள்.

இரகசியமாக தொலைபேசி உரையாடல்களைப் பதிவு செய்வது அரசியலமைப்பு சட்டத்துக்கு எதிரானது என்று வொஷிங்டன் மாகாண நீதிமன்றம் தீர்ப்பளித்திருந்தது.

இது அந்த நாட்டு ஜனாதிபதி ஒபாமாவின் நிர்வாகத்துக்கு பெரும் பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது.

இந்தநிலையிலேயே, இரகசிய தொலைபேசி உரையாடல் பதிவுக்கு ஆதரவாக செனட் சபை உறுப்பினர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

இது குறித்து உளவு துறைக்கான செனட் குழுவின் தலைவர் டேனி ஃபெய்ன்ஸ்டெயின் கருத்துத் தெரிவிக்கையில்,

“இரகசிய உரையாடல் பதிவு அரசியலமைப்பு சட்டத்துக்கு எதிரானதா, இல்லையா என்பதை உச்ச நீதிமன்றம் முடிவு செய்யும். அது குறித்து மக்களிடம் விவாதம் நடத்த வேண்டும். இரகசியமாகத் தகவல்களை சேகரிப்பதற்கு ஏற்றவாறு சட்டத்தில் திருத்தம் செய்ய வேண்டும்' என்று தெரிவித்துள்ளார். (ற)

## கலவரத்துக்கு காரணமானோர் நாடு கடத்தப்பட உள்ளனர்


### சிங்கப்பூர் அரசு அறிவிப்பு

சிங்கப்பூர், டிசெ.20

கலவரத்தில் ஈடுபட்ட 53 தெற்காசிய ஊழியர்களை நாடு கடத்த உள்ளதாக சிங்கப்பூர் அரசு தெரிவித்துள்ளது.

சிங்கப்பூரில் இந்தியர்கள் அதிகம் வசிக்கும் லிட்டில் இந்தியா என்ற இடத்தில் கடந்த 8ஆம் திகதி நடந்த பஸ் விபத்தில் தமிழகத்தைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் உயிரிழந்தார். அதைத்தொடர்ந்து சிங்கப்பூரில் கலவரம் ஏற்பட்டது. அதில் பொலிஸார் உள்பட 39 பேர் படுகாயம் அடைந்தனர். 25 வாகனங்கள் தீ வைத்து எரிக்கப்பட்டன.

சிங்கப்பூரில் கடந்த 40 ஆண்டுகளுக்கு பின்னர் நடந்த



இந்த கலவரம் தொடர்பாக சிறப்புவிசாரணை குழு அமைக்கப்பட்டு விசாரணை நடத்த சிங்கப்பூர் பிரதமர் லீ ஹூ சைன் லோங் உத்தரவிட்டுள்ளார்.

இதையடுத்து விசாரணை குழு அமைக்கப்பட்டு விசாரணை நடத்தப்பட்டு வருகிறது.

இந்நிலையில், 53 தெற்காசிய ஊழியர்களை நாடு கடத்த உள்ளதாக சிங்கப்பூர் அரசு தெரிவித்துள்ளது. மேலும், கலவரத்தில் ஈடுபட்ட 28 பேர்களுக்கு எதிராக கிரிமினல் வழக்கும் பதிவு செய்ய உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற)

## அவசரமாக விண்வெளி செல்லும் நாஸா வீரர்கள்

நியூயோர்க், டிசெ.20

சர்வதேச விண்வெளி ஆராய்ச்சி மையத்தில் ஏற்பட்டுள்ள தொழில்நுட்பக் கோளாறை அடுத்து அவசர விண்வெளிப் பயணத்துக்கு ஏற்பாடு செய்துள்ளது அமெரிக்காவின் விண்வெளி ஆராய்ச்சி அமைப்பான நாஸா.

சர்வதேச விண்வெளி ஆய்வு மையத்தின் குளிரூட்டும் பகுதியில் ஏற்பட்டுள்ள தொழில்நுட்ப கோளாறு கடந்த வாரம் கண்டறியப்பட்டது.

அதை உடனடியாகச் சரிசெய்ய வேண்டிய அவசியம் தற்போது ஏற்பட்டுள்ளதை அடுத்தே நாஸா அவசர விண்வெளி பயணத்துக்கு ஏற்பாடு செய்துள்ளது. (ற)

## நாற்பது குழந்தைகளை தத்தெடுக்கும் ஜனாதிபதி

லண்டன், டிசெ.20

தன்னுடைய பதவிக்காலம் முடிந்த பின்னர் 40 ஏழைக் குழந்தைகளை தத்தெடுத்து வளர்க்கப் போகின்றேன் என்று தெரிவித்துள்ளார் உருகுவே நாட்டின் ஜனாதிபதி ஜோஸ் முஜிகா.

லத்தீன் அமெரிக்க நாடான உருகுவே ஜனாதிபதி ஜோஸ் முஜிகாவின் பதவிக் காலம் அடுத்த ஆண்டுடன் நிறைவடைகிறது. மிகவும் எளிமையான மனிதனான முஜிகா, ஆடம்பரமாக உடை அணிவது, பங்களாவில் வசிப்பது போன்றவற்றை விரும்புவதில்லை. ஜனாதிபதியாகப் பதவி வகித்தாலும் தற்போதும் தனது பழைய பண்ணை வீட்டில் தான் மனைவியுடன் வசித்து வருகிறார். சர்வதேச ஊடகங்கள் இவரை உலகின் மிகவும் ஏழ்மையான ஜனாதிபதி என வர்ணித்து வருகின்றன. இந்த நிலையில் அவர் தனது பதவிக் காலம் முடிந்த பின்பு 40 குழந்தைகளை தத்தெடுத்து வளர்க்க விரும்புவதாகத்தெரிவித்துள்ளார்.

அதேவேளை, இவர் அண்மையில் கஞ்சாவை சட்டபூர்வமாக்கும் சட்டத்திருத்தத்தை நிறைவேற்றி, உலக நாடுகளின் அதிருப்தியையும் சம்பாதித்துக் கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (ற)

## கடலுக்குள் பெண்ணை வீழ்த்திய 'பேஸ்புக்'

*மெல்பேர்ன், டிசெ.20*

*ஆஸ்திரேலியாவில் சுற்றுலாப் பயணி ஒருவர் தனது கைத்தொலைபேசியில் பேஸ்புக்கை பார்த்துக் கொண்டே பாலத் தில் இருந்து தவறி கடலுக்குள் விழுந்துள்ளார்.*

*ஆஸ்திரேலியாவில் உள்ள மெல்போர்னில் கடலில் உள்ள பாலம் ஒன்றின் மேல் பெண் சுற்றுலாப் பயணி ஒருவர் கடந்த திங்கட்கிழமை இரவு நடந்து சென்றுள்ளார்.*

*கைத்தொலைபேசியில் பேஸ்புக்கில் மூழ்கியவாறு நடந்து சென்ற அவர், பாலம் முடிவடைந்ததைக் கவனிக்காது பாலத்தைத் தாண்டி கடலில் விழுந்துள்ளார். அங்கிருந்த பொலிஸார் ஓடி வந்து கடலில் தத்தளித்த அந்த பெண்ணை காப்பாற்றி கரைக்கு அழைத்து வந்தனர். கடலில் விழுந்த போதும் அந்த பெண் கையில் இருந்த கைத்தொலைபேசியைக்கைவிட வில்லை என்று கூறப்படுகின்றது. (ற)*

**கட்டட நிர்மாணம்**

பொறியியலாளர் மேற்பார்வையில் சகல விதமான கட்டட நிர்மாண வேலைகளும் தரமாகவும், நியாயமான விலையிலும், துரிதமாகவும் செய்து கொள்வதற்கு.



தொடர்பு : நித்தி கொன்ஸ்ரக்சன்ஸ்

077 354 0380

(42773) (7.6.3)

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை**

**பேராசிரியர் அழகையா துரைராசா தங்கப்பதக்கம்**

பேராசிரியர் அழகையா துரைராசா தங்கப்பதக்கத்தினை வழங்கும் பொருட்டு 28.02.2013 இற்குப் பின்னர் பட்டப் படிப்பில் முதலாம், வகுப்பில் அல்லது இரண்டாம் (மேற் பிரிவு) வகுப்பில் சித்தியெய்தி எதிர்வரும் பட்டமளிப்பு வைபவத்தில் இளமாணி பட்டம் அளிக்கப்படவிருக்கும் மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பப்படிவங்களைக் கீழ்க்காணும் முகவரியிலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

1. சிரேஷ்ட உதவிப் பதிவாளர், கல்விக்கிளை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
2. சிரேஷ்ட உதவிப்பதிவாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்து வவுனியா வளாகம், வவுனியா.
3. www.jfn.ac.lk இணையத்தளம்

**விருதுகள்:**

பல்கலைக்கழக மட்டத்தில் சகலதுறைகளிலும் சிறப்பாக செயற்பட்டமைக்காக ஒரு பதக்கமும், பீட மட்டத்தில் சகல துறைகளிலும் சிறப்பாகச் செயற்பட்டமைக்காக பீடங்களுக்கு ஒவ்வொரு பதக்கமும் வழங்கப்படும்.

**முடிவு திகதி : 26.12.2013**

சரியான பொருத்தமான தகவல்களை உள்ளடக்காததும் தெளிவற்றதும் பூரணப்படுத்தப்படாததும் மற்றும் முடிவு திகதிக்குப் பின்னர் பெறப்படும் விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

**பதிவாளர்.**

(சி/10819) (10.6.3)



அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாணத்தில் கடும் காட்டுத் தீ ஏற்பட்டுள்ளது. காட்டுத் தீயை அணைப்பதற்காக சுமார் 1,000 தீயணைப்பு வீரர்கள் இரவு பகலாகப் போராடி வருகின்றனர். எனினும் கட்டுக்கடங்காது பரவி வரும் காட்டுத் தீ பல கிலோமீற்றர் பரப்பளவுக்குப் பரவியுள்ளது. அதனால் அந்தப் பகுதியில் உள்ள மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேறி வருகின்றனர்.

## செப்.11 தாக்குதல்: உயிரிழந்தோருக்கு நட்ட ஈடு

நியூயோர்க், டிசெ.20

2001ஆம் ஆண்டு அமெரிக்காவின் நியூயோர்க் நகரத்தில் இருந்த இரட்டைக் கோபுரங்கள் மீது அல் குவைதா அமைப்பு விமானங்களை மோதி நடத்திய தாக்குதலில் உயிரிழந்தவர்களுக்கு நஷ்ட ஈடு வழங்க விமான நிறுவனம் ஒப்புக் கொண்டுள்ளது.

இரட்டை கோபுரத்தில் இயங்கி வந்த 'கேண்டர் பிட்ஸ்ஜெரால்ட்' என்ற நிறுவனம், அந்தத் தாக்குதலில் சுமார் 650 ஊழியர்களை இழந்தது. அந்தத் தாக்குதலுக்குக் காரணமாக பயங்கரவாதிகளை நன்கு சோதிக்காமல் விமானத்தில் ஏற்றியமை தொடர்பாக அமெரிக்க விமான நிறுவனத்தின் மீது வழக்குத் தொடரப்பட்டது. வழக்கு விசாரணைகளின் முடிவில் நட்டஈடு வழங்க விமான நிறுவனம் ஒப்புக் கொண்டுள்ளது. (ற)

# ஜனாதிபதி நிதிய புலமைப்பரிசிலுக்கு மாணவர்கள் விண்ணப்பிக்கலாம்

வடமராட்சி, டிசெ.20

ஜி.சீ.ஈ உயர்தர வகுப்பில் கல்வி கற்பதற்காக ஜனாதிபதி நிதியத்தால் வழங்கப்படும் புலமைப் பரிசில்களுக்காக மாணவர்களிடமிருந்துவிண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

கடந்த 2012 ஆம் ஆண்டு நடைபெற்ற ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைக்கு முதல் தடவையாகத் தோற்றி அந்தப் பரீட்சையில் சித்தியடைந்து 2015 ஆம் ஆண்டில் ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள பொருளாதார ரீதியில் சிரமங்களை எதிர் நோக்கும் மாணவர்களுக்கு புலமைப் பரிசில்களை வழங்க ஜனாதிபதி தீர்மானித்துள்ளதை அடுத்தே விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இந்தத் திட்டத்தின் கீழ் கல்வி வலயம் ஒன்றுக்கு வழங்கப்படும் புலமைப் பரிசில்களின் எண்ணிக்கை 100 ஆகும். தெரிவு செய்யப்படும் புலமைப் பரிசில் பெறுநர்களுக்கு க.பொ.த.உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் வரை மாதாந்தம் ரூபா 500 வீதம் உயர்ந்த பட்சம் 24 மாதகாலத்துக்கு புலமைப்பரிசில் நிதி உதவி வழங்கப்படும்.

விண்ணப்பதாரரின் குடும்ப மாதாந்த வருமானம் 5 ஆயிரம் ரூபாவுக்கு மேற் படாதிருக்க வேண்டும். அவர், அரச பாடசாலை அல்லது கட்டணங்கள் அறவிடாத தனியார் பாடசாலை ஒன்றில் கல்வி கற்கும் மாணவராக இருத்தல் வேண்டும். அத்துடன் விண்ணப்பதாரர் 5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் நிதி உதவி பெறாத ஒருவராக இருத்தல் வேண்டும்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்களைவிண்ணப்பதாரி தான் க.பொ.த.சாதாரண தரப் பரீட்சைக்காக கல்வி கற்ற பாடசாலையின் அதிபரிடம் மாத்திரம் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 03 ஆம் திகதிக்கு முன்னதாக ஒப்படைக்க வேண்டும். பாடசாலை அதிபர் உரிய நடவடிக்கையின் பின்னர் அந்த விண்ணப்பப் படிவங்களை அடுத்த ஆண்டு பெப்ரவரி மாதம் 17 ஆம் திகதிக்கு முன்னர் வலயக் கல்விப் பணிப்பாளரிடம் ஒப்படைக்க வேண்டும்.

குறித்த நேர்முகப் பரீட்சைகள் நடைபெற்ற பின்னர் வலயக் கல்விப் பணிப்பாளர் தனது பரிந்துரைகளுடன் கூடிய விண்ணப்பப் படிவங்களை எதிர்வரும் மார்ச் மாதம் 14 ஆம் திகதிக்கு முன்னர் மாகாணக் கல்விப் பணிப்பாளரிடம் ஒப்படைக்க வேண்டும். தாமதமாகக் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும் என ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க அறிவித்துள்ளார். (ந-8)

# தமிழ்ப் பாடப் பரீட்சை கேள்விகளில் மயக்க நிலை

யாழ்ப்பாணம்,டிசெ.20

தற்பொழுது நடைபெற்றுக் கொண்டிருக்கும் 2013ஆம் ஆண்டு ஜி.சீ.ஈ. பரீட்சையில் தமிழ்பாட வினாத்தாளில் பல குறைபாடுகள் இருந்ததற்கு ஆசிரியர்களிடம் இருந்து முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாக இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் சுட்டிக் காட்டியுள்ளது.

இது தொடர்பில் கல்வி அமைச்சின் செயலாளருக்கு முறையிட உள்ளதாக சங்கத்தின் பொதுச் செயலாளர் சரா.புவனேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

வினாத்தாளில் மயக்க நிலையும், பாடப்பரப்புகளுக்கு வெளியேயான வினாக்கள் உட்படுத்தப்பட்டிருந்ததும், விடைகளைக் கண்டறிய முடியாத வினாக்கள் உள்ளடக்கப்பட்டிருந்ததும் தவறுகளாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. மாணவர்கள் மத்தியில் அது குழப்பத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

பரீட்சைகள் தொடர்பாக தொடர்ச்சியாக நடைபெறும் இத்தகைய குறைபாடுகளை பல தடவைகள் சுட்டிக்காட்டியும் நடவடிக்கைகள் எடுக்காமல் இருப்பது கல்வித் துறைசார் முன்னெடுப்புக்களில் அசமந்தப்போக்குகளை கடைப் பிடிப்பதனையே எடுத்துக் காட்டுவதாக சங்கம் கவலை வெளியிட்டுள்ளது. (ந)

BOC ரண் கெகுளு



ஐந்தில் எங்கள் எதிர்காலம்... உள்ளது ரண் கெகுளு புத்தகத்தில்

5 ஆம் தர புலமைப்பரிசில் சிறார்களுக்காக

இலங்கை வங்கியின் ரண் கெகுளு புலமைப்பரிசில்கள் 2000

இலங்கை வங்கியின் ரண் கெகுளு புலமை பரிசில் - 2013 மாதிரி விண்ணப்பப் படிவம்.

☐ ரண் கெகுளு கணக்கு புலமைப்பரிசில் ☐ ரண் கெகுளு வெளிநாட்டு நாணய கணக்கு (RKFC) புலமைப்பரிசில்

பிள்ளையின் முழுப் பெயர்.................... கணக்கில் குறிப்பிடப்பட்டுள்ள பெயர்....................

பாடசாலை .................... பரீட்சை இல ....................

2013 புலமைப் பரிசிலில் பெற்ற புள்ளிகள் .................... நாடளாவிய ரீதியில் தரநிலை .... மாவட்டம் மற்றும் மாவட்டத்தில் தரநிலை....

RKG அல்லது RKFC கணக்கிலக்கம் .................... கணக்கு உள்ள கிளை....................

தாய் / தந்தை / பாதுகாவலரின் பெயர் மற்றும் முகவரி .................... தொலைபேசி இலக்கம்(இருப்பின்) ....................

தாய் / தந்தை / பாதுகாவலரின் கையொப்பம் .................... திகதி ....................



விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசி திகதி 2013 டிசம்பர் 31

• தகைமைகள்

ரண் கெகுளு புலமைப் பரிசிலுக்கு

1. இலங்கை வங்கியின் ரண் கெகுளு சிறுவர் கணக்கொன்றை வைத்திருத்தல்
2. 2013 ஆகஸ்ட் மாதம் நடைபெற்ற 5 ஆம் ஆண்டு புலமை பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்
3. பரீட்சை நடைபெற்ற தினமான (2013 ஆகஸ்ட் 25) அன்று கணக்கில் குறைந்த பட்சம் ரு 2500 இருந்திருத்தல் வேண்டும்
4. பரீட்சையில் 176 புள்ளிகளை அல்லது அதற்கு மேல்பெற்றிருத்தல் அல்லது மாவட்ட வெட்டுப்புள்ளிகளுக்கு அமைய மாவட்டத்தில் முதல் 10 மாணவர்களுக்கிடையே இருத்தல்.

ரண் கெகுளு வெளிநாட்டு நாணய கணக்கு (RKFC) புலமை பரிசிலுக்கு

1. இலங்கை வங்கியின் வெளிநாட்டு நாணய ரண் கெகுளு கணக்கொன்றை வைத்திருத்தல்
2. 2013 ஆகஸ்ட் மாதம் நடைபெற்ற 5 ஆம் ஆண்டு புலமை பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்
3. பரீட்சை நடைபெற்ற தினம் (2013 ஆகஸ்ட் 25) முன் 6 மாதத்திற்கு கணக்கில் குறைந்த பட்சம் அமெ.டொ 250 அல்லது அதற்கு சமனான வெளிநாட்டு பண பெறுமதியினை கொண்டிருத்தல்.

★ ரூபா இருபத்தி ஐந்தாயிரம் படி புலமைப் பரிசில் 100 இலங்கையில் அதிக புள்ளிகள் பெற்ற ரண் கெகுளு வெளிநாட்டு நாணய கணக்கு (RKFC) வைத்திருப்போருக்கு வழங்கப்படும்

★ ரண் கெகுளு புலமை பரிசில் மற்றும் RKFC புலமை பரிசில் ஆகிய இரண்டிற்கும் தகுதி பெறுபவர்களுக்கு ரூபா முப்பத்தையாயிரம் பணம் வழங்கப்படும்.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்ப படிவத்திற்கு இணங்க தகமைகள் கொண்டுள்ள இலங்கை வங்கியின் ரண் கெகுளு மற்றும்' ரண் கெகுளு வெளிநாட்டு நாணய சேமிப்பு கணக்கு வைத்திருக்கும் பிள்ளைகளின் விண்ணப்ப படிவத்தை பதிவுத் தபாலில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்பவும்.



உதவிப் பொது முகாமையாளர்(விற்பனை)
16வது மாடி சந்தைப்படுத்தல் பிரிவு இலங்கை வங்கி பிரதான காரியாலயம்
இலங்கை வங்கி சதுக்கம் கொழும்பு 01

கடித உறையின் இடது பக்க மூலையில்
BOC ரண் கெகுளு புலமைபரிசில் 2013 என அல்லது
RKFC புலமைபரிசிலுக்காக விண்ணப்பிர்களாயின்
RKFC புலமைபரிசில் 2013 என குறிப்பிடவும்.

(C/10250)

www.boc.lk | தலைமைக் காரியாலயம் "இலங்கை வங்கி சது[illegible]க்கம் 1, இலங்கை வங்கி மாவத்தை கொழும்பு 01. | அழைப்பு நிலையம் (+94) 011 220 4444 | Fitch Rating AA+(lka)

இலங்கைவங்கி BOC தேசத்தின் வங்கியாளர்

## கௌரவிப்பும் கலை விழாவும்

வடமராட்சி, டிசெ.20

உரும்பிராய் காந்தி சனசமூக நிலைய முன்பள்ளி மாணவர்களின் கௌரவிப்பு விழா வும், கலை விழாவும் நாளை சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு நிலையத் தலைவர் ச.பேரின்பநாயகம் தலைமையில் நடைபெற வுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக மாவட்ட சர்வோதய இணைப்பாளர் எஸ்.சத்தியகுமார் கலந்துகொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாக கோப்பாய் மத்தியஸ் தர் சபைத் தலைவர் இ.மயில்வாகனம், கொக்குவில் இந்துக் கல்லூரி முன்னாள் அதிபர் அ.பஞ்சலிங்கம், உரும்பிராய் கிராம சேவையாளர் சி.எழிலரசன் ஆகியோர் கலந்துகொள்வர். (ந-8)

## காணித் தகராறு; கர்ப்பிணிப் பெண் ஆஸ்பத்திரியில்

தென்மராட்சி, டிசெ.20

காணித் தகராறு தொடர்பாக எழுந்த வாக்கு வாதத்தின்போது வீசப்பட்ட கல் கர்ப்பிணிப் பெண்ணின் வயிற்றில் தாக்கியது.

இதனால் பாதிக்கப்பட்ட பெண் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் புதன்கிழமை மீசாலையில் இடம் பெற்றது. கிணற்றில் குளிக்கச் சென்ற கர்ப்பிணிப் பெண்ணை காணிக்குள் வரவிடாமல் அவரது சகோதரி தடுத்ததால் அவ்விருவருக்கும் இடையே ஏற்பட்ட வாக்குவாதம் வலுத்து இரு பகுதியினரும் சரமாரியாக கற்களை வீசித் தாக்கியுள்ளனர். இதில் ஒரு பெண்ணுக்குத் தலையில் கல் தாக்கி காயமேற்பட்டது. கர்ப்பிணிப் பெண்ணுக்கு வயிற்றில் கல்தாக்கியதால் பாதிப்புக்கு உள்ளானார். சம்பவத்தில் பாதிக்கப்பட்ட இருவரும் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ந-9)

## பருத்தித்துறை 'பட்ஜெட்' நிறைவேறியது ஏகமனதாக

வடமராட்சி, டிசெ.20

பருத்தித்துறை நகரசபை வரவு - செலவுத் திட்டம் ஏக மனதாக நிறைவேற்றப்பட்டது.

சபைத் தலைவர் சட்டத்தரணி சபா.ரவீந்திரன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் அவர் வரவு - செலவுத் திட்டத்தை சமர்ப்பித்து உரையாற்றினார்.

சமர்ப்பிக்கப்பட்ட வரவு - செலவுத் திட்டத்தை ஆளும் கட்சி உறுப்பினர்களுடன் எதிரணி உறுப்பினர்களும் ஆதரித்ததைத் தொடர்ந்து ஏகமனதாக அது நிறைவேற்றப்பட்டது. (ந-8)

## வீதிகளின் விவரங்கள் திரட்டும் யாழ்.ஒருங்கிணைப்பு குழு

தென்மராட்சி, டிசெ.20

யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் அலுவலகத்தினால் மாவட்டத்தில் உள்ள அனைத்து வீதிகள் பற்றிய விவரங்களும் திரட்டப்படுகின்றன.

மாவட்ட உள்ளூராட்சி சபைகள், வீதி அபிவிருத்தி அதிகார சபை, வீதி அபிவிருத்தித் திணைக்களம் ஆகியவற்றினால் பராமரிக்கப்படும் வீதிகளின் விவரங்களையும் இவற்றில் புனரமைக்கப்பட வேண்டிய வீதிகளின் விவரங்களையும் தனித் தனியாக அனுப்பி வைக்குமாறு ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவர் சம்பந்தப்பட்ட நிறுவனத் தலைவர்களுக்கு அறிவித்துள்ளார். (ந-9)

# உடையார்கட்டு சந்தையில் அடிப்படை வசதி இல்லை

*வியாபாரிகளும், நுகர்வோரும் நெருக்கடி நிலையில்*

கிளிநொச்சி, டிசெ.20

முல்லைத்தீவு உடையார்கட்டு பொதுச் சந்தை போதிய அடிப் படை வசதிகள் இன்றி இயங்கி வருவதால் தாம் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வருவதாக வியாபாரிகளும், நுகர்வோரும் கவலை தெரி வித்துள்ளனர்.

புதுக்குடியிருப்பு பிரதேச சபை யின் கீழ் உள்ள உடையார் கட்டு பொதுச்சந்தையின் மரக் கறி, மீன் விற்பனை நிலை யங்களுக்கென கட்டடங்கள் அமைக்கப்பட்டுள்ள போதிலும் அங்கு குடிதண்ணீர் மற்றும் அடிப்படை வசதிகள் எவையும் ஏற்படுத்தப்படவில்லை. தற் போது சந்தைக் கட்டடத்தைச் சூழ மழை வெள்ளம் தேங்கிநிற் பதால் சந்தைக்குச் செல்ல முடி யாத நிலை காணப்படு கின் றது. வடிகால் அமைப்புக்கள் சீரின்மை காரணமாக பருவ மழை காலத்தில் வர்த்தக நிலையங்களுக்குள் வெள்ளநீர் புகும் நிலையும் காணப்படு கின்றது என வர்த்தகர்கள் தெரிவிக்கின்றனர்.

குடிதண்ணீர், மலசல கூட சுத்திகரிப்பு, சந்தைத் தேவை கள் ஆகியவற்றுக்குக்கூட தண் ணீர் வசதி இல்லை எனவும் வர்த் தகர்கள் தெரிவிக்கின்ற னர்.

எனவே பொதுச் சந்தைக்கான அடிப்படை வசதிகளை ஏற் படுத்தித்தருமாறு வியாபாரி கள் கோரிக்கை விடுத்துள் ளனர். (ஐ-06)

# ஓமந்தைப் பகுதியில் தொடரும் திருட்டுகள்

வவுனியா, டிசெ.20

வவுனியா ஓமந்தைப் பகுதி யில் இரண்டு வீடுகளில் பொருத் தப்பட்டிருந்த வெளிப்புற வாயில் கதவுகள் திருடிச் செல்லப்பட் டுள்ளன.

ஓமந்தை அரச ஊழியர் வீட் டுத்திட்ட பகுதியில் உள்ள வீடு களிலேயே இந்தத் திருட்டுச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. அண்மைக் காலமாக அரச ஊழியர் வீட்டுத் திட்டப் பகுதி யில் கட்டடப் பொருள்கள், விறகு கள், கதவு, கதவுநிலைகள், வேலி களில் காணப்படும் முட்கம்பி கள், சிமெந்திலான தூண்கள் என்பன திருட்டுப் போயுள் ளன. கடந்த வாரமும் இங்கு திருட் டுக்கள் இடம்பெற்றுள்ளன. அண் மையில் இங்குள்ள 2 வீடு களில் ஒரே இரவில் திருட்டுச் சம் பவங்கள் இடம்பெற்றுள்ளதால் அங்கு வசிக்கும் அரச ஊழியர் கள் அச்சம் அடைந்துள்ளனர்.

மேலும் இந்தப் பகுதியில் அடிக் கடி இடம்பெறும் திருட்டுச் சம்ப வங்களைத் தடுப்பதற்கு ஓமந் தைப் பொலிஸார் முன்வர வேண்டும் எனவும் அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ள னர். இதேவேளை, சந்தேகத் துக்கிடமான முறையில் நடமா டுபவர்கள் குறித்த தகவல்க ளைத் தமக்குத் தெரியப்படுத் துமாறு ஓமந்தைப் பொலிஸார் அரச ஊழியர்களிடம் கேட்டுக் கொண்டுள்ளனர். (க-402)

# வடக்கின் வசந்தத்தை எதிர்பார்க்கும் மக்கள்

முல்லைத்தீவு, டிசெ.20

மாமூலை கிராமத்தில் வடக் கின் வசந்தம் வீசமாட்டாதா என அங்கு வசிக்கும் மக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

தண்ணீரூற்றைஅண்டியபெரும் பாலான கிராமங்களுக்கு மின் சாரம் வழங்கப்பட்டுள்ளது. ஆனால் மாமூலைக் கிராமத் துக்கு மட்டும் மின்சார வசதி ஏற் படுத்திக் கொடுக்கப்படவில்லை. இதனால் நூற்றுக்கும் மேற் பட்ட குடும்பங்களைச் சேர்ந்த மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். இங்கு அரச உத்தியோகத்தர் கள் பலர் வசிக்கின்றனர். மேலும் இங்குள்ள மாணவர் களின் கற்றல் செயற்பாடுகள் மின்சார வசதியில்லாததால் பாதிக்கப்பட்டுள்ளன. இந்த நிலை யில் தமக்கும் வடக்கின் வசந் தம் மின்சாரம் கிடைக்காதா என இங்குள்ள மக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர். (க-500)

# இளைஞர் சேவைகள் மன்றத்தின் நிகழ்வு

*கிளிநொச்சி முரசுமோட்டையில்*

கிளிநொச்சி, டிசெ.20

கிளிநொச்சி முரசு மோட்டை கிராமத்தில் தேசிய இளைஞர் சேவை கள் மன்றத்தின் இளை ஞர் பரிமாற்ற வேலைத் திட்டத்தின் ஆரம்ப நிகழ்வு கடந்த செவ் வாய்க்கிழமை நடை பெற்றது.

தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் இளைஞர் பரிமாற்ற வேலைத் திட்டத்தின் கீழ் நடை முறைப்படுத்தப்பட்டு வரும் இளைஞர் பரி மாற்ற வேலைத் திட்டம் கடந்தசெவ்வாய்க்கிழமை ஆரம்பமாகி நாளை சனிக் கிழமை வரை நடைபெற வுள்ளது. கண்டி மாவட் டத்தில் இருந்து வருகை தந்த இளைஞர்கள், யுவதிகள் இதில் கலந்து கொண்டு சிரமதான வேலைத் திட்டங்களில் ஈடுபடுதல், சிநேகபூர்வ விளையாட்டு நிகழ்வு களில் கலந்து கொள்ளு தல், கிராம மக்களின் வாழ்வாதாரம் பற்றி கலந்துரையாடல்களில் ஈடுபடுதல் போன்ற செயற்பாடுகளில் பங்கு கொண்டனர்.

இதன் ஆரம்ப நாள் நிகழ்வு கடந்த செவ் வாய்க் கிழமை முற் பகல் 10 மணியள வில் கிளிநொச்சி முரசு மோட்டை அ.த.க. பாடசாலை மண்டபத் தில் கண் டாவளைப் பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் நடைபெற் றது. (ஐ-6)

# பௌர்ணமி தின விழாவில் முதியோருக்குக் கௌரவம்



நெடுங்கேணி வடக்கு கிராம சேவை அலுவலர் பிரிவில் உள்ள முதி யோர் சங்கத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற பௌர்ணமி விழாவில் முதி யோர்கள் கௌரவிக்கப்பட்டனர். சங்கத் தலைவர் வே.இராச ரத்தினம் தலைமையில் கடந்த 17 ஆம் திகதி பிற்பகல் ஒரு மணிய ளவில் கிராம பொதுநோக்கு மண்டபத்தில் இந்த விழா இடம்பெற்றது. இங்கு முதியவர்கள் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட் டது டன் மதியபோசனமும் வழங்கப்பட்டது. (க-435)

# புதுப்பொலிவுடன் மிளிரும் பூந்தோட்டம் மகா வித்தி.

*அதிபரின் முயற்சிக்குப் பெற்றோர் பாராட்டு*

வவுனியா, டிசெ.20

வவுனியா பூந்தோட்டம் மகா வித்தியாலயம் நன்கு புதுப் பொலிவுடன் அழகுடன் காணப் படுவதாக மாணவர் களின் பெற்றோர் மகிழ்ச்சி தெரிவிக் கின்றனர்.

இந்தப் பாடசாலையில் அலங் கார நுழைவாயில், அலுவல கம், வர்ணம் பூசப்பட்ட நிலை யில் காணப்படும் வகுப் பறை கள் என்பன வெகுநேர்த்தி யாகக் காணப்படுகின்றன. மேலும் பாடசாலைக்கு சுற்று மதில்களும் அமைக்கப் பட் டதையிட்டு பெற்றோர் மகிழ்ச்சி தெரிவித்துள்ளதுடன் அதற் காக பாடசாலை அதிபரையும் பாராட் டியுள்ளனர்.



கடந்த காலங்களில் போரினால் இடம்பெயர்ந்த மக்களின் நலன்புரி நிலையமாக இந்தப் பாடசாலை இருந்துள் ளது.

இதனால் பாடசாலைக் கட் டடங்களுக்குச் சேதங்கள் ஏற்பட்டன. பாட சாலையின் தற்போதைய அதிபர் பாடசா லையின் அபி விருத்திக்கு அரச, அரச சார் பற்ற நிறுவனங் களின் உத வியை நாடியதுடன் அர்ப் பணிப்புடன் நீண்ட நேரம் பாடசாலையில் தங்கி நின்று இரவு பகலாக கட்டடப் பணி களையும் மேற்பார்வை செய்து வந்துள்ளார்.

அதிபரின் அர்ப்பணிப்பான சேவையால் பாடசாலை இன்று அழகாகக் காட்சியளிக் கின்றது. மேலும் கற்றலுக்கான சூழலும் உருவாக்கப்பட்டுள் ளது.

இதேவேளை, பாடசாலை மாணவர்களால் ஒழுக்கம் சிறந்த முறையில் கடைப் பிடிக்கப்படுவதாகவும் பெற்றோர் தெரிவித்துள்ளனர். (க-402)

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை**
**வெளிவாரிப் பட்டப் பதிவுகள் மற்றும் பரீட்சைகள் அலகு**

## வெளிவாரிப் பரீட்சைகள்-2011

01.பொது மற்றும் சிறப்புக் கலைமாணி பகுதி-I-2011
02. பொது மற்றும் சிறப்புக் கலைமாணி பகுதி-II-2011

மேற்படி கலைமாணி பரீட்சைப் பெறுபேறுகள் வெளியாகியுள்ளன. இப்பரீட்சையில் சித்தியடையத் தவறிய பரீட்சார்த்திகளிடமிருந்து மீள் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் 15.01.2014 (புதன்கிழமை) வரை ஏற்றுக்கொள்ளப்படும். ஒவ்வொரு பாட அலகிற்கும் மீள்பரீட்சார்த்திகள் செலுத்த வேண்டிய பரீட்சைக் கட்டணம் ரூபா 200/= ஆகும். யாழ் பல்கலைக்கழகத்தில் இயங்கும் மக்கள் வங்கிக் கிளையில் ரூபா 100/= இனைச் செலுத்தியமைக்கான பற்றுச்சீட்டினை வெளிவாரிப்பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகில் சமர்ப்பித்து விண்ணப்பப்படிவத்தினைப் பெற்றுக் கொள்ளலாம்.

தபால் மூலம் விண்ணப்பப்படிவத்தினைப் பெற விரும்புவோர், நிதியாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் என்ற பெயருக்கு எழுதப்பட்ட ரூபா 100/= இக்கான காசுக் கட்டளை/ தபாற் கட்டளையை, சுயமுகவரியிடப்பட்ட ரூபா 40/= பெறுமதி யுடைய முத்திரை ஒட்டப்பட்ட 28X20 செ.மீ அளவுடைய தபால் உறையுடன் **உதவிப் பதிவாளர், வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி** என்ற முகவரிக்கு அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம்.

பரீட்சைகள் நடைபெறும் திகதி மற்றும் விவரங்கள் பின்னர் பத்திரிகைகளில் விளம்பரப்படுத்தப்படும்

குறிப்பு: கலைமாணிக் கற்கை நெறி தொடர்பாக கல்வியாண்டு 2011/2012 இருந்து அரையாண்டு பருவ அடிப்படையிலான கற்கைக் கால அளவுப் பெறுமதியிடப்பட்ட கற்கை அலகு முறைமை(Semester based course unit system and Grade Point Average evaluation) அறிமுகப்படுத்தப்படவிருப்பதால், ஏற்கனவே கலைமாணிக் கற்கை நெறிக்கு பழைய பாடத்திட்டத்தின் கீழ் பதிவுகளை மேற்கொண் டவர்கள், மேற்படி பரீட்சைகளுக்கு விண்ணப்பித்து, விரைவில் தங்கள் கற்கைநெறிகளைப் பூர்த்தி செய்யுமாறு கேட்டுக்கொள் ளப்படுகின்றீர்கள்.

மேலதிக விவரங்களைப் பெறவிரும்புவோர் 021-222 3612 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளலாம்.

பதிவாளர்
16.12.2013

(சி/10368)(3.6.4)

## வெளிநாடுகளுக்கான துரித தபால்கள் பொதிகள் சேவை

நத்தார், புதுவருட விசேட விலைக்கழிவு!

- 220ற்கு மேற்பட்ட நாடுகளுக்கான மிகக் குறைந்த கட்டணம்.
- வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், அன்பளிப்புப் பொருட்கள் .உணவுப் பண்டங்கள் என்பவற்றை மிகவிரைவாக அனுப்பிட.
- 1Kg மேற்பட்ட பொதிகளுக்கு மிகக் குறைந்த கட்டணம்

உங்கள் இல்லங்களில் இருந்தவாறே பொதிகளை அனுப்பிட தொடர்பு கொள்ளவும் 0766858509



வெளிநாடுகளில் இருந்து பொருட்களை இறக்குமதி செய்துகொடுக்கப்படும்.

3-5 வேலை நாட்களில் உரிய முகவரியில் ஒப்படைக்கப்படும்



**திருமுருகன் கொம் நெற்**

இல. 271A, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். 021 222 7835

இல.46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.
இல. 30, கனகபுரம் வீதி, கிளிநொச்சி
பிரதான வீதி, சங்கானை.
இல.18, பிரதான வீதி, நெல்லியடி. (HNP வங்கிக்கு அருகாமையில்)

TCN EXPRESS

# அழகுபடுத்தப்படுகிறது ஹிஸ்புல்லாஹ் மண்டப சுற்றுப்புறம்

மட்டக்களப்பு,டிசெ.20

மட்டக்களப்பு கல்முனை காத்தான்குடி பிரதான வீதியில் அமைக்கப்பட்டுள்ள ஹிஸ்புல்லாஹ் மண்டபத்தை அண்மித்த பகுதிகளை அழகுபடுத்தும் அபிவிருத்தி வேலைகள் துரிதமாக இடம்பெற்று வருகின்றன.

"எனது நிதி ஒதுக்கீட்டில் பிரமிக்க வைக்கும் வகையில் ஹிஸ்புல்லாஹ் மண்டபத்தினை அண்மித்த பகுதிகளை உருவாக்க நடவடிக்கை எடுக்கப்படும்" என்று மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக்குழுவின் தலைவரும், பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சருமான எம். எல். ஏ.எம் ஹிஸ்புல்லாஹ் தெரிவித்தார்.

இந்த வேலைகள் இடம்பெறும் பகுதிகளை பிரதி அமைச்சர் ஹிஸ் புல்லாஹ் தலைமையில் கிழக்கு மாகாணசபை உறுப்பினர் சிப்லி பாரூக், காத்தான்குடி நகரசபைத் தவிசாளர் எஸ். எச்.எம்.அஸ்பர் உட்படப் பலர் சென்று பார்வையிட்டனர். (ச)



"-"

பிர மிக்க வைக் கும் வகையில் அழகுபடுத் தப்பட்ட வருகிறது ஹிஸ்புல்லாஹ் மண்டபப் பகுதி.

# இனவிரோத கருத்தை வெளியிட வேண்டாம்

*கோருகிறது கூட்டமைப்பு*

கல்முனை,டிசெ.20

கல்முனை தமிழ் பிரதேச செயலகம் குறித்து முஸ்லிம் அரசியல்வாதிகள் இன விரோத கருத்துக்களை வெளியிடுவதைத் தவிர்க்க வேண்டும் என்று மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் தெரிவித்தார்

கல்முனை தமிழ் பிரதேச செயலகம் தொடர்பில் தற்போது ஏற்பட்டுள்ள பிரச்சினை குறித்து அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

இந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:- கடந்த சில நாள்களாக கல்முனை தமிழ் பிரதேச செயலகம் குறித்து தமிழ்- முஸ்லிம் அரசியல்வாதிகள் தமது கருத்துக்களை கூறி வருகின்றனர்.

அதில் சில முஸ்லிம் அரசியல்வாதிகள் வெளியிடும் கருத்துக்கள் தமிழ் மக்களின் மனதை புண்படுத்துவதாக அமைந்துள்ளது.

கல்முனை தமிழ் பிரதேச செயலக பிரிவை தரமுயர்த்த பல்வேறு முயற்சிகள் எடுக்கப்பட்டுவரும் நிலையில் அதற்கு முஸ்லிம் அரசியல்வாதிகள் பல்வேறு தடைகளை ஏற்படுத்தி வருகின்றனர். அதன் மூலம் தமிழ்- முஸ்லிம் மக்களின் ஒற்றுமையை சீர்குலைக்கவே அவர்கள் முயலுகின்றனர்.

எனவே இந்த விடயத்தில் முஸ்லிம் பிரதிநிதிகள் தமது இன விரோத கருத்துக்கள் வெளியிடுவதைத் தவிர்க்க வேண்டும்.- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

# முட்டுக்கட்டை போட்டால் பொறுமை காக்க முடியாது

*கல்முனை மாநகரசபை உறுப்பினர் எச்சரிக்கை*

கல்முனை,டிசெ.20

கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தைத் தரமுயர்த்த முஸ்லிம் பிரதி நிதிகள் முட்டுக்கட்டை போட்டால் இனியும் பொறுமைகாக்க முடியாது. முஸ்லிம் காங்கிரஸின் சில அரசியல்வாதிகளால் தெரிவிக்கப்படும் கருத்துக்கள் முன்னுக்குப்பின் முரணாக உள்ளதுடன் இனமுறுகலை ஏற்படுத்தும் விதமாகவும் அமைந்துள்ளன.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கல்முனை மாநகரசபைஉறுப்பினர்எஸ்.ஜெயக்குமார் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:- கல்முனை வடக்கு தமிழ் பிரதேசசெயலகத்தைத்தரமுயர்த்தலுக்கு முஸ்லிம் அரசியல்வாதிகள் முட்டுக்கட்டைபோடுவதன் நியாயம் என்ன என்று தெரியாமல் இருக்கின்றது.

தமிழ், முஸ்லிம் மக்கள் மத்தியில் இனமுறுகலை ஏற்படுத்த முஸ்லிம் அரசியல் வாதிகள் முயலுகின்றனர். அவர்களது நடவடிக்கையை நாங்கள் பொறுத்திருந்து வேடிக்கை பார்க்கத் தயாராக இல்லை.

கல்முனை வாழ் தமிழ் மக்களின் ஏகோபித்த முடிவு எதுவாக உள்ளதோ அதுவே எங்களின் இறுதி முடிவாகும்.


கல்முனை வாழ் தமிழர்களுக்கு 30 வருட காலமாக சகல ஆளணி, பௌதிக மற்றும் ஏனைய வளங்களுடன் இயங்கும் இந்தப் பிரதேச செயல கத்தைத் தரமு யர்த்துவதால் முஸ்லிம் பிரதி நிதிகளுக்கு என்ன பாதிப்பு ஏற்படப்போகின்றது என்பது புரியாத புதிராகத் தான் உள்ளது.

அவர்களது நடவடிக்கையை நோக்கும்போது, அரசு தமது இனத்துக்கு மாத்திரமே சகல அபிவிருத்தி, மக்கள் நலன் சார்ந்தசெயற்பாடுகளைச் செய்ய வேண்டுமே தவிர தமிழ் மக்களுக்கு செய்ய நினைத்தால் அதனைத் தடுப்பதாகவேயுள்ளது.- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

"-"

பிரதேச செயலகத்தைத் தரமுயர்த் துவதால் முஸ்லிம் பிரதிநிதிகளுக்கு என்ன பாதிப்பு ஏற்படப் போகின்றது என்பது புரியாத புதிராகத்தான் உள்ளது.

# மரண அறிவித்தல்



## அந்தோனிப்பிள்ளை யோசப் யூலியன்

சங்கானை வீதி, அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அந்தோனிப்பிள்ளை யோசப் யூலியன் 17.12.2013 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அந்தோனிப்பிள்ளை - அக்னேஸ் தம்பதியரின் செல்வப் புதல்வனும், கபிரியேல்பிள்ளை - தெரேசம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், நீற்றாவின் அன்புக் கணவரும், பானுஜியின் பாசமிகு தந்தையும், வசந்தி, மேரி மெற்றில்டா (பபா - கனடா), றாஜன் (கனடா), கிறேசியன் (பிரான்ஸ்), வனஜா (லண்டன்), வசந்தன் (கனடா), வத்சலா (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும், லோறா கிறேஸ் (லண்டன்), மேரி சுசிலா ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (21.12.2013) சனிக்கிழமை பி.ப.3.00 மணியளவில் புனித சூசையப்பர் ஆலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுத்த பின்னர் பூதவுடல் புனித சூசையப்பர் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சங்கானை வீதி, அச்சுவேலி.

TP-0777299990/0212058502

தகவல்: குடும்பத்தினர்

(42740)(12.3-6)

# கல்முனையைக் கூறுபோட்டால் இனமுரண்பாடு உருவாகலாம்

*கிழக்கு மாகாணசபை உறுப்பினர் கருத்து*

பேரினவாதச் சக்திகளுடன் இணைந்து கல்முனையை கூறுபோட்டால் தமிழ்- முஸ்லிம் மக்கள் மத்தியில் இன முரண்பாடுகளை உருவாகலாம் என்று கிழக்கு மாகாணசபை உறுப்பினர் ஏ.எம்.ஜெமீல் தெரிவித்தார்.

கல்முனை தமிழ் பிரதேச செயலகம் தொடர்பில் எழுந்துள்ள சர்ச்சை குறித்து அவர் விடுத்துள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:- கல்முனைப் பிரதேசத்தில் தமிழர்களும் முஸ்லிம்களும் பல்லாண்டு காலமாக ஒற்றுமையுடன்- அன்னியோன்னியமாக வாழ்ந்து வருகின்றனர்.

இந்தச் சூழ்நிலையில் தமிழ் பிரதேச செயலகம் என்ற போர்வையில் இரு சமூகத்தினரையும் பிரிக்க எத்தனிப்பது கண்டனத்துக்கு உரிய விடயமாகும்.

இன்று வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தமிழ், முஸ்லிம் சமூகங்கள் இரண்டும் ஒன்றிணைந்து சிறுபான்மைச் சமூகத்தினரின் பிரச்சினைகளுக்காக கூட்டாக குரல் எழுப்புகின்ற சூழல் ஏற்பட்டிருக்கின்ற நிலையில், கல்முனை தமிழ் பிரதேச செயலக விடயத்தில் பேரினவாத சக்திகளும் அரசும் முண்டியடித்துக் கொண்டு செயற்படுவதன் நோக்கம் இரு சமூகங்களையும் நிரந்தரமாகப் பிரித்து விடவேண்டும் என்பதைத் தவிர வேறெதுவும் இருக்கமுடியாது.



தமிழ் சமூகத்தினரின் உரிமைகள் மற்றும் அபிலாஷைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதற்காக எமது முஸ்லிம் காங்கிரஸ் நாடாளுமன்றத்திலும் சர்வதேச மட்டத்திலும் குரல் கொடுத்து வருகின்றது.

13ஆவது திருத்தம் மற்றும் மாகாண சபைகளுக்கான அதிகாரங்களை அரசு இல்லாதொழிக்க முற்பட்டபோது அதற்கெதிராக முஸ்லிம் காங்கிரஸ் அமைச்சரவையில் தனித்து நின்று குரல் எழுப்பி- தடுத்து நிறுத்தியதை கூட்டமைப்பு இலகுவில் மறந்து விட முடியாது.-என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

# பிரதேச செயலர்களுக்கு கிழக்கில் இடமாற்றம்

அம்பாறை,டிசெ.20

அம்பாறை மாவட்டத்திலுள்ள ஐந்து பிரதேச செயலர்கள் உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் இடமாற்றப்பட்டுள்ளனர். இந்த இடமாற்றம் பொது நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சினால் வழங்கப்பட்டுள்ளது.

நிந்தவூர், சாய்ந்தமருது, சம்மாந்துறை, அட்டாளைச்சேனை, இறக்காமம் ஆகியவற்றின் பிரதேச செயலாளர்களே இவ்வாறு இடமாற்றப் பட்டுள்ளனர்.

இதன் அடிப்படையில் அட்டாளைச்சேனை பிரதேச செயலாளராக கடமையாற்றும் ஐ.எம். ஹனீபா நிந்தவூர் பிரதேச செயலகத்துக்கும், சாய்ந்தமருது பிரதேச செயலாளராக கடமையாற்றும் ஏ.எல். எம். சலீம் சம்மாந்துறை பிரதேச செயலகத்துக்கும், சம்மாந்துறை பிரதேச செயலராக கடமையாற்றும் ஏ.மன்சூர் அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்துக்கும், நிந்தவூர் பிரதேச செயலாளராக கடமையாற்றும் றிபா உம்மா அப்துல் ஜலீல் இறக்காமம் பிரதேச செயலகத்துக்கும், இறக்காமம் பிரதேச செயலாளராக கடமையாற்றும் ஏ.எல்.எம்.நஸீர் சாய்ந்தமருது பிரதேச செயலகத்துக்கும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். (ச)



பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் பட்டப்படிப்புக் காலம் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து கொழும்பிலுள்ள பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு முன்னால் ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

## விடைத்தாள் மதிப்பீடு 30 இல் ஆரம்பம்

கொழும்பு.டிசெ.20


தற்போது நாட்டில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சை முடிவுற்றதும் விடைத்தாள் மதிப்பீடு செய்யும் முதலாம்கட்டப் பணிகள் எதிர்வரும் 30 ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளது என்று பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் டபிள்யூ. எம்.என்.ஜே.புஸ்பகுமார அறிவித்துள்ளார்.

இந்த முறை ஜி.சீ.ஈ. பரீட்சைக்கு முன்னொரு போதும் இல்லாத அளவுக்கு 5 லட்சத்து 78 ஆயிரத்து 140 பரீட்சார்த்திகள் தோற்றுகின்றனர். இந்தப் பரீட்சார்த்திகளின் விடைத்தாள்கள் மதிப்பீட்டை, நாடளாவிய ரீதியில் 56 மதிப்பீட்டு நிலையங்களை நிறுவுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்று அவர் கூறினார்.

விடைத்தாள்கள் மதிப்பீட்டுக்கான பிரதம பரீட்சகர், உதவிப் பரீட்சகர்களுக்கான 1 ஆம் கட்ட நியமனக் கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

அவற்றில் குறிப்பிடப்பட்ட அறிவுறுத்தல்களைக் கடைப்பிடித்து 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பகிரங்க பரீட்சை சட்டத்தின் சகல சட்ட விதிகளுக்கும், 1976 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பரீட்சைகள் கட்டணங்களுக்கிணங்க விடைத்தாள் மதிப்பீடு தொடர்பான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

பரீட்சகர்கள் தினமும் காலை 8



மணிமுதல் மாலை 4.30 மணிவரை மதிப்பீட்டுக் குழுவினுள் முழு நேரக் கடமை புரிவதோடு இந்த மதிப்பீட்டுப் பணி எதிர்வரும் 30 ஆம் திகதி முதல் 07 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.(ச)

## சூதாட்ட விடுதித் திட்டம் வேறு வடிவில் சமர்ப்பிப்பு

கொழும்பு,டிசெ.20

முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சினால் சபையில் சமர்ப்பிக்கப்பட்டு பின்னர் வாபஸ் பெறப்பட்ட கஸினோவை ஆரம்பிக்கும் திட்டம் பௌர்ணமி நாளில் அவசரமாகக் கூடிய அமைச்சரவைக் கூட்டத்தில் வேறு வடிவில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்று நேற்றுமுன்தினம் நாடாளுமன்றில் சுட்டிக்காட்டினார் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரும் பொருளியல் நிபுணருமான ஹர்ஷ டி சில்வா.

நாடாளுமன்றில் நேற்று முன்தினம் நடைபெற்ற தெரிவுக் குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்ட அமைச்சுகள் மீதான குழுநிலை விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இந்தத் தகவலை வெளியிட்டார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஜேம்ஸ் பக்கருக்கு கஸினோவை ஆரம்பிப்பதற்கு வரிவிலக்களிக்குமாறு கோரும் யோசனையை பௌர்ணமி நாளில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன சமர்ப்பித்துள்ளார்.

2013, ஜூலை மாதம் 18ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட யோசனையில் 400 அறைகளுடன் பந்தய வசதிகளுடனான நிலையம் எனக் கூறப்பட்டிருந்தது.

மாநாயக்க தேரர்கள், பேராயர் ஆகியோர் இத்திட்டத்துக்கு எதிர்ப்பை வெளியிட்டனர். இதனால் குறித்த அமைச்சினால் அது மீளப் பெறப்பட்டது. ஆனால், தற்போது அதி நவீன சுற்றுலா விடுதித் தொகுதி என்ற போர்வையில் முன்னர் சமர்ப்பிக்கப்பட்டிருந்த கஸினோத் திட்டம் மீளக் கொண்டு வரப்பட்டுள்ளது.-என்றார்.(ச-சி)

# பிரதமருக்கு எதிராக அரச உயர்பீடம் சதி

## *சபையில் ஐ.தே.க. குற்றச்சாட்டு*

கொழும்பு,டிசெ.20

"பிரதமர் டி.எம்.ஜயரட்னவுக்கு எதிராக அரச உயர்மட்டத்தில் சதி மேற்கொள்ளப்படுகிறது" என்று ஐ.தே.க.வின் மாத்தறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர நேற்றுமுன்தினம் சபையில் தெரிவித்தார்.



போதைப்பொருள் விவகாரத்தில் பிரதமர் பதவி விலக வேண்டும் என்று வலியுறுத்தப்படுகின்றதே தவிர, அந்தப் போதைப்பொருள் கொள்கலனை இலங்கைக்குக்கொண்டு வந்தவர் யார்? அதை இங்கு விநியோகிக்கப் போகிறவர் யார்? என்று ஆராய்ந்து பார்க்கிறார்கள் இல்லை என்றும் அவர் தெரிவித்தார்.

நாடாளுமன்றில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற தெரிவுக் குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்ட அமைச்சுகள் மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை ஆட்சிக்குக் கொண்டு வருவதற்காகப் போராடியவர்களுள் நானும் ஒருவன். அப்போது எமக்குத் தலைமை தாங்கிய ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களுக்கு எதிராக இன்று அரசில் பல நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

அரச உயர்மட்டத்தில் பிரதமர் டி.எம்.ஜயரட்னவுக்கு எதிராக சதி முன்னெடுக்கப்படுகிறது. உயர் பீடத்திலிருந்து வரும் உத்தரவுக்கு அமையவே பொதுபலசேனா, ஜாதிக ஹெல உறுமய என்பன செயற்படுகின்றன. இவை இரண்டும் பாதுகாப்பு அமைச்சுக்கு மிக நெருக்கமானவையாகும்.

போதைப்பொருள் விவகாரத்தில் பிரதமரின் இணைப்புச் செயலாளர் ஒரு கடிதம் எழுதியுள்ளார். அது தவறு. இருப்பினும், துறைமுக அமைச்சராக நானும் இருந்துள்ளேன். சபாநாயகரே! நீங்களும் இருந்துள்ளீர்கள்.

இதன்போது எமது மேசைக்கு களஞ்சியசாலை வரி தொடர்பான பல கடிதங்கள் தினமும் வரும். அந்தக் கடிதங்கள் துறை முகப் பணிப்பாளருக்கு ஆற்றுப்படுத்தப்பட்டு - பின்னர் அமைச்சின் செயலாளருக்கு ஆற்றுப்படுத்தப்பட்டு அவரால் பரிசீலனை செய்யப்பட்ட பின்னரே அமைச்சருக்கு அனுப்பப்படும். பின்னர் அந்தக் கடிதங்களில் அமைச்சர் கைச்சாத்திடுவார். அவர் கைச்சாத்திட்டால்தான் அந்தக் கடிதம் செல்லுபடியாகும்.

ஆனால், இன்று இந்தக் கடித விவகாரம் ஒரு சர்ச்சையாக இருக்கிறது.- என்றார். (ச-சி)

## தமிழில் தேசிய கீதத்தை பாடுவதைத் தடுக்கமுடியாது

கொழும்பு,டிசெ.20

"இலங்கையில் தமிழ் மொழியில் தேசிய கீதம் பாடுவதை தடுத்து நிறுத்த எவருக்கும் உரிமையில்லை" என்று இடதுசாரிகள் தெரிவித்துள்ளனர்.

தமிழ் மொழியில் தேசிய கீதம் இசைக்கப்படக் கூடாது என்று சில சிங்கள அமைப்புகள் தெரிவித்துள்ளன. இதற்கு தமிழ் அரசியல் வாதிகள் சிலர் கடுமையான எதிர்ப்பைத் தெரிவித்ததோடு, வடக்கு, கிழக்கில் சிங்கள மொழியிலான தேசிய கீதத்தை பாட முடியாது என்றும் கூறியுள்ளனர்.



இதுதொடர்பில் நவசமசமாஜக் கட்சியின் பொதுச் செயலர் விக்கிரபாகு கருணாரத்ன தெரிவித்ததாவது:-

"தற்போது நாட்டில் பெரும் குழப்பநிலையே காணப்படுகிறது. வடக்கில் போர் முடிவடைந்தவுடன் நிறைவேற்றுவதற்காகக் கூறிய எந்தவொரு ஒரு செயற்திட்டத்தையேனும் அரசு இது வரையிலும் நிறைவேற்றவில்லை. வடக்கில் இன்னமும் இராணுவ ஆளுநரைக் கூட மாற்ற வில்லை. ஆளுநரை மாற்றாவிடின் தானே தன்னிச்சையான அதிகாரங்களுடன் செயற்பட வேண்டி ஏற்படும் என வடக்கு முதல்வர் விக்னேஸ்வரன் தற்போது அரசுக்கு எச்சரிக்கை விடுத்துள் ளார். இதை நாம் ஏற்றுக் கொள்கிறோம். அவர் அவ்வாறு செயற்பட்டேனும் தமிழர்களுக்கு மறுவாழ்வை அளிக்க வேண்டும்.

இதுபோன்ற பிரச்சினைகளுக்கு நடுவே தற்போது தேசிய கீதப் பிரச்சினையும் ஏற்பட்டுள்ளது. எம்மைப் பொறுத்த வரை இலங்கையில் நிச்சயமாக தமிழ் மொழியில் தேசிய கீதத்தைப் பாடவேண்டும்.
-என்றார். (ச-சி)

# உண்மை நல்லிணக்க ஆணைக்குழு; இலங்கையில் அமைக்க நடவடிக்கை


## *ஆராய்கிறது அரசு என்கிறார் கெஹலிய*

யாழ்ப்பாணம், டிசெ. 20

உண்மை நல்லிணக்க ஆணைக்குழுவை இலங்கையிலும் அமைப்பது தொடர்பில் அரசு ஆராய்ந்து வருகிறது என ஊடகத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

ஏற்கெனவே இலங்கையில் உள்ள கட்டமைப்புக்களை அடிப்படையாகக் கொண்டு இதனை அமைக்கும் முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பு நேற்று முன்தினம் இடம்பெற்ற போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.



தென்னாபிரிக்காவின் உண்மை நல்லிணக்க ஆணைக்குழுவைப் போல ஒன்றை உருவாக்குவதற்கான சாத்தியங்கள் குறித்து நாம் தீவிரமாக

" - "

**தென்னாபிரிக்காவின் உண்மை நல்லிணக்க ஆணைக் குழுவைப் போல ஒன்றை உருவாக்குவதற்கான சாத்தியங்கள் குறித்து நாம் தீவிரமாக ஆலோசித்து வருகிறோம்.**

ஆலோசித்து வருகிறோம். இது குறித்து அரச உயர் மட்டத்தில் கலந்துரையாடப்பட்டுவருகிறது. ஏற்கெனவே உள்ள கட்டமைப்புகளைக் கொண்டு அதனை எம்மால் உருவாக்க முடியும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

இதே வேளை, உண்மை நல்லிணக்க ஆணைக் குழுவை அமைப்பதற்கு தென்னாபிரிக்காவின் உதவியைப் பெறுவது குறித்து அந்த நாட்டு அதிகாரிகளுடன் இலங்கை அரசு பேச்சுக்களை நடத்திபிருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. (ச-5)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## நாட்டை நல்வழியில் இட்டுச்செல்ல தெற்கின் தலைவர்கள் மனம் கொள்வது எப்போது...?

தமிழர் ஒருவருக்கு சிங்கள மொழியில் மட்டும் கடிதம் எழுதுவது அவரைக் கத்தியால் குத்துவதற்கு ஒப்பானது.

இவ்வாறு கருத்து வெளியிட்டுள்ளார் அமைச்சர் வாசுதேவ நாணயக்காரா. தேசிய மொழிகள் மற்றும் சமூக நல்லிணக்க அமைச்சுக்கான நிதி ஒதுக்கீட்டின் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு, நாடாளுமன்றில் பேசுகையிலேயே அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார்.

சிங்கள மக்கள் முழுமையாக வாழும் பகுதிகளில் தமிழிலும், தமிழ் மக்கள் முழுமையாக வாழும் பகுதிகளில் சிங்களத்திலும் கருமங்களை முன்னெடுத்துச் செல்வது எந்த வகையிலும் பொருந்தாது-

நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரையின் பிரகாரம், பிரதேச விவகாரங்களைக் கையாள்வதற்கு எமது அமைச்சின் கிளைகள் அமைக்கப்படும்-

மேற்கண்ட கருமங்கள் செவ்வனே ஒப்பேறினாலும் சிங்கள மக்கள் முழுமையாக வாழும் பகுதிகளில் தமிழ் மொழியிலும், தமிழ் மக்கள் முழுமையாக வாழும் பகுதிகளில் சிங்கள மொழியிலும், அலுவல்களை முன்னெடுத்துச் செல்வது பொருந்தாது. அவற்றுக்கு நிதி செலவு செய்வதும் பொருந்தாது-என்றும் அமைச்சர் தமது உரையில் விரிவாக விளக்கி உள்ளார்.

அவற்றுக்கும் மேலாக-

சிங்கள மக்களின் ஒத்துழைப்பும் இணக்கப்பாடும் இன்றி, தமிழ் மக்களின் அரசியல் உரிமை சார்ந்த பிரச்சினைகளுக்குத் தீர்வு காணமுடியாது-

அதேபோன்று, தமிழ் மக்களின் ஒத்துழைப்பு இல்லாமல் தேசிய ஒருமைப்பாட்டை நாட்டில் ஏற்படுத்த இயலாது-என்றும் அமைச்சர் அறுத்து உறுத்துக் கூறியுள்ளார்.

நாட்டுக்குத் தீங்கு விளைவிக்கும், ஒவ்வாத இனவாதத்தைத் தென்னிலங்கையில் தூண்டி, சிங்கள மக்களின் வாக்குகளைப் பெற்று, அரச பீடம் ஏறிவிட வேண்டும் என்ற நோக்குடன், பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த தீவிரவாதத் தலைவர்கள், உசுப்பி உலுக்கிச் செயற்பட்டு வித்திட்டதன் விளைவே, இப்போது அது ஊதிப் பெருத்து நாட்டின் ஒட்டுமொத்த முன்னேற்றத்துக்கு தடையாக உள்ளது. அதுவே உண்மையும் ஆகும்.

இந்தச் சிறிய தீவில் வாழும் மக்களை, ஒன்று சேர்த்து ஒருங்கிணைத்து, அவர்களை வளர்ச்சிப் பாதையில் இட்டுச் செல்வதற்குப் பதிலாக, பெரும்பான்மை மற்றும் சிறுபான்மை இன மக்களை வெவ்வேறு வழி நடக்க வைத்த பாவம் சிங்கள அரசியல் தலைவர்களேயே சாரும்.

பெரும்பான்மை இனத் தலைவர்கள், தமக்கான அரசியல் இலாபங்களையும் பதவிகளையும் முன்னிறுத்திச் செயற்பட்டதன் விளைவே, இன்று இந்த நாட்டில் மொழிப் பிரச்சினை பூதாகாரமாக எழுந்து நிற்பதற்கான மூலகாரணம்.

தமது ஒக்ஸ்பேர்ட் பல்கலைக்கழக கல்வியை முடித்துக் கொண்டு வந்த எஸ்.டபிள்யு.ஆர்.டி.பண்டாரநாயக்கா, இலங்கைக்கு சமஷ்டி ஆட்சி முறையே உகந்தது என்று கூறி வந்ததை மாற்றி-

ஆட்சிக் கட்டிலில் ஏறும் நோக்கத்துடன் தனிச் சிங்களச் சட்டத்தைக் கொண்டு வந்தார். அவரது அத்தகு பேராசை, இனக் கலவரங்கள், ஆயுதப் போராட்டங்கள் என்ற பலவகை துன்பியல் நிகழ்வுகளை இந்த நாட்டில் ஈன்றெடுத்தது.

அவ்வாறிருந்த போதிலும், அதனைப் பகுத்தறிந்து, அதன் ஒவ்வாத (Negative) பெறுபேறுகளைத் தடுப்பதற்கு, தவிர்ப்பதற்கு சிங்கள அரசியல் தலைமைகள் முன்வருவதற்கு எந்த வகையான சிறு சமிக்ஞை, ஒரு சிறு ஒளிக்கீற்றுத்தானும் இந்த நாட்டில் தென்படுவதாக இல்லை. இனப் பாகுபாடும், மொழி வேற்றுமையும் ஊதிப் புடைக்கும் போக்கே மேன்மேலும் உயர்ந்து செல்கிறது. தேசிய கீதத்தைத் தமிழில் இசைக்கத் தடையெனில், வடக்கு, கிழக்குத் தழிழருக்கு அது தேவையில்லை என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தெரிவித்துள்ளது. இது குறித்து நாடாளுமன்றத்திலும் அழுத்திக் கூறப்பட்டுள்ளது.

வடக்கு, கிழக்கில் தமிழ் மொழி அரச கரும மொழியாக இருக்கிறது என அமைச்சர் கூறுகிறார். ஆனால் அங்கு தேசிய கீதத்தைத் தமிழில் இசைக்க முடியாதிருக்கிறது. சிங்களத்தில் பாடுமாறு வற்புறுத்தப்படுகின்றது.

அதற்கும் அப்பால் தமிழ்மொழி பேசும் அரசியல் தலைவர்கள், மதத் தலைவர்கள், நல்லிணக்கத்துக்கான எதிர்பார்ப்புக்களை முன்வைக்கும் இடத்து அவர்களுக்கு புலிச் சாயம் பூசப்படுகின்றது.

வெளிநாட்டினர் மனித உரிமை, குற்ற விசாரணை பற்றி உகந்த கருத்துக்களை முன்வைத்தாலும் ஏகாதிபத்தியவாத முத்திரை குத்தப்படுகின்றது.

உலக ஒழுங்குக்கும், நியதிகளுக்கும் அமைய ஒரு நீதியான தீர்வினை முன்வைத்து, அதனை சகல தரப்பினரும் ஏற்றுக்கொள்ளச் செய்து, நாட்டை நல்வழியில் இட்டுச் செல்வதே இப்போதைய முதன்மையான தேவை. சிங்கள அரசுத் தலைமைகளின் கைகளிலேயே அது முழுக்க முழுக்கத் தங்கியுள்ளது.



# மண்டேலாவின் வழியை பின்பற்றுமா இலங்கை?

தொல்காப்பியன்

இந்த நூற்றாண்டின் இணையற்ற மனிதராகப் போற்றப்படும் நெல்சன் மண்டேலாவின் மறைவு குறித்துத் தான், கடந்த பத்து நாள்களுக்கும் மேலாக உலகெங்கும் பேசப்பட்டு வருகிறது. இந்தளவுக்கும் நெல்சன் மண்டேலாவினது இழப்பு ஒன்றும் திடீரென நிகழ்ந்த ஒன்று அல்ல. அவர் பல மாதங்களுக்கு முன்னரே கடுமையாக சுகவீனமுற்று, உயிருக்குப் போராடி வந்தார். நவீன மருத்துவ வசதிகளும், கடினமான சிறைவாழ்வு உடலுக்குக் கொடுத்திருந்த உரமும் தான் அவர் இத்தனை காலமும் உயிர்வாழக் காரணமாகின. சில மாதங்களுக்கு முன்னர், நெல்சன் மண்டேலா உயிருக்குப் போராடிக்கொண்டிருந்தபோது, செய்தியை வழங்குவதில் தாம் முந்திக் கொள்ள வேண்டும் என்று கருதிய - விசமத்தனமான ஊடகங் கள் சில அவர் சாவடைந்து விட்ட தாகவே செய்திகளை வெளியிட்டன. இதுமட்டுமன்றி, மண்டேலா சாவடைந்து விட்டதாக, தனது உதவியாளர் கூறியதை நம்பி, அமெரிக்க முன்னாள் அதிபர் ஜோர்ஜ் புஷ், இரங்கல் தெரிவித்து விட்டு பின்னர் மன்னிப்பும் கேட்டுக் கொண்டார். இப்படியாக நெல்சன் மண்டேலாவின் மறைவு எதிர்பார்க்கப்படாத ஒன்றாக அமையாத போதிலும், அவரது மறைவு அவரது செயல்முறைகளைப் பின்பற்ற வேண்டும் என்ற கருத்தை உலகெங்கும் மீள வலியுறுத்தும் ஒன்றாக மாறியுள்ளது. அதிலும் குறிப்பாக, இலங்கை விவகாரத்தில், நெல்சன் மண்டேலாவின் நல்லிணக்க வழிமுறையைச் சிறந்த முன்னுதாரணமாக எடுத்துக்கொள்ளப்பட வேண்டும் என்று பல்வேறு தரப்பினரும் வலியுறுத்த ஆரம்பித்துள்ளனர்.

### தென்னாபிரிக்காவைப் பின்பற்ற வேண்டும்

நெல்சன் மண்டேலாவின் மறைவுக்குப் பல மாதங்கள் முன்னதாகவே, தென்னாபிரிக்காவின் நல்லிணக்க வழிமுறையைப், பயன்படுத்தி இலங்கையிலும் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கான முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. இதன் ஒரு கட்டமாக, தென்னாபிரிக்காவின் சர்வதேச உறவுகளுக்கான பிரதி அமைச்சர் இப்ராகிம், இரண்டு தடவைகள் இலங்கைக்கும் வந்து சென்றிருந்தார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்களை தென்னாபிரிக்காவுக்கு அழைத்துப் பேச்சுக்கள் நடத்தப்பட்டன. ஆனால், இடையில் நீண்டகாலம் எந்த முன்னேற்றமும் இல்லாமல் ஒரு தேக்க நிலை காணப்பட்டது. அண்மையில், பொதுநலவாய மாநாட்டுக்காக கொழும்பு வந்திருந்த தென்னாபிரிக்க ஜனாதிபதி ஜேக்கப் சூமா, தென்னாபிரிக்காவின் உண்மை நல்லிணக்க ஆணைக் குழு போன்ற ஒரு செயல்முறையின் மூலம், இலங்கையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கான ஒரு திட்டத்தை அரசிடமும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடமும் முன்வைத்திருந்தார்.

ஜெனீவாவில் இலங்கைக்கு எதிரான கடுமையான நிலைப்பாட்டை அமெரிக்கா, பிரிட்டன் போன்ற நாடுகள் முன்னெடுக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்ற சூழலில், தென்னாபிரிக்காவின் இந்த நல்லிணக்க முயற்சிகளை அரசு ஏற்கலாம் என்ற சூழல் அவதானிக்கப்பட்டது. ஆனாலும், அதுவும் கூட எதிர்பார்க்கப்பட்ட வகையில் இடம்பெறவில்லை. தென்னாபிரிக்க பிரதி அமைச்சர் இப்ராகிம் இந்த மாதத் தொடக்கத்தில் கொழும்பு வரும் பயணத் திட்டம் பிற்போடப்பட்ட நிலையில் தான், நெல்சன் மண்டேலாவின் மறைவு இடம்பெற்றுள்ளது. நெல்சன் மண்டேலாவின் மறைவுக்குப் பின்னர், அவரது நல்லிணக்க செயல்முறையை போற்றிக் கருத்து வெளியிட்டவர்கள் பலரும், இலங்கைக்கான அதன் பொருத்தப்பாடு குறித்து எடுத்துக் கூறியிருந்தனர். இந்தக் கருத்து உள்நாட்டில் மட்டுமன்றி வெளிநாட்டுத் தலைவர்களாலும் கூட எடுத்துக் கூறப்பட்டுள்ளது. காயங்களை ஆற்றுவதற்கு நெல்சன் மண்டேலாவின் செயற்முறையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதை விட வேறெந்த வழியும் இலங்கைக்கு இருக்க முடியாது என்று பிரிட்டன் பிரதிப் பிரதமர் நிக்கொலஸ் கிளெக் தெரிவித்திருந்தார்.

### வெற்றி பெற்றவர்களிடம் இருந்து நல்லிணக்கம் உருவாக்கப்பட வேண்டும்

பல தசாப்தங்களாக தென்னாபிரிக்காவில் ஊறிப் போயிருந்த நிறவெறியும், அதற்கெதிரான போராட்டங்களும், மண்டேலாவின் சாதுரியத்தினால் தான், முழுமையாக தீர்க்கப்பட்டன. இன்றும் சரி, என்றும் சரி, ஒரு போராட்டச் சூழலில் இருந்து முழுமையான நல்லிணக்கச் சூழலுக்கு மாறிய ஒரே நாடு என்ற பெருமை தென்னாபிரிக்காவுக்கு மட்டுமே கிடைக்கும். இத்தகைய வரலாற்று உதாரணத்தை ஏற்படுத்திய நெல்சன் மண்டேலா வாழ்ந்த காலத்திலேயே, இன்னொரு நல்லிணக்கச் சூழலை உருவாக்கும் அருமையான வாய்ப்பு இலங்கைக்கும் கிடைத்தது.

நான்கரை ஆண்டுகளுக்கு முன்னர் போர், வலி நிறைந்த விளைவுகளுடன் முடிவுக்கு வந்தபோது, அந்த வாய்ப்பு அரசின் கையில் கிடைத்தது. ஆனால், அதைப் பயன்படுத்திக் கொண்டிருந்தால், இலங்கை அரசு இன்று எங்கோ ஒரு உயரத்தில் வைத்து மதிக்கப்பட்டிருக்கும்.

### ஆனால், நடந்தது என்ன ?

"போராட்டம் முடிவுக்கு வந்த பின்னர், நெல்சன் மண்டேலா மன்னிப்புக் கோரினார், ஆனால் நீங்கள், பாற்சோறு விருந்து படைத்து வெற்றி விழாக் கொண்டாடினீர்களே" என்று கடந்த வாரம் நாடாளுமன்றத்தில் ஐதேக நாடா ளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் கிரியெல்ல அரசதரப்பினரைப் பார்த்துக் கூறியிருந்தார்.

அது தான், தென்னாபிரிக்காவுக்கும் இலங்கைக்கும் இடையிலான வித்தியாசம்.

போர் முடிவுக்கு வந்த நான்கரை ஆண்டுகளிலும் தமிழர்கள் நல்லிணக்கத்தை அனுபவிக்க முடியவில்லை. அதற்கு மாறாக, தமது எதிர்காலம் குறித்து அதிகம் அச்சம் கொள்ள வேண்டிய நிலைக்குள் அவர்கள் தள்ளப்பட்டுள்ளார்கள். இது தான், இன்னொரு போராட்டம் முளை கொள்வதற்கான சூழல். இதுபோன்ற சூழல்தான் முன்னர் இலங்கைத் தீவின் வட புலத்தில் ஆயுதப் போராட்டம் வெடிப்பதற்கு காரணமாக அமைந்தது. இத்தகையதொரு சூழல் இலங்கையில் மீண்டும் உருவாகக் கூடாது என்றே, அமெரிக்கா போன்ற நாடுகள் கருதுகின்றன. போரின் காயங்கள் முழுமையாக ஆற்றப்படாமல், நல்லிணக்கம் ஏற்படுத்தப்பட்டு, நிரந்தர அரசியல்தீர்வு காணப்படாது போனால், 5 அல்லது 10 ஆண்டுகளில் மீண்டும் ஒரு போராட்டம் வெடிக்கும் என்று அமெரிக்கா எச்சரித்திருந்தது. தமது அனுபவத்தின்படி கற்ற பாடம் அது என்று அமெரிக்கா கூறியதை ஏற்க அரசு தயாராக இருக்கவில்லை. ஆனாலும், ஒரு பெரிய இலக்கை முன்வைத்து போராட்டம் நடத்திய தமிழர்களை ஒன்றுமேயில்லாதவர்களாக்கியதுடன், அதிகாரங்கள் எதுவுமில்லாதவர்களாக நீண்ட காலத்துக்கு அடக்கி வைத்திருக்க முடியாது. இந்த உண்மை மெல்ல மெல்ல வெளிச்சத்துக்கு வரத் தொடங்கியுள்ளது. இதனை வைத்துப் பார்க்கும்போது, அமெரிக்கா விடுத்த எச்சரிக்கையின் தார்ப்பரியம் விளங்கக் கூடும்.

### நல்லிணக்கத்துக்கான வழியை இலங்கை பின்பற்றவில்லை

கடந்த வாரம், ஜப்பானிய சிறப்புத் தூதுவர் யசூசி அகாசியுடனான சந்திப்பின் போது, வடக்கு,கிழக்கில் தமிழர்களுக்கு எதிரான அடக்குமுறைகள் முடிவுக்குக் கொண்டு வரப்படாது போனால், மக்களைத் திரட்டி அறவழியிலான போராட்டத்தைத் தொடங்கப் போவதாக எச்சரித்திருந்தார் இரா.சம்பந்தன். ஒரு மிதவாதத் தலைவராக அறியப்பட்ட அவரே, இன்று இலங்கை அரசு எந்த வழியிலும் தீர்வைத் தராது என்று உறுதிபடக் கூறி வருகிறார். அவர் மட்டுமன்றி, வடக்கு மாகாண முதல்வர் விக்னேஸ்வரன் கூட, இன்று கொதிப்புடன் பேசுகிறார் என்றால் அதற்குக் காரணம் அரசுதான். அரசு போருக்குப் பின்னர் தமிழர்களுடன் நல்லிணக்கத்துக்கான வழியைப் பின்பற்றுவதற்குப் பதிலாக அவர்களின் பொறுமையைச் சோதிப்பதில்தான் அதிகம் நாட்டம் கொண்டிருக்கிறது.

இத்தகைய பொறுமை எப்போதும் நீடிக்கும் என்று கருத முடியாது. நெல்சன் மண்டேலாவுக்கு அஞ்சலி செலுத்துவதற்காக கடந்த வாரம் பிரிட் டோரியாவுக்கும், ஜொகனஸ்பேர்க்கிற்கும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சென்றிருந்தார். அதை விட, இலங்கையில் ஒரு நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கு அவர் உறுதியான நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தால், அதுவே அவருக்கான மிகப் பெரிய அஞ்சலியாக அமைந்திருக்கும். உலகமும் அதைக் கொண்டாடியிருக்கும்.

## ஐரோப்பிய நாடாளுமன்றத்தில்

# இலங்கை தொடர்பான விவாதம்

ஐரோப்பிய ஒன்றிய நாடாளுமன்றத்தில் டிசெம்பர் 12 ஆம் திகதி இலங்கை தொடர்பான தீர்மானம் ஒன்று தாக்கல் செய்யப்பட்டு விவாதிக்கப்பட்டது. ஐரோப்பிய ஒன்றிய நாடாளுமன்றத்தின் உதவித் தலைவர் ரெய்னர் லீலன்ட் தலைமை வகித்தார். ஒன்றியத்தில் அங்கம் வகிக்கும் பல்வேறு தரப்பட்ட உறுப்பினர்களும் தம் கருத்துக்களை விவாதத்தின்போது சமர்ப்பித்தார்கள்.

**அதன் சாராம்சம் இங்கு தொகுத்துத் தரப்படுகின்றது :**

ரம்யன்



**கார்ல் ஸ்சிலிட்டர் -சுவீடன் மற்றும் ஐரோப்பிய சுயாதீன குழுமத்தின் நாடாளுமன்ற உறுப்பினர் கூறியது:**
அண்மையில் இலங்கையில் போர் ஒன்று முடிவுக்கு வந்தது. வேறு பல மாறுதல்களும் நடந்துள்ளன. தேசிய நல்லிணக்கத்துக்கான குழுவொன்றும் நியமிக்கப்பட்டுள்ளது. காணாமற் போனவர்கள் தொடர்பான விடயங்களை ஆராயவும் ஓர் ஆணைக் குழு நியமிக்கப்பட்டுள்ளது. இவையெல்லாம் நல்ல செய்திகள்தான். ஆனால் கவலை தருபவையும் மறைந்து கிடக்கின்றன். இந்தச் செய்திகள் மனித உரிமை மீறல்கள், துஷ்பிரயோகங்களை மூடி மறைக்கின்றன. இந்தப் பிரச்சினைகளை இலங்கை எதிர் நோக்கியாக வேண்டும். இவைகளை ஆராய்வதற்கு உடனடியாக ஆணைக்குழுவொன்று நியமிக்க வேண்டியது அவசியம். ஏனென்றால் இரண்டு தரப்புக்களிலும் இருந்து போராடியவர்களும் அவைகள் தொடர்பாக தங்கள் பொறுப்புக்களுக்கு விளக்கம் கொடுத்தாக வேண்டும். அல்லது விசாரணைகளை எதிர் கொள்ள வேண்டும். மார்ச் மாதம் ஜெனிவாவில் ஐ.நா. அறிக்கையை நாம் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். அதேவேளை ஐ.நாவும் விசாரணைக் குழுவொன்றை நியமிக்கவேண்டும் என்றும் கோருகின்றோம். பாரதூரமான போர்க் குற்றங்கள் தொடர்பாக பொறுப் புக் கூறலுக்கு நாம் கோரிக்கை வைக்க வேண்டும். பாரதூரமான மனித உரிமை மீறல்களுக்குள்ளான அனைவருக்கும் நீதி கிடைத்தாக வேண்டும். எனவே மிகவும் நம்பிக் கையூட்டக்கூடிய நிலைக்கு இலங்கையைக் கொண்டு வந்தாக வேண்டும்.

### சர்வதேச தீர்ப்பாயம் வேண்டும்

போர்த்துக்கல் உறுப்பினர் திருமதி அனா தோமஸ் கூறியது :
இலங்கையில் தேசிய நல்லிணக்கம் ஏற்பட வேண்டும் என்பதற்காக ஐரோப்பிய நாடாளுமன்றம் பல தீர்மானங்களை நிறைவேற்றியிருக்கிறது. எங்கள் குழுவின் சார்பில் நானும் 2011 ஆம் ஆண்டு அங்கு சென்றிருந்தேன். எமக்குப் பல சந்தேகங்கள் எழுந்தன. ஆனால் அந்த அரசின் நல்லிணக்க ஆணைக்குழு மூலம் நல்ல பலன் கிடைக்கும் என்ற நம்பிக்கை இருந்தது. ஆனால் இப்போது அது ஒன்றுமே நடந்ததாகத் தெரியவில்லை. ஆணைக்குழுவுக்கு தேசிய மற்றும் சர்வதேச சுதந்திரம் எதுவும் இருக்கவில்லை. குறிப்பாக போரின் இறுதிக் காலத்தில் கொடுமைகள் புரிந்தவர்களுக்குத் தண்டனை வழங்காத தன்மையும் காணப்பட்டது. சர்வதேச நிறுவனங்களுக்குச் செவி சாய்க்காமல் இலங்கை அவற்றின் விமர்சனங்களைக் குற்றம் சாட்டுகிறது. அடிப்படையான உண்மைகளுக்கும், ஜனநாயக உரிமைகளுக்கும் உழைப்பவர்களுக்கு வாய்ப்பூட்டு போடுவதற்கு முயற்சி செய்கிறார்கள். அதனால்தான் நவிப்பிள்ளையின் பரிந்துரைகளை ஆதரிக்கும்படி இந்தச் சபை கோரிக்கை விடுக்கின்றது. அது கைகூடாத நிலையில் ஐ.நா.மனித உரிமைகள் சபை சர்வதேச தீர்ப்பாயம் ஒன்றை நியமிக்க வேண்டும். அதன் மூலம் அழுத்தமான விசாரணை நடத்தப்பட வேண்டும். இலங்கையில் நல்லிணக்கமான நீதியின் மீது கட்டியெழுப்பப்பட வேண்டும். அவ்வாறில்லாமல் அங்கு அமைதியேற்பட முடியாது.

### தமிழர்களின் கவலைகளைத் தீர்க்க வேண்டும்

**ஐக்கிய ராஜ்ஜியம் ஐரோப்பியர்கள் கன்சர்வேடிவ் சீர்திருத்தக்குழு. நாடாளுமன்ற உறுப்பினர் ஜியோப்ரே வான் ஓர்டன் நிகழ்த்திய உரை**
இலங்கை பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப வேண்டுமானால் தவறுகள் மீளவும் நடை பெறலாகாது. இனம், மதம் என்ற வேறுபாடுகளுக்கு அப்பால் மிக நேர்த்தியான ஜனநாயக , செழிப்பான மற்றும் பாதுகாப்பான இலங்கையைக் கட்டியெழுப்ப இது அவசியம். நிறையவும் அங்கு நடைபெற்றுள்ளன. அந்த வகையில் இலங்கை அதிகாரிகளுக்கு பாராட்டுத் தெரிவிக்கலாம். ஆனால் இன்னமும் நிறையவே செய்யப்பட வேண்டியிருக்கின்றன. இந்த வாரம் நாம் நெல்சன் மண்டேலாவின் இறப்பை நினைவு கூர்ந்து கவலைப்பட்டோம். அவர் 27 வருடங்கள் சிறையில் இருந்து மக்களின் உரிமைகளுக்காக உழைத்து உயர்ந்தவர். அவர் வெறுப்புணர்ச்சி இல்லாது செயற்பட்டார். மீள் நல்லிணக்கத்துக்கான பெரிய செய்தியொன்றை அவர் வெளிப்படுத்தினார். அதைச் செயற்படுத்தவும் செய்தார். உபதேசம் செய்வது எங்கள் வேலையல்ல. ஆனால் இலங்கை அரசானது தமிழர்களின் நியாயமான கவலைகளைத் தீர்த்து வைக்க மேலதிக நடவடிக்கை எடுப்பது அவசியம்.

### ஒருங்கிணைந்து போராட வேண்டும்

அயர்லாந்து உறுப்பினர் போல் மேர்பி பேசியது :
இந்தச் சபையில் வலதுசாரிகள் மேற்கொண்ட நிலைப்பாட்டை நாம் ஏற்கத் தேவையில்லை. உலகம் முழுவதிலுமுள்ள தமிழ்பேசும் மக்களை அவர்கள் குறைகூற விரும்புகிறார்கள். இலங்கையில் நடக்கும் மிக மோசமான மனித உரிமை மீறல்களுக்கு அவர்களை குறைகூற விரும்புகிறார்கள். அவர்கள் இன்று உலக கவனத்தை ஈர்த்துள்ளார்கள் என்பது உண்மைதான். பொதுநலவாய மாநாட்டு தலைமைப் பதவியை ராஜபக்ஷ ஆட்சியாளர்களுக்கு வழங்கியிருக்கலாகாதென்று மனித உரிமை அமைப்புகள் தெரிவித்ததும் சரிதான். ஏனென்றால் பிரிட்டனின் கமரூன் போன்ற அரசியல் தலைவர்கள் மனித உரிமை விடயங்களில் கண்டும் காணாமல் இருந்துவிட விரும்புகிறார்கள். ஏனென்றால் அவர்கள் தங்கள் பொருளாதார அபிவிருத்திக்கு தடங்கல் ஏற்படக்கூடாது என்று விரும்புகிறார்கள். இப்பொழுது இலங்கையில் கொடூரமான உள்நாட்டுப் போர் முடிவுற்று நான்கு ஆண்டுகள் ஆகின்றன. 70 ஆயிரம் பேருக்கு மேல் இனப் படுகொலைக்கு உள்ளாகி நான்கு வருடங்கள் ஆகின்றன. ஆனால் இதுவரை அந்தப் போர்க் குற்றங்கள் தொடர்பாக இலங்கை அரசினால் நம்பகமான விசாரணையொன்று நடத்தப்படக் காணோம். அரச மற்றும் படைகளின் அதிகாரிகள் என்று வரும்போது தண்டனை, பயமின்மை நிலவுகின்றது. கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகள் என்பது வெறும் வெள்ளையடிப்பாகத் தான் இருக்கிறது. அதன் வரையறுத்த பரிந்துரைகளும்கூட இன்னமும் செயற்படுத்தப்படவில்லை.
சுதந்திரமான சர்வதேச விசாரணையொன்று நடத்தப்பட வேண்டும் என்பது நீண்டகாலக் கோரிக்கையாகவிருக்கிறது. விரைவாக இது முடிவு கட்டப்பட வேண்டும். பாதிக்கப்பட்டவர்களுக்கும் அவர்களின் குடும்பங்களுக்கும் பொறுப்புக் கூறியாக வேண்டும். தமிழ் பேசும் மக்கள் ஏற்கெனவே ஐ.நா.வால் கைவிடப்பட்டுள்ளார்கள். சர்வதேச சமூகம் என்று கூறப்படுபவர்கள் அமைதியைக் கொண்டு வருவார்கள் என்று அவர்கள் காத்திருக்க முடியாது. தமிழ் ஒருமைப்பாட்டு அமைப்பு போன்ற வகையில் அவர்கள் தங்களை ஒருங்கிணைத்துக் கொண்டு நீதிக்காகப் போராட வேண்டும்.

மிராஜ்தேவா : தலைவர் அவர்களே திரு மேர்பியிடம் ஒரு கேள்வி. இலங்கை விடயத்தில் ஒரு நிபுணராகக் காட்டிக் கொள்ளும் அவர் எனது இந்தக் கேள்விக்கு பதிலளிப்பாரா? இலங்கையில் எவ்வளவு மக்கள் வாழ்கிறார்கள்?, தெற்கில் எத்தனை பேர்? வடக்கில் எத்தனை பேர்? கொழும்பிலுள்ள தமிழர் எண்ணிக்கை எத்தனை?

போல் மேர்பி : இலங்கை விடயத்தில் நான் நிபுணராகக் காட்டிக்கொள்ளவில்லை. ஆனால் இலங்கைக்குப் பயணம் செய்யும் சந்தர்ப்பத்தை நீர் விரும்பியிருக்கலாம். ஆனால் விசாவுக்கான எனது விண்ணப்பங்கள் பல தடவைகளிலும் இலங்கை அரசினால் மறுக்கப்பட்டுவிட்டன. தமிழர்கள் அங்கு நசுக்கப்படுவது தொடர்பாக நான் விமர்சனங்கள் மேற்கொண்டமைதான் அதற்குக் காரணம். தமிழர்கள் வாழும் பகுதிகள் மற்றும் அவர்களின் எண்ணிக்கை தொடர் பாக அச்சொட்டாக விவரம் தர என் னால் முடியாது. எனக்குத் தெரியும், வடக்குக் கிழக்கில் ஏன், கொழும்பிலும் கூட ஏராளமாக தமிழர்கள் வாழ்கிறார்கள். அங்கும் கூட அவர்கள் பாகுபாடு காட்டப்படுகிறார்கள். நான் எப்போதும் கூறிவருவது என்னவென்றால், இலங்கையில் நீதியை நிலைநாட்ட சிங்களவர்களும் தமிழ் பேசுகிறவர்களும் ஒன்றாக இணைந்து போராட வேண்டும் என்பதுதான்.

தலைவர்: இந்த விடயத்தை நீங்கள் தனிப்பட்ட முறையிலான விவாதம் ஒன்றில்தான் முன்வைக்க வேண்டும் என்று நினைக்கின்றேன்.

பில் பென்னியன்: லிபரல் மற்றும் ஜனநாயக கூட்டு முன்னணி சார்பிலான பிரிட்டன் உறுப்பினர்.
விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசுக்குமிடையிலான போர் முடிவுற்று நான்கு வருடங் களாகின்றன. ஆனால் இன்னமும் போர்க்குற் றங்கள் மற்றும் மனித இனத்துக் கெதிரான குற்றங்கள் தொடர்பில் தண்டனை தவிர்த்த நிலைமை நீடித்துக் கொண்டே போவது குறித்து குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன. இங்கே நமக்கு முன் இருக்கும் தீர்மானம் மிகவும் சமநிலையானது. மீள்கட்டமைப்பு, நிலக்கண்ணி அகற்றல் மற்றும் வெற்றிகரமான மாகாண சபைத் தேர்தல் முதலிய விடயங்களில் காணப்பட்டுள்ள முன்னேற்றங்கள் தீர்மானத்தில் பாராட்டப்பட்டுள்ளன. ஆனால் போரின்போது தமது நண்பர்கள், குடும்ப உறுப்பினர்கள் மற்றும் சக குடிமக்களுக்கு என்ன நடந்தது என்பதை அறிந்து கொள்வதற்கு சகல மக்களுக்கும் உரிமையுண்டு. சர்வதேச சட்டங்கள் இரண்டு தரப்பினராலும் மீறப்பட்டுள்ளன. மீண்டும் கூறுகின்றேன் இரண்டு தரப்பினராலும் மீறப்பட்டமை தொடர்பாக சுதந்திரமான விசாரணைகள் அவசரமாக நடத்தப்பட வேண்டும். எனவே கூடிய விரைவில் இதற்கான ஆணையம் ஒன்றை நியமிக்கும்படி இலங்கை அரசை நாம் வற்புறுத்துகின்றோம். இப்பொழுது 2014 மார்ச் மாதத்துக்கு முன் இலங்கை அரசு நம்பகமான விசாரணை ஒன்றுக்கு நடவடிக்கை எடுக்காது போனால் ஐ.நா. தானாக, தனது சார்பில் விசாரணை ஒன்றை நடத்துவதற்கான சட்டபூர்வமான உரிமை அதற்கு இருக்கின்றது.

ஜோ லெயினன் -ஜேர்மனி:
30 ஆண்டுகால முரண்பாடுகளின் போது இலங்கையில் பெரும் குழப்பங்கள் இருந்து வந்துள்ளன. நீங்கள் சமாந்திர மான ஒரு தீர்மானம் பற்றிப் பேசுகிறீர்கள். 2014 மார்ச்சுக்கு முன் முழு அளவிலான விசாரணை ஒன்றைக் கேட்கிறீர்கள். இன்னமும் மூன்று மாதங்களே உள்ள நிலையில் இது யதார்த் தபூர்வமானதுதான் என்று நீங்கள் கருதுகின்றீர்களா? உமது வார்த்தைகளிலேயே உரிய காலத் தில் என்று கூறலாம். என்னைப் பொறுத்தவரை 2014 மார்ச் என்பது முற்றாகச் சாத்தியமற்றது.

பில் பென்னியன்: மார்ச் மாதத்துக்குள் விசாரணை ஒன்றை நடத்துவதென்பது சாத்தியமில்லை என்பதை ஒத்துக்கொள்கின்றேன். அப்படியான விசாரணை ஒன்று ஆரம்பிக்கப்பட வேண்டும் என்று தான் நாம் கேட்கின்றோம். 2014 என்ற காலக்கெடுவானது ஐ.நா.மாநாடுகளுடன் சம்பந்தப்பட்டதாகும்.

கிர்ஸிஸ்டொவ் லி செக் :
போலந்து உறுப்பினர் : இந்த நாடு பல வருடங்களாக போர்கள், குற்றங்கள், கொலைகள், வல்லுறவுகள், மீள்குடியேற்றங்கள் என்று பல்வேறு கொடூரங்களை அனுபவித்து வந்துள்ளது. அந்தக் குற்றங்கள் பற்றி நீண்ட பட்டியலை எம்மால் தாக்கல் செய்ய முடியும். அதிர்ஷ்டவசமாக 4 ஆண்டுகளாக அங்கு அமைதியைக் காண்கின்றோம். இப்பொழுது நாம் எவ்வாறு இலங்கைக்கு உதவப் போகிறோம் என்பதே கேள்வி. நிச்சயமாக இலங்கையின் நிலைமையை மீள்கட்டமைப்பதன் மூலம் நாம் உதவ முடியும். இந்த நாடு அமைதியில் செழிப்புறும் என்று நாம் எதிர்பார்க் கின்றோம். அங்குள்ள பல்வேறு இனங்களும் ஒன்றாக சமத்துவமாக வாழ வேண்டும். ஆனால் நிச்சய மாக ஒரு புலனாய்வு, ஒரு விசாரணை வேண்டும். இலங்கையால் இந்தப் பிரச்சினையைத் தீர்த்துக் கொள்ள முடியும் என்று நம்புகிறோம்.

(தொடரும்.....)



**மேடம்:** மனதில் பட்டதை பளிச்சென்று பேசி அனைவரையும் ஆச்சரியப்படுத்துவீர்கள். ஆன்மிகத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். வியாபாரத்தில் மகிழ்ச்சி தங்கும். வெளிவட்டாரத்தொடர்பு அதிகரிக்கும்.

**இடபம்:** உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். அயல் வீட்டாரின் அன்புத்தொல்லைகள் விலகும்.

**மிதுனம்:** சில விடயங்களுக்கு அனுபவ அறிவைப் பயன்படுத்துவது நல்லது. சிலரின் தவறுகளைச் சுட்டிக் காட்டுவதன் மூலம் சச்சரவுகளில் சிக்குவீர்கள். உத்தியோகத்தில் மறைமுக எதிர்ப்புகள் இருக்கும்.

**கடகம் :** அலைச்சலும் சிறுசிறு ஏமாற்றமும் வந்து நீங்கும். வெளிவட்டாரத்தில் விமர்சனங்களைத் தவிருங்கள். உத்தியோகத்தில் மேலதிகாரியுடன் விவாதத்தைத் தவிருங்கள்.

**சிங்கம்:**அடிமனதில் இருந்த பயம் விலகும். துணிச்சலுடன் சில முடிவுகளை எடுப்பீர்கள். அலைச்சல் தந்த வேலைகளை உடனே முடிப்பீர்கள். வெளிவட்டாரம் மகிழ்ச்சி தரும். ஆடம்பரச் செலவுகளைக் குறைப்பீர்கள்.

**கன்னி:** உங்களது குறிக்கோளை எட்டிப்பிடிக்க முயற்சிப்பீர்கள். வேற்று மதத்தினரால் உதவி கிடைக்கும். விரும்பிய பொருள்களை வாங்கி மகிழ்வீர்கள்.

**துலாம்:** அதிரடித் திட்டங்களைத் தீட்டுவீர்கள். உங்களைத் தேடிவந்து சிலர் உதவி கேட்பார்கள். உத்தியோகத்தில் மதிக்கப்படுவீர்கள். சக ஊழியர்களின் ஆதரவு கிடைக்கும். வெளியூர் பயணங்களால் ஆதாயம் உண்டு.

**விருச்சிகம்:** உறவினர், நண்பர்களில் சிலர் நன்றி மறந்து பேசுவார்கள். யாரையும் பரிந்துரை செய்ய வேண்டாம். உதவி செய்வதாக வாக்குக் கொடுத்தவர்கள் சிலர் இழுத்தடிப்பார்கள். உத்தியோகத்தில் அலுவலக இரகசியங்களை வெளியிட வேண்டாம்.

**தனுசு:** அதிகாரபூர்வமாகச் செயற்பட்டு சில வேலைகளை முடிப்பீர்கள். ஆன்மிகத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். உத்தியோகத்தில் மேலதிகாரியின் பாராட்டைப் பெறுவீர்கள். ஆடம்பரச் செலவுகளைத் தவிர்ப்பீர்கள்.

**மகரம்:** உத்தியோகத்தில் சக ஊழியர்களின் ஆதரவு கிடைக்கும். பிரபலங்களின் சந்திப்பு நிகழும். அரச காரியங்களில் அனுகூலமான நிலை காணப்படும்.

**கும்பம்:** தைரியமான முடிவுகளை எடுத்து வெற்றி காண்பீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களுக்கு மத்தியில் மதிக்கப்படுவீர்கள். ஆடம்பரச் செலவுகளைக் குறைப்பீர்கள்.

**மீனம்:** மனக்குழப்பங்கள் விலகும். வெளியூரிலிருந்து உறவினர்கள், நண்பர்களின் வருகையுண்டு. உத்தியோகத்தில் வேலைப்பளு குறையும். எதிர்பார்த்த இடத்திலிருந்து உதவி கிடைக்கும்.

தருவது வித்தியா

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

# பற்றின்மையே பூரணமான தன்னல மறுப்பு



### விவேகானந்தரின் சிந்தனைகளிலிருந்து

எம்மால் மேற்கொள்ளப்படும் ஒவ்வொரு செயலும் நம்மிடமே எதிர்ச் செயலாகத் திரும்பி வருவதுபோல், நம்முடைய செயல்கள் பிறரிடமும், பிறருடைய செயல்கள் நம்மிடமும், எதிர்விளைவுகளை ஏற்படுத்துகின்றன.


ஒருவன் கெடுதல் செய்யும்போது மேலும் மேலும் அவன் கெட்டவனாவதையும், அவனே நல்லது செய்யத் தொடங்கும் போது, மேலும் மேலும் வலிமையடைந்து எப் போதும் நல்லதைச் செய்பவனாக மாறு வதையும் நாம் தெளிவாகக் காண்கிறோம். ஒரு செயலைச் செய்வதால் ஏற்படுகின்ற இத்தகைய அழுத்தமான மாற்றத்துக்கான காரணத்தை, நாம் பிறர் மீதும், பிறர் நம்மீதும் ஆதிக்கம் செலுத்தும் மேற்கண்ட விதி மூலம் அல்லாமல், வேறு எதன் மூலமாகவும் விளக்கமுடியாது. பௌதிக விஞ்ஞா னத்திலிருந்து இதற்கு ஓர் உதாரணத்தை எடுத்துக் கொள்ளலாம். நாம் ஒரு செயலைச் செய்யும்போது, எம் மனம் ஒரு குறிப்பிட்ட இயக்க நிலையில் (vibration) இருக்கிறது.

இந்த நிலையில் இருப்பவர்கள் அனைவரும் எம்முடைய இந்தக் குறிப்பிட்ட மன நிலையால் தாக்கப்படுகின்ற சூழல் ஏற்படுகிறது. ஒரே அறையில் இரண்டு விதமான இசைக் கருவிகள் இருந்தால், ஒன்று இசைக்கப்படும் பொழுது எழும் ஒலி அலைகள், மற்றொன்றைத் தாக்கி அதிலிருந்தும் அதே சுவரத்தை எழுப்புகிறது. அதுபோல ஒரு குறிப்பிட்ட நிலையிலுள்ள மனமும் அதே அலையிலுள்ள மனங்களைத் தாக்குகின்றது. இந்தத் தாக்குதலின் அளவும், வேகமும் மனங்களுக்கிடையில் அமைந்திருக்கின்ற தூரம், தடைகள், இவைகளுக்கு ஏற்ப அமைகிறது. என்றாலும் இந்தத் தாக்குதலுக்கு அந்த மனம் ஆளாகும் நிலையில் எப்போதும் இருக் கிறது என்பது உண்மையாகும். உதாரணமாக நான் ஒரு தீமை செய்கிறேன். அப்போது என்மனம் குறிப்பிட்ட அலையில் நிற்கிறது. அப்போது என்னுடைய அதே மன நிலையில் இருக்கும் இந்தப் பிரபஞ்சம் முழுவதிலுள்ள மனங்களும், அந்த அலையால் தாக்குதலைப் பெறுகின்றன. அதுபோலவே நான் ஒரு நல்ல காரியம் செய்யும் பொழுது, என்னுடைய மனம் வேறொரு விதமான அலையில் நிற்கும்; அப்போது அதே நிலையில் இருக்கும் எல்லா மனங்களும் அதனால் தூண்டப்படும், இப்படி மனத்தை மனம் தூண்டும் ஆற்றல், இயக்கத்தின் வலிமைக்கேற்ப கூடியும் குறைந்தும் இருக்கும்.

## நாளை

மார்கழி-06
சனிக்கிழமை 21.12.2013
திதி: சதுர்த்தி மு.இ.11.02 வரை
நட்சத்திரம்:
பூசம் மு.ப.08.59
சுபநேரம்:
03.24- 04.54 வரை
இராகுகாலம்:09.24 -10.54 வரை

# பல வருடங்களுக்கு முன்னே வானவியல் சாஸ்திரத்தில் சிறந்து விளங்கிய இந்தியர்கள்





*சீனாவில் கண்டெடுக்கப்பட்ட விண்கலத்தை ஒத்த புராதன உருவச் சிலைகள்*

ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே பண்டைய இந்திய முன்னோர்கள் வானவியல் சாஸ்திரத்தில் சிறந்து விளங்கினார்கள் என்பது அனைவரும் அறிந்த ஒன்றே. அதில் எவருக்கும் மாற்றுக் கருத்து இருக்க முடியாது. ஆனால் பிரபஞ்ச இயக்கத்தின் கொள்கைகளைத் தற்போதைய அறிவியல் அறிஞர்களைவிட மிகத் துல்லியமான கணித அளவீடுகளுடன், 2,500 ஆண்டுகளுக்கு முன்பே எழுதி வைத்துவிட்டுச் சென்றுள்ளார்கள் எமது முன்னோர்கள். சீனா, லாஸ், திபெத் ஆகிய நாடுகள் ஒன்று சேர்ந்து திபெத்தில் நடத்திக்கொண்டு இருக்கும் ஆய்வின்போது அவர்களுக்குப் பல ஆவணங்கள் கிடைத்தன.

ஆனால் அவை அனைத்தும் சமஸ்கிருதத்தில் இருந்த காரணத்தால் அவற்றை மொழி பெயர்க்க சதீஸ்கரில் உள்ள ஒரு பல்கலைக்கழகத்திற்கு அனுப்பி வைத்தனர். அதை மொழி பெயர்த்த ரய்னா என்னும் பேராசிரியர் கொடுத்த விளக்கம் மிக ஆச்சரியம் மிக்க தகவலாக இருந்தது. அந்த ஆவணங்களில் விமானம் இயங்கும் தத்துவங்களும், பிரபஞ்சத்தில் உள்ள கோள்கள் மற்றும் நட்சத்திரங்களின் இயக்கம் பற்றியும் குறிப் பிடப்பட்டுள்ளன.

அதாவது பிரபஞ்சம் என்பது ஹீலியம் மற்றும் ஹைதரசன் நிரம்பிய ஊடகமாக உள்ளது. இதே தத்துவத்தைப் பயன்படுத்தி பல விமானங்களை இயக்கமுடியும் என்றும் அத்துடன் சில கணித விகிதாசார அளவீடுகளும் கொடுக்கப்பட்டுள்ளன. ஆவணங்கள் முழுமையாகக் கிடைக்கும் பட்சத்தில் விமானங்கள் பற்றிய இன்னும் பல தகவல்கள் வெளியாகும்.

# சுடோக்கு
## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 3 | | | | 6 | 8 | 7 | |
| | | | 2 | | 3 | | 1 | |
| 6 | | | | | 7 | | 3 | 9 |
| 3 | | | | 9 | | | 2 | 5 |
| 5 | | 4 | | | | 9 | | 1 |
| 2 | 7 | | | 6 | | | | 8 |
| 9 | 6 | | 7 | | | | | 2 |
| | 2 | | 6 | | 9 | | | |
| | 4 | 3 | 5 | | | | 9 | 7 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டாங் கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 4 | 2 | 9 | 3 | 7 | 5 | 8 | 1 |
| 9 | 7 | 5 | 8 | 1 | 2 | 4 | 3 | 6 |
| 8 | 1 | 3 | 5 | 4 | 6 | 9 | 7 | 2 |
| 5 | 8 | 9 | 7 | 2 | 1 | 3 | 6 | 4 |
| 7 | 3 | 1 | 4 | 6 | 5 | 8 | 2 | 9 |
| 2 | 6 | 4 | 3 | 8 | 9 | 7 | 1 | 5 |
| 4 | 9 | 6 | 1 | 7 | 3 | 2 | 5 | 8 |
| 3 | 2 | 8 | 6 | 5 | 4 | 1 | 9 | 7 |
| 1 | 5 | 7 | 2 | 9 | 8 | 6 | 4 | 3 |

*நேற்றைய சுடோக்கின் விடை*

ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

# Instagram-இன் புத்தம் புதிய சேவை



புகைப்படங்கள் மற்றும் சிறிய அளவிலான காணொலி கோப்புக்களை பகிரும் சேவையை வழங்கும் பிரபல சமூக வலைத்தளமான Instagram, தற்போது மேலும் ஒரு சேவையை வழங்குகின்றது.

Instagram Direct என்ற இச் சேவையின் மூலம் நேரடியாகவே புகைப்படங்கள் மற்றும் காணொலிகளை நண்பர்களுடன் பகிர்ந்துகொள்ளக் கூடியதாக இருக்கும்.

இந்நிறுவனம் தற்போது வெளியிட்டுள்ள Instagram 5.0 என்ற ஐ.எஸ்.ஓ.மற்றும் அன்ரொயிட் இயங்கு தளங்களுக்கான அப்பிளிக்கேஷன்களில் இப்புதிய வசதி சேர்க்கப்பட்டுள்ளது.

இதேவேளை Instagram ஆனது




தற்போது 150 மில்லியன் பயனர்களை தன்னகத்தே கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.




## புதிய 'எக்ஸ்ரே' தொழில்நுட்பம் அறிமுகம்

மனித உடலில் உள்ள என்பு போன்ற வன்மையான கட்டமைப்புக்களை படம் பிடிக்க உதவும் எக்ஸ்ரே தொழில்நுட்பத்தில் மற்றுமொரு புரட்சி ஏற்படுத்தப்பட்டுள்ளது.


இதன் மூலம் என்புகளிலுள்ள மென்மையான இழையங்களையும் துல்லியமாகப் படம் பிடித்து அவற்றின் மூலம் நோய் பற்றிய தெளிவான தகவல்களைப் பெற முடியும் என்று ஆய் வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

எம்.ஐ.ரி.மற்றும் Massachusetts பொது வைத்தியசாலை ஆராய்ச்சி யாளர்களால் இந்தத் தொழில் நுட்பம் அறிமுகப்படுத்தப்பட் டுள்ளது.

## மப் சேவையை விரிவுபடுத்தும் கூகுள்




கூகுள் நிறுவனத்தால் வழங்கப்பட்டுவரும் கூகுள் மப் சேவையானது மேலும் 25 நாடுகளை உள்ளடக்கியதாக விரிவுபடுத்தப்படவுள்ளது. ஏற்கனவே இந்தச்சேவையில் பல நாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ள நிலையில் அன்ரோயிட் சாதனங்களில் இச்சேவையைப் பயன்படுத்துபவர்களுக்காக ஆபிரிக்கா, ஐரோப்பா, ஆசியா கண்டங்களில் மேலும் சில நாடுகள் உள்ளடங்கலாக 25 நாடுகளை அதிகரிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.




## எஸ்.ரி.சி.டி.இன் விலை உயர்ந்த ஸ்மார்ட் போன்

எஸ்.ரி.சி.டி.இன் இந்த ஸ்மார்ட் போனின் விலை இந்திய ரூபாயின் மதிப்புப் படி ரூ. 61,490. இருப்பதிலேயே மிகப் பெரிய திரையாக 5.9 அங்குல திரை இதில் உள்ளது. இது வரை 4.7அங்குலஅகலத்திரையையே எச்.ரி.சி.டி தந்து வந்தது.

இதன் பின்புற கமராவின் கீழாக ஸ்கானர் ஒன்று தரப்பட்டுள் ளது. விரல்ரேகையை இது உணர்ந்து இந்தப் போனின் உரிமையாளர் மட்டுமே பயன்படுத்த வழிவகை செய்கிறது.


இதன் இரு மொடல்கள் 16 மற்றும் 32 ஜிபி மெமரியுடன் உள்ளன. இந்த போனைப் பயன்படுத்துபவர் கள், கூகுள் ட்ரைவில் 50 ஜிபி மெமரி இடத்தினை இலவசமாகப் பெறலாம். இதில் இணைத்துத் தரப்படும் பற்றரி 3,300 mAh திறன் கொண்டதாக உள்ளது. வழக்கமாக, 4 அங்குல திரைகொண்ட போன்களில், 1,800 முதல் 2,000 mAh திறன்கொண்ட பற்றரிகள் இணைக்கப்படும்.

## உணவுகளைத் தயாரிக்க அறிமுகமாகும் நவீன தொழில்நுட்பம்


தற்போது காணப்படும் உணவு தயாரிக்கும் முறைகள் சற்று கடினமானதும் நேரத்தை அதிகம் செலவு செய்ய வேண்டியவையுமாகக் காணப்படுகின்றன.

இதனைத் தவிர்ப்பதற்கு இதுவரை காலமும் பல்வேறு முப்பரிமாண சாதனங்களை உருவாக்க பயன்படுத்தப்பட்டு வந்த 3 ஆம் பிரிண்டர் தொழில்நுட்பம் பயன்படுத்தப்படவுள்ளது. இதன் அடிப்படையில் Foodini என்ற பிரிண்டர் உருவாக்கப்பட்டுள்ளது. இந்தப் பிரிண்டர் மூலம் பல்வேறு வகையான உணவுகளைத் தயாரித்துக் கொள்ள முடியும். 100 டிகிரி செல்சியஸ்வரை வெப்பத்தை வெளிவிடக்கூடிய இந்தச்சாதனத்தின் விலையானது 835 யூரோக்களாகும்.

இது 2014 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் விற்பனைக்கு வரலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.




" இந்தப் பிரிண்டர் மூலம் பல்வேறு வகையான உணவுகளைத் தயாரித்துக் கொள்ள முடியும்.



## விந்தணுக்களால் சக்தியூட்டப்பட்ட முதலாவது உயிரியல் ரோபோ

விந்தணுக்களால் சக்தியூட்டப்பட்ட உலகின் முதலாவது உயிரியல் ரோபோவை ஜேர்மனிய விஞ்ஞானிகள் உருவாக்கியுள்ளனர். காந்தத்தைப் பயன்படுத்தித் தூர இயங்கும் முறைமை மூலம் கட்டுப்படுத்தப்படும் நுண்ணிய உலோகக் குழாயினுள் எருது ஒன்றின் தனியொரு விந்தணுவை உட்செலுத்தியே இந்த உயிரியல் ரோபோவை விஞ்ஞானிகள் வடிவமைத்துள்ளனர்.

இந்த ஆய்வுக்குத் தலைமை தாங்கிய ரெஸ்டென் நகரிலுள்ள ஒருங்கிணைப்பு நுண் விஞ்ஞான நிறுவகத்தைச் சேர்ந்த விஞ்ஞானியான ஒலிவர் ஷமிட் விவரிக்கையில் இந்த உயிரியல் ரோபோவை எதிர்காலத்தில் உடலின் குறிப்பிட்ட பகுதிக்கு மருந்துகளை விநியோகிக்கவும் கருமுட்டையை கருக்கட்டச் செய்யவும் பயன்படுத்த முடியும் என்று கூறினார்.



50 மைக்ரோன் நீளமும் 5 முதல் 8 மைக்ரோன் விட்டமுடைய மேற்படி நுண் உலோகக் குழாய் ஒரு விந்தணுவை விடவும் சொற்ப அளவே பெரிதாகும். இத்தகைய குழாய் கட்டமைப்புக்குள் விந்தணுவை உட்செலுத்தப் பெரும் போராட்டத்தை எதிர்கொண்டதாக ஒலிவர் கூறினார்.

## கைதடி விக்கினேஸ்வர வைர விழா

யாழ்ப்பாணம், டிசெ.20

கைதடி விக்கினேஸ்வர வித்தியாலயத்தின் வைர விழா இருநாள் நிகழ்வாக நாளை சனிக்கிழமையும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமையும் நடைபெறவுள்ளது.

முதல் நாள் நிகழ்வு நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலை அதிபர் சு.சிவானந்தன் தலைமையில் நடைபெறும்.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராசா, சிறப்பு விருந்தினர்களாக தென்மராட்சி கல்வி வலய ஓய்வு நிலை பிரதிக் கல்விப் பணிப்பாளர் நா.சத்தியநாதன், திருகோண மலை இளைஞர் சேவைகள் மன்ற ஓய்வு நிலை உதவிப் பணிப்பாளர் செ.கார்த்திக், வருமானக் கணக்காளர் செ.உமாகாந்தன் ஆகியோர் கலந்து கொள்வர்.

இரண்டாம் நாள் நிகழ்வு நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலை அதிபர் தலைமையில் ஆரம்பமாகும்.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய கல்விப் பணிப்பாளர் சு.கிருஸ்ணகுமார், சிறப்பு விருந்தினராக சாவகச்சேரி கோட்டக் கல்விப் பணிப்பாளர் கு.சிவானந்தம், மருத்துவர் தமயந்தி குணபாலசிங்கம், அரச மரக் கூட்டுத்தாபன பிரதேச முகாமையாளர் சு.ஸ்ரீஸ்கந்தராஜா, பொறியியலாளர் கு.ஜெயமோகன், ஊர்காவற்றுறைப் பிரதேச செயலகக் கணக்காளர் தி.திருவருள் செல்வன் ஆகியோர் கலந்து கொள்வர். (ந)

# சுமுகமான நிலைமை இல்லாமையாலேயே இளைஞர்கள் வெளிநாடு செல்கின்றனர்

### சுவிஸ் குழுவினருக்கு வடமாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 20

தமிழ் மக்கள் இங்கு வாழவே முடியாத நிலை காணப்படுகின்றது. இங்குள்ள இராணுவக் கெடுபிடிகளாலேயே இளைஞர்கள் வெளிநாடுகளுக்குத் தப்பிச் செல்கின்றனர். எனவே இங்கு சுமுகமான நிலைமை ஏற்படும் வரையில் புலம்பெயர் தமிழர்களை தாயகத்துக்கு திருப்பியனுப்ப வேண்டாம் என்று வடக்கு மாகாண சபையின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர் து.ரவிகரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

முல்லைத்தீவுக்குச் சென்ற இலங்கையிலுள்ள சுவிஸ் தூதரக அதிகாரிகள், வடக்கு மாகாணசபை உறுப்பினரையும் சந்தித்துக் கலந்துரையாடினார்கள். இதன்போதே மேற்படி கோரிக்கையை அவர் முன்வைத்துள்ளார்.

போர் முடிவடைந்த பின்னரும், தமிழ் மக்கள் மீதான மறைமுகப் போர் தொடுக்கப்பட்டுள்ளது. தற்போது தமிழ் மக்கள் வடக்கு மாகாணத்தில் பெரும்பான்மையாக வாழ்வதை சிங்கள அரசு விரும்பவில்லை. இதனால் வடக்கில் இனப்பரம்பலை மாற்றியமைக்கும் வேலை திட்டங்களை நேரடியாகவே முன்னெடுத்து வருகின்றது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் இந்த நடவடிக்கைகள் வேகமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. தமிழ் மக்களுக்குச் சொந்தமான வாழ்வாதார வயல் நிலங்கள் கூட சிங்கள மக்களுக்கு ஜனாதிபதியால் வழங்கப்பட்டுள்ளன.

இதனை விட எமது மாவட்டத்தில் மீன்பிடித் தொழிலும் இடர்களை எதிர்கொண்டுள்ளது. சிங்கள மீனவர்கள், தடை செய்யப்பட்ட மீன்பிடி முறைகளைப் பயன்படுத்தி தொழில் நடவடிக்கையில் ஈடுபடுவதால் எமது வளங்கள் அழிவடைவதுடன் எமது மீனவர்கள் வாழ்வாதார ரீதியில் கடுமையான பாதிப்பையும் எதிர்கொள்கின்றனர்.

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பிலிருந்து இராணுவத்தினரிடம் சரணடைந்து புனர்வாழ்வுக்கு உட்படுத்தப்பட்டு விடுதலை செய்யப்பட்டவர்கள் கூட, தொடர் கண்காணிப்புக்களுக்கு உள்ளாக்கப்படுகின்றனர். மாதத்தில் குறிப்பிட்ட தினங்களில் இராணுவ முகாமுக்கு அழைக்கப்படுகின்றனர். இதனால் விரக்தி அடைந்த இளைஞர்கள், யுவதிகள் சட்டவிரோதமான முறையில் வெளிநாடுகளுக்கு தப்பிச் செல்கின்றனர்.

தாயகத்தில் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படாத நிலையில், நிரந்தர அரசியல் தீர்வு கிடைக்காத நிலையில், புலம்பெயர் தமிழர்கள் திருப்பி அனுப்பப்படுவது வருத்தமளிக்கிறது. இங்கு ஒரு நிரந்தரத் தீர்வு ஏற்படும் வரையில், புலம் பெயர் தமிழர்களை திருப்பி அனுப்ப வேண்டாம் என்று மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன் வேண்டுகோள் விடுத்துள்ளார். (ந-5)

## திறப்பு விழா

யாழ்ப்பாணம், டிசெ.20

ஹமீடியா குழுமத்தினர் தமது புதிய ஆண்டுக்கான 'சிக்னேச்சர்' ஆடை வகைகளின் காட்சியறையை யாழ்ப்பாணம், ஆஸ்பத்திரி வீதி, 420 ஆம் இலக்கத்தில் அமைந்துள்ள கார்கில்ஸ் சதுக்கத்தில் திறந்து வைக்கவுள்ளனர்.

இந்த நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு இடம்பெறுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

* *

யாழ்ப்பாணம் ஐக்கிய வியாபார சங்கத்தின் தலைமைக் காரியாலயம் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கார்கில்ஸ் சதுக்கத்தின் முதலாம் மாடியில் திறந்து வைக்கப்படவுள்ளது.

நிகழ்வில்பங்குதாரர்கள், முன்னைநாள் ஊழியர்கள், நலன் விரும்பிகள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந)

## ஒளி விழா

வடமராட்சி, டிசெ.20

மந்திகையில் உள்ள பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலை மெதடிஸ்த சிற்றாலயத்தின் 18 ஆவது ஆண்டு நிறைவு விழாவும், ஒளி விழாவும் எதிர்வரும் 27 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு நடை பெறவுள்ளது.

பருத்தித்துறை - கட்டைவேலி சேகர மெதடிஸ்த திருச்சபை முகாமைக்குரு அருட்திரு. கே.எம்.றெஜினோல்ட் ஈஸ்வரன் தலைமையில் இடம் பெறும் இந்த நிகழ்வில் நன்றி செலுத்தும் ஆராதனையும் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. ஒ-8)

* *

வடமராட்சி, டிசெ.20

அல்வாய் மெதடிஸ்த தேவாலயத்தில் ஒளிவிழாவும் இன்னிசை ஆராதனையும் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு பருத்தித்துறை கட்டைவேலி சேகர முகாமைக்குரு அருட்திரு. கே.எம்.றெஜினோல்ட் தலைமையில் நடைபெறவுள்ளது. (ந-8)

* *

தென்மராட்சி, டிசெ.20

அமெரிக்கன் சிலோன் மிஷன் திருச்சபையின் சாவகச்சேரி தேவாலயத்தின் நத்தார் இன்னிசை நிகழ்வும் வழிபாடும் இன்று பி.ப. 3 மணிக்கு தேவாலய மண்டபத்தில் இடம்பெறும். (ந-9)

## முன்பள்ளிக் கலை விழா

உரும்பிராய் கிழக்கு செல்லப்பா சனசமூக நிலையத்தின் கீழ் இயங்கும் செல்லப்பா முன்பள்ளிச் சிறார்களின் கலை விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு முன்பள்ளி மைதானத்தில் சனசமூக நிலையத்தின் தலைவர் இ.தர்மலிங்கம் தலைமையில் இடம்பெறவுள்ளது.

'செரண்டிப்' நிறுவனத்தின் அனுசரணையுடன் இடம் பெறவுள்ள இந்த நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக ஓய்வு நிலை உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.வி.மகேந் திரனும், சிறப்பு விருந்தினர்களாக ஜே/266 கிராம சேவை அலுவலர் எஸ்.எழிலரசன், செரண்டிப் நிறுவனத் தலைவர் அ.கந்தசாமி, யாழ்.போதனா வைத்தியசாலை மருத்துவர் எஸ்.இராகவன், தீவக வலய ஆசிரிய ஆலோசகர் எஸ்.இளங்கோவன், நில அளவையாளர் வே.தி.பாலசுப்பிரமணியம் ஆகியோரும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

நிகழ்வில் முன்பள்ளிச் சிறார்களின் கலை நிகழ்ச்சிகளுக்கு மேலதிகமாக இசை, நாட்டியக் கலைஞர்களின் நிகழ்வுகளும் சமூகப் பிரச்சினைகளைக் கருப்பொருளாகக் கொண்ட தலைப்பிலான பட்டிமன்ற நிகழ்வும் இடம்பெறவுள்ளன. (ஞ)

## கௌரவிப்பு விழா

இந்து கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் நடத்தப்பட்ட பொது அறிவுப் போட்டியில் பங்குபற்றி மாவட்ட மட்டத்தில் முதலாம் இடம்பெற்ற சங்கானை மாவடி ஞான வைரவர் அறநெறிப் பாடசாலை மாணவர்களைப் பாராட்டி கௌரவிப்பு விழா நடைபெறவுள்ளது.

சங்கானை மாவடி ஞான வைரவர் ஆலய வீதியில் இன்று வெள்ளிக்கிழமை மாலை 6 மணிக்கு ஆலய பரிபாலன சபைத் தலைவர் த.சிவசுப்பிரமணியம் தலைமையில் இந்த நிகழ்வு நடைபெறும்.

நிகழ்வில் பிரதம விருந்தினராக இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் திருமதி சாந்தி திருநாவுக்கரசன், சிறப்பு விருந்தினராக வலி.மேற்கு பிரதேச செயலர் அ.சோதிநாதன் ஆகியோர் கலந்து கொள்வர். (ந)

## காணி அன்பளிப்பு

யாழ்ப்பாணம், டிசெ.20

தாவளை சைவத் தமிழ் வித்தியாலயத்தின் பழைய மாணவரும், புலம்பெயர்ந்து ஆஸ்திரேலியாவில் வசித்து வருபவருமான கனகரட்ணம் விஜயலட்சுமி பாடசாலை விளையாட்டு மைதானத்துக்கான 4 பரப்புக் காணியைக் கொள்வனவு செய்து அன்பளிப்பாக வழங்கியுள்ளார். (ந)

## நடேஷ்வராலயாவில் ஒரு மாலைப் பொழுது

யாழ்ப்பாணம், டிசெ.20

'நடேஸ்வராலயாவில்' ஒரு மாலைப் பொழுது என்ற மாணவர்களின் சங்கீத நாட்டிய கலாசார, சமய நிகழ்வுகள் மானிப்பாய் நடேஸ்வராலயா நுண்கலைக் கல்லூரியில் நாளை சனிக்கிழமை மாலை 4 மணிக்கு நடை பெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக மானிப்பாய் மகளிர் கல்லூரி அதிபர் திருமதி சூரியகுமாரி ஜெய வீரசிங்கம் கலந்து கொள்வார். (ந)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்




நீர்வேலி வடக்கைச் சேர்ந்த
செல்லையா விசுவலிங்கம் (சிற்பக்கலை)
அவர்கள்
இலங்கையின் கலைத்துறையின் வளர்ச்சிக்காக ஈடேற்றப்பட்ட சிறந்த சேவைக்குப் புகழளிக்கும் வண்ணம் அவருக்கு கலாசார மற்றும் கலை அலுவல்கள் அமைச்சின் ஏற்பாட்டினால் கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட விழாவில் 2013 டிசெம்பர் மாதம் 15ஆம் திகதி நடத்தப்பட்ட அரச விழாவின்போது
கலாபூஷண அரச விருது வழங்கப்பட்டதையிட்டு பாராட்டி வாழ்த்துகின்றோம்.

ஈவினை பிள்ளையார் ஆலயம்
ஈவினை.
பரிபாலன சபை

## யாழ். கைதடி விக்கினேஸ்வர வித்தியாலயம்
## வைரவிழா

21, 22 - 12.2013 (சனி, ஞாயிறு இரு தினங்கள்)

**தலைவர்:**
உயர்திரு சு.சிவானந்தன் அவர்கள், வித்தியாலய முதல்வர்

★ முதலாம் நாள் 21.12.2013 சனிக்கிழமை காலை 9 மணி
இடம்: தம்பையா ஆறுமுகம் ஞாபகார்த்த கலை அரங்கு
**முதன்மை விருந்தினர்:**
வடக்கு மாகாண கௌரவ கல்வி அமைச்சர் உயர்திரு.த.குருகுலராசா அவர்கள்
**நிகழ்வுகள்:**
★ வைரவிழா மலர் வெளியீடு
★ நிறுவுனர் நினைவுப் பேருரை
★ முன்னாள் அதிபர்கள் கௌரவிப்பு
★ சாதனை மாணவர்கள் கௌரவிப்பு

★ இரண்டாம் நாள் 22.12.2013 ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி
இடம்: பாடசாலை பிரதான மண்டபம்
**முதன்மை விருந்தினர்:**
தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர்
உயர்திரு சு.கிருஸ்ணகுமார் அவர்கள்
**நிகழ்வுகள்**
★ ஓய்வுபெற்ற, நீண்ட காலச் சேவையாற்றிய ஆசிரியர் கௌரவிப்பு
★ வைரவிழா போட்டிகளின் பரிசளிப்பு
★ கலை நிகழ்வுகள்

இந்த இரண்டு நாள் நிகழ்வுகளிலும் சிறப்பு விருந்தினர்களாக எமது பாடசாலையின் புகழ்பூத்த பழைய மாணவர்கள் கலந்து சிறப்பிக்க உள்ளார்கள்.
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
"கற்றாய்ந்து ஒழுகுக"
பாடசாலைச் சமூகம்,
யா/கைதடி விக்கினேஸ்வர வித்தியாலயம். (42770)(2.6.3)

## கடை வாடகைக்கு

கஸ்தூரியார் வீதியில் 26அடி அகலமும், 70 அடி நீளமும் முற்றாக மாபிள் பதிக்கப்பட்ட இணைந்த குளியலறையுடன் சகலவசதிகளும் கொண்ட கடைத் தொகுதி வாடகைக்குண்டு. (நிதிநிறுவனங்கள், வங்கிகளுக்கு ஏற்றது)

தொடர்பு: 077 732 4648/077 732 4837

## வேலையாள் தேவை

யாழ்.சுன்னாகத்தில் இயங்கும் நவீன குரோசரீஸ் Mini Food City இக்கு அனுபவமுள்ள பெண் ஊழியர்கள் உடனடியாகத் தேவை. சுன்னாகத்தை அண்டிய பிரதேசத்தில் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.

தொ.பே. 021 224 1731, 077 230 6642, 077 241 8804 (42771)(7.6.3)

240, Dr.Subramaniyam Road, Chunnakam.

## விற்பனைக்கு

LB-98 xx ரைமிங்கியர் டிப்பர் (3 கியூப்) விற்பனைக்குண்டு.
விலை ரூபா - 14,50000 (42768)(7.6.3)
தொ.பே. 075 424 7957

பாடசாலை மாணவர்களுக்கான
## ICT வகுப்புக்கள்
பாடத்திட்டத்துக்கமைய
## ஆரம்பமாகவுள்ளன

தரம் 6 முதல் தரம் 9 வரையான பாடசாலை மாணவர்களுக்கு பாடத்திட்டத்துக்கமைவாக தகவல் தொடர்பாடல் தொழில் நுட்ப பாட வகுப்புக்கள் அநுபவமிக்க ஆசிரியர்களினால் ஆரம்பிக்கப் படவுள்ளது.

நியூகேற்வே ரெக்
347, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
021 567 5555

கிளைகள்:
நவீன சந்தை மேல்மாடி, சாவகச்சேரி, 021 567 8444
50, பருத்தித்துறை வீதி நெல்லியடி, 021 226 3395
கரடிப்போக்குச் சந்தி, கண்டி வீதி,கிளிநொச்சி 021 228 0068

நத்தார், புதுவருட கால விசேட சலுகைகள்
2014ஆம் ஆண்டில் காலடி எடுத்து வைக்கும் மாணவச் செல்வங்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்

## உங்கள் ஸ்ரீலங்கா புத்தகசாலையில்...

- பாடப்புத்தகங்களுக்கு விசேட விலைக் கழிவு (15%) வழங்கப்படும்.
- 1000/= மேல் (Stationary's) பொருள்கள் கொள்வனவு செய்பவர்களுக்கு விசேட அன்பளிப்பு வழங்கப்படும்.
- வாடிக்கையாளர் நலன் கருதி ஞாயிற்றுக்கிழமைகளிலும் திறக்கப்படும் என்பதை அறியத் தருகின்றோம்.

## ஸ்ரீலங்கா புத்தகசாலை

இல.234, கே.கே.எஸ். றோட், யாழ்ப்பாணம்.
T.P: 021 222 2573

மீண்டும் திருவாதவூரடிகள் புராணம் இங்கே பெற்றுக்கொள்ளலாம்.
(சொற்ப பிரதிகளே கையிருப்பில் உள்ளன)

அதிரடி விலைக்கழிவு
No-1
5 கட்டு - 47/=
4 கட்டு - 37/=

(C14345)(7.6.3)

# நல்லூர் சரவணா ரெக்ஸ்

Saravana Tex

**770, கே.கே.எஸ்.வீதி (தட்டாதெருச் சந்தி) யாழ்ப்பாணம்.**

நாளை முதல் நத்தார் புதுவருடத்தை முன்னிட்டு மாபெரும்
பிரமிக்க வைக்கும்
விசேட விலைக் கழிவும் பெறுமதிமிக்க
அன்பளிப்புக்களும்

## இன்றே முந்துங்கள்

05 அதிர்ஷ்டசாலிகளுக்கு
மடிக்கணினிகள்
(Laptop)









| | |
|---|---|
| ஆண்களுக்கான கொட்டன் சேட் (Modern Shirt) | ~~1650~~/= 800/= |
| ஆண்களுக்கான T.சேட் | ~~1200~~/= 700 |
| சிறுவர்களுக்கான T.சேட் | ~~900~~/= 450/= |
| ஆண்களுக்கான ரவுசர் ரெடிமேற் சோக்கோ | ~~2400~~/= 1650/= |
| ஆண்களுக்கான (Wedding சேட்) | ~~1600~~/= 900/= |
| கொட்டன் பஞ்சாபி துணிகள் | ~~1450~~/= 850/= |

மற்றும் சில்க் சாறிகள், கொட்டன் சாறிகள், பன்சி சாறிகள்,
பட்டு சாறிகள், சீக்குன்ஸ் சாறிகள் மற்றும்
றெடிமேற் சல்வார்கள், ரொப் வகைகள்
எனப் பல டிசைன்களில் புதுப் புது தெரிவுகள்

யார் அந்த 05 அதிர்ஷ்டசாலிகள்

3000 ரூபாவிற்கு மேல் கொள்வனவு செய்யும் வாடிக்கையாளரே
குலுக்கல் முறை மூலம் தெரிவு செய்யப்படுவர்

(C/10620)(2.3.6)






உலகில் உள்ள 1.7 பில்லியன் முஸ்லிம்களில் ஆளுமைமிக்க தலைவர்களின் தரப்படுத்தலில்முதல் 500 நபர்களில் ஒருவராக தெரிவு செய்யப்பட்டதன் மூலம்
எமது மாகாணத்திற்கும், நாட்டுக்கும், சமூகத்திற்கும் பெருமை தேடித்தந்த
கைத்தொழில் மற்றும் வணிகத்துறை அமைச்சரும், அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தேசிய தலைவருமான
கௌரவ அல் - ஹாஜ் ரிஷாட் பதியுதீன் அவர்களுக்கு எமது வாழ்த்துக்கள்....

இன நல்லுறவிற்கான ஒன்றியம் - வடமாகாணம்

(C/10259)

## ஆன்மிக சொற்பொழிவு

வடமராட்சி, டிசெ.20

வடமராட்சி ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் கோயில் சுற்றாடலில் அமைந்துள்ள பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் பிரதி ஞாயிற்றுக் கிழமை தோறும் நடை பெற்று வரும் ஆன்மிக நிகழ்வு வரிசையில் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு சொற்பொழிவு இடம் பெறும்.

'வழிபாடும் மக்கள் மன நிலையும்' என்னும் தலைப்பில் இடம் பெறும் இந்தச் சொற் பொழிவை சிவ.தினேஷ் நிகழ்த்துவார். (ஒ-8)

## வாராந்த கலை நிகழ்வில் முருக நாம பஜனை

வடமராட்சி, டிசெ.20

தொண்டமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடத்திவரும் வாராந்த நிகழ்வு வரிசையில் இன்று வெள்ளிக் கிழமை முருகநாம பஜனை இடம்பெறும். முருகன் அடியார்கள் ஒன்றிணைந்து பக்க வாத்தியங்கள் சகிதம் இந்தப் பஜனையை நிகழ்த்துவார்கள். (ந-8)

## சங்கானைச் சந்தையில் தரகர்களின் தொல்லை

### விவசாயிகள் திண்டாட்டம்

சங்கானை, டிசெ.20

விவசாயிகள் தமது உற்பத்தி விளைபொருள்களைப் பல இடங்களிலிருந்தும் விற்பனைக்காக சங்கானை மரக்கறிச் சந்தைக்குத் தினமும் கொண்டு வருகின்றனர். அவர்களது விளைபொருள்களை நட்டம் ஏற்படாத வகையில் விற்பதற்கு, இந்தச் சந்தையில் தரகர் போல் நடப்பவர்கள் பல இடையூறுகளை ஏற் படுத்தி வருகின்றனர்.

அண்மையில் அளவெட்டிப் பகுதியைச் சேர்ந்த ஒரு விவ சாயி ஒரு தொகை மரவள்ளிக் கிழங்கை விற்பனைக்காக இங்கு கொண்டு வந்திருந்தார். மொத்தம் 59 கிலோ என்றும் அதில் 9 கிலோ கழிவு என்றும் தரகர் தெரிவித்துள்ளார்.

ஒரு கிலோ 22 ரூபா வீதம் விலை பேசப்பட்டது. விற்பனை முடிவில் விவசாயிக்கு ஒரு கிலோ 20 ரூபா வீதம் வழங்கப்பட்டுள்ளது. ஆனால் சில்லறை விலைக்கு ஒரு கிலோ மரவள்ளிக்கிழங்கு 40 ரூபாவுக்கு விற்பனை செய் யப்படுகின்றது. கொள்முதல் செய்யும் போது நிறுவையிலும் மோசடி நடப்பதாகவும் கூறப்படுகிறது.

விவசாயியின் உழைப்பை விட இரண்டு மடங்கு ஆதாயத்துடன் வியாபாரிகள் இலாபம் ஈட்டுகின்றனர். இவ்வாறான சம்பவங்கள் தினமும் இந்தச் சந்தையில் இடம்பெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. காலை நேரம் விவசாயிகள் தமது விளை பொருள்களை விற்றுவிட்டு, தோட்ட வேலைகள் இருப்பதால் விரைவில் செல்லவேண்டும் என நினைத்து, கேட்கும் விலைக்குத் தமது பொருள்களை விற்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு அவர்கள் உள்ளாகியுள்ளனர்.

இதனைச் சம்பந்தப்பட்ட பிரதேச சபையினர் தமது கவனத்தில் எடுத்து இந்தத் தரகர் தொல்லையைத் தீர்க்க உதவ மாட்டார்களா என விவசாயிகள் ஆதங்கப்படுகின்றனர்.

போருக்கு முன்னைய காலத்தில் ஓர் ஒழுங்கான முறை இந்தச் சந்தையில் பேணப்பட்டு வந்தமையும் குறிப்பிடத் தக்கது. (ஒ-29)

## பயிர்ச் சிகிச்சை முகாம்

யாழ்ப்பாணம், டிசெ.20

பிரதி விவசாயப் பணிப்பாளர் (விரிவாக்கல்) அலுவலகத்தினால் உடுவில் விவசாயப் போதனாசிரியர் பிரிவிலுள்ள விவசாயிகளின் பயிர்ச் செய்கை சார்ந்த பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்கும் முகமாக செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு பயிர்ச் சிகிச்சை முகாம் ஒன்று ஏழாலை கிழக்கு வாசிகசாலையில் நடைபெறவுள்ளது. இந்தப் பயிர்ச் சிகிச்சை முகாமில் விவசாயிகளின் வயல் பிரச்சினைகளுக்கு ஆலோசனைகள் வழங்கப்படவுள்ளன.

இதில் விவசாய விரிவாக்கம், விவசாய ஆராய்ச்சி நிலையம், விவசாய விதை நடுகைப் பிரிவு மற்றும் தென்னை அபிவிருத்திச் சபை ஆகியவற்றின் உத்தியோகத்தர்கள் கலந்து கொள்வர்.

விவசாயிகள் பயிர்களின் பிரச்சினைக்குரிய மாதிரிகளுடன் வருகை தந்து தீர்வுகளையும், ஆலோசனைகளையும் பெற்றுக் கொள்ளுமாறு யாழ்.மாவட்ட பிரதி விவசாயப் பணிப்பாளர் கி.சிறிபாலசுந்தரம் தெரிவித்துள்ளார். ஒவ்வொரு மாதமும் மூன்றாம் வார வியாழக்கிழமையில் ஏழாலை கிழக்கு வாசிகசாலையில் இந்தப் பயிர்ச் சிகிச்சை முகாம் நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது. (ந)

## செயன்முறைப் பரீட்சை

யாழ்ப்பாணம், டிசெ.20

வடக்கு மாகாண பொதுச் சேவைகள் தொழில்நுட்ப அலுவலர்கள் வகுப்பு I.II.III ஆகிய பதவிகளில் உள்ளவர்களுக்கான திணைக்கள எழுத்து மற்றும் செயன்முறைப் பரீட்சைகள் நாளை சனிக்கிழமை நடத்தப்படுமென மாகாணப் பொதுச் சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளரால் அறிவிக்கப்பட்டுள்ளது. (ந-9).

## கண்ணீர் அஞ்சலி

### வேலுப்பிள்ளை கந்தசாமி (J.P)

[ஓய்வுநிலை தலைமை ஆசிரியர்]



எமது கல்லூரியின் முன்னை நாள் ஆசிரியரும் இன்றைய கிளிநொச்சி மாவட்ட வலயக் கல்விப் பணிப்பாளருமாகிய க.முருகவேல் அவர்களின் அன்புத் தந்தையார் வேலுப்பிள்ளை கந்தசாமி அவர்கள் 16.12.2013 அன்று இறைபதம் அடைந்த துயரால் வாடும் குடும்பத்தாருக்கும், உறவினர்களுக்கும் எமது ஆழந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகிறோம்.

**கிளி/புனித திரேசா பெண்கள் கல்லூரி**
**அதிபர், ஆசிரியர்கள், கல்விசாரா பணியாளர்கள்,**
**பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,**
**பாடசாலை அபிவிருத்திக் குழு.**

(கி/10375) (7.6.3)

## மரண அறிவித்தல்

### நாகமணி தாமோதரம்பிள்ளை



முல்லைத்தீவு, கொக்குத்தொடுவாயைப் பிறப்பிடமாகவும் தில்லையர் வளவு, வதிரி, கரவெட் டியை வசிப்பிடமாகவும் தற்போது கனடா மொன்றியலை வசிப்பிடமாகவும் கொண்ட நாகமணி தாமோதரம்பிள்ளை 15.12.2013 ஞாயிற்றுக் கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகமணி-பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற மார்க்கண்டு- இராசம்மா தம்பதியரின் மூத்த மருமகனும், பாக்கியத்தின் அன்புக் கணவரும், முருகதாஸ் (கனடா), பொன்இன்பராணி (கனடா), வசந்தராணி (கனடா), மணிவண்ணன்(கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், செல்வேந்திரராசா(கனடா), சாந்தகுமார் (கனடா), மனோன்மணி ஆகியோரின் அன்பு மாமனாரும், நிலோஜன் (கனடா), லக்சனா (கனடா), தனுசன்(கனடா) ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற குட்டித்தம்பி, காலஞ்சென்ற சின்னாச்சி ஆகியோரின் அன்புச் சகோதரனும், சின்னத்தங்கம், இராசேந்திரம், வனராசசிங்கம் (கனடா), கிட்டினராசா(கனடா), பரிமளா, காலஞ்சென்ற நடராசா, காலஞ்சென்ற சிவராமலிங்கம் ஆகியோரின் சகலனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (22.12.2013) ஞாயிற்றுக்கிழமை மு.ப.10.00 மணிக்கு கனடா மொன்றியலில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மார்க்கண்டு இராசேந்திரம்
(மைத்துனர்) 077 644 6221

புதுத்தோட்டம், அல்வாய் தெற்கு,
அல்வாய்.

(43008)(3.6.4)

## மக்கள் பார்வைக்கு வேலணை 'பட்ஜெட்'

வேலணைப் பிரதேச சபையின் 2014 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத்திட்டம் நேற்று வியாழக்கிழமை தொடக்கம் எதிர்வரும் 26 ஆம் திகதி வரை மக்களின் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளது.

இதனை அலுவலக நேரத்தில் தலைமை அலுவலகத்தில் பார்வையிடலாம் என வேலணைப் பிரதேச சபை தவிசாளர் தெரிவித்துள்ளார். (ந)

## மின்னேரியா செல்லும் மாணவர்களுக்கு விசேட பஸ்சேவை

யாழ்ப்பாணம்.டிசெ.20

யாழ்.மாவட்டத்தில் இருந்து தலைமைத்துவப் பயிற்சிக்காக மின்னேரியா செல்லவுள்ள மாணவர்கள் மற்றும் கல்வி சார் அமைப்புக்களின் நலன் கருதி இலங்கை போக்குவரத்துச் சபையினால் விசேட பஸ் சேவை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தப் பஸ் நாளை சனிக்கிழமை அதிகாலை 5 மணிக்கு யாழ்.பஸ்நிலையத்தில் இருந்து புறப்படும் என்று இலங்கைப் போக்குவரத்து சபையின் யாழ்.சாலை முகாமையாளர் செ.குலபாலச்செல்வம் அறிவித்துள்ளார். (ஒ-14)

## துயர் பகிர்கின்றோம்

வவுனியா வடக்கு பிரதேச செயலக கணக்காளர்
**பா. நாகேஸ்வரபாலா** அவர்களின் தந்தை

### செல்லப்பா பாலசிங்கம்

அவர்கள் இறைபதம் எய்திய செய்தி அறிந்து மிக்க துயருறுவதுடன் அன்னாரது ஆத்மாசாந்தியடையப் பிரார்த்திப்பதுடன் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**பிரதேச செயலர்,**
**உதவிப் பிரதேச செயலர்,உத்தியோகத்தர்கள்,**
**பிரதேச செயலகம், வவுனியா வடக்கு.**

(43654) (7.6.3)

## நன்றி நவிலல்

### திருமதி சத்தியபாமை நடராசா

அவர்கள் (19.11.2013) செவ்வாய்க்கிழமை இரவு சிவபதம் அடைந்தார். எங்கள் சகோதரியின் இறுதிக்கிரியை நிகழ்வில் பங்குபற்றியவர்களுக்கும் அனுதாபச்செய்தி அனுப்பியவர்களுக்கும் மற்றும் சகல வழிகளிலும் உதவிபுரிந்த உறவினர், நண்பர்கள், ஊரவர்கள், மூளாய் வைத்தியசாலையில் ஏழரை ஆண்டுகள் தங்கி இருந்து வைத்தியம் செய்தபோது மிகவும் அன்பாகவும், பண்பாகவும் கவனித்து வந்த வைத்திய அதிகாரிகள்,தாதிமார்கள், முன்னாள், தற்போதைய நிர்வாகத்தினர் மற்றும் தனிப்பட்ட முறையில் உதவிய உதவியாளர்கள் யாவருக்கும் எமது மனமார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அத்துடன் நாளை (21.12.2013) சனிக்கிழமை அன்னாரின் சகோதரி திருமதி சத்தியஞானலட்சுமி இந்திரராஜாவின் இல்லத்தில் நடைபெறவுள்ள ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**சுழிபுரம் மத்தி,**
**சுழிபுரம்.**

பன்னாலை சிங்கப்பூர்
மாணிக்கத்தின்
**மக்கள், மருமக்கள்.**

(42732) (7.6.3)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
08.03.1949

மறைவு
30.12.2012

அமரர் **நடராசா முருகதாசன்**

(உரிமையாளர்-விநாயகர் ஸ்ரோர்ஸ் கைதடிச்சந்தி)

திதி:திருதியை

ஓர் ஆண்டு ஆனதுவோ
உங்கள் முகம் கண்டு
ஆறவில்லை நம் இதயம்
அன்பும் பாசமும் நிறைந்த-தெய்வமே!
உங்கள் திருமுகம் காணாமல்
ஆறவில்லை எங்கள் துயர்.

**குடும்பத்தினர்.**
**கைதடி கிழக்கு, கைதடி.**

(42772)(3.6.4)

## சிறப்பான திருவெம்பாவை பூசைகள்

முல்லைத்தீவு மாவட்டம் ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் திருவெம்பாவை பூசை வழிபாடுகள் சிறப்பாக இடம்பெற்றுள்ளன. கற்சிலைமடு ஸ்ரீவிநாயகர் ஆலயம், நாகபூஷணி அம்மன் ஆலயம், ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரர் ஆலயம் ஆகியவற்றில் இந்தப் பூசை வழிபாடுகள் சிறப்பாக இடம் பெற்றுள்ளன.

அதிகாலை ஆலயங்களில் இடம்பெற்ற பூசை வழிபாடுகளில் இங்குள்ள மக்கள் பக்தி பூர்வமாகக் கலந்து கொண்டதைக் காண முடிந்தது. (க-500)

## நான்காம் வருட நினைவலைகள்

### அமரர் வேலுப்பிள்ளை மோகனநாதன்

(SLPS-I முன்னாள் அதிபர், யா/அராலி இந்துக் கல்லூரி)

திதி :
அபரபட்சத் திருதியை
[20.12.2013]

மண்ணகம்
24.04.1952

விண்ணகம்
03.01.2010



நாம் நல்வாழ்வு வாழ
வழிகாட்டிய எம் தந்தையே
நீங்கள் எம்மைவிட்டுப் பிரிந்து
நான்கு வருடங்கள் சென்றாலும்
உங்கள் பாசநினைவலைகள்
எம்நெஞ்சைவிட்டு நீங்காது.

கலைநகர்,
வட்டு.வடக்கு,
சித்தன்கேணி.

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்

(42753) (7.6.3)

## மடுக்கந்தை வீதி புனரமைப்பு

வவுனியா, டிசெ.20
வவுனியா ஈரப்பெரியகுளம் மடுக்கந்தை வீதி புனரமைப்பு செய்யப்பட்டு வருகின்றது.
நீண்டகாலமாகப் புனரமைப்பு மேற்கொள்ளப்படாமல் இருந்து வந்த இந்த வீதி, உள்ளூராட்சி அமைச்சின் நிதி மூலம் வீதி அபிவிருத்தித் திணைக் களத்தினால் புனரமைக்கப்பட்டு வருகின்றது.
போர்க் காலத்தில் அச்சம் காரணமாக மக்கள் இந்த வீதியில் போக்குவரத்தை மேற்கொள்ளவில்லை. இதனால் பற்றை வளர்ந்து காடு மண்டிய நிலையில் இந்த வீதி காட்சியளித்தது. (க-421)

# திருகோணமலைத் தாக்குதலுக்கு சமாதானப் பேரவையும் கண்டனம்

கொழும்பு,டிசெ.19
இலங்கை அரசு காணாமற் போனவர்களைக் கண்டு பிடிப்பதற்கான விசாரணைகளை நடத்தும் ஆணைக்குழுவொன்றை நியமித்துள்ளநிலையில் காணாமற்போனவர்களைக் கண்டுபிடித்து தரும்படி கோரி திருகோணமலையில் நடந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டவர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டமை கண்டிக்கத் தக்கது என்று தேசிய சமாதானப் பேரவை தெரிவித்துள்ளது.
இது தொடர்பாக சமாதானப் பேரவை வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-
ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்கள் மீது தாக்குதல் நடத்திய குண்டர்கள் அவர்கள் வைத்திருந்த சுலோக அட்டைகளைக் கிழித்தெறிந்து தாக்கியிருக்கிறார்கள்.
அவர்களைக் காயமுறச் செய்து அரசுக்கெதிராக ஆர்ப்பாட்டங்கள் செய்யக் கூடாது என்று எச்சரித்துள்ளார்கள். காணாமற் போனவர்கள் தொடர்பான பிரச்சினைகளை உலகுக்கு உணர்த்த முயற்சிக்கப்படும் போதெல்லாம் இடையூறுகள் ஏற்படுத்தப்படுகின்றன.
இந்த தாக்குதலை நடத்தியவர்கள் மீது இதுவரை எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படாதிருப்பது அரசும் இதற்கு உடந்தையாக இருந் துள்ளதைக் காட்டுகின்றது.
இவ்வாறான தாக்குதல்களை நடத்துபவர்கள் தண்டனைக்குஉள்ளாகாமல்இருப்பதானது மனித உரிமைகளை வலியுறுத்தி அமைதியாக மேற்கொள் ளப்படும் ஆர்ப்பாட்டங்கள் கூட ஏற்றுக்கொள்ளப்படமாட்டாதென்பதை வெளிப்படுத்து கிறது.
இந்த சம்பவமானது அடிப்படை உரிமைகளையும் சட்ட ஆட்சியையும் நிலைநாட்ட உறுதி கொண்டிருப்பதாக அரசு கூறிக்கொள்வதற்கு நேர்மாறாக அமைந்துள்ளது- என்றுள்ளது. (த-4)

## தொழில்சார் கற்கைநெறிகள்

01. ஆங்கில தட்டச்சு
02. தமிழ் தட்டச்சு
03. கணினி-MS office (ஆசிரியர் E.Y.Patrick)


எதிர்வரும் 01.01.2014 புதன்கிழமை ஆரம்பமாக உள்ளன. இவ்வருடம் க.பொ.த.சாதாரணதர பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களும் விண்ணப்பிக்கலாம்.
(வார நாள்களில் மட்டும் 150 மணித்தியால வகுப்புக்கள்) ஆர்வமுடையோர் நேரடியாக அல்லது தொலைபேசி மூலம் தொடர்பு கொள்ளவும். (021 226 4211/071 828 8061)
வடமராட்சி [illegible],
வதிரி, கரவெட்டி. (43010)(4.6.3) தலைவர்.

# மீன்குஞ்சு உற்பத்தி நிலையத்தின் கட்டுமானப் பணிகள் பூர்த்தி

*மன்னார் கட்டுக்கரைக் குளப் பகுதியில்*

மன்னார், டிசெ.20
மன்னார் கட்டுக்கரைக்குள் மீன் குஞ்சு உற்பத்தி நிலையத்தின் கட்டுமானப் பணிகள் நிறைவடைந்துள்ளன.
இதன் மூலம் வருடத்துக்கு 2.5 மில்லியன் மீன் குஞ்சுகளை உற்பத்தி செய்ய முடியுமென நன்னீர் வள அபிவிருத்தி அதிகாரசபையின் வவுனியா மாவட்ட அதிகாரியான பா.நிருபராஜ் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்;
மன்னார் கட்டுக்கரைக் குளத்தில் இரண்டரை ஹெக்ரெயர் நிலப்பரப்பில் இந்த மீன் குஞ்சு உற்பத்தி நிலையம் 10 மில்லியன் ரூபா செலவில் ஜப்பான் அரசின் நிதியுதவியுடன் கட்டிமுடிக்கப்பட்டுள்ளது.
இதன் மூலம் வவுனியா, மன்னார், கிளிநொச்சி, அநுராத புரம், பொலநறுவை மாவட்டங்களைச் சேர்ந்த மக்களுக்கு தேவையான மீன் தேவையை நிறைவு செய்ய இயலும்.
தற்போது குளத்து மீன்களுக்குத் தட்டுப்பாடு நிலவுகிறது. கடந்த செப்ரெம்பர் மாதத்துக்குப் பின்னர் மீன் குஞ்சுகள் குளங்களில் விடப்படவில்லை. வறட்சி காரணமாகவே குளங்களில் நாங்கள் மீன் குஞ்சுகளை விடவில்லை.
போதியளவு மழைவீழ்ச்சி இல்லாததால் குளங்களில் குறைந்த அளவு நீரே காணப்படுகின்றது.
இதனால் மீன்களின் பெருக்கம் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே இடம்பெறுகின்றது.

> இதன் மூலம் வவுனியா, மன்னார், கிளிநொச்சி, அநுராத புரம், பொலநறுவை மாவட் டங்களைச் சேர்ந்த மக்க ளுக்கு தேவையான மீன் தேவையை நிறைவு செய்ய இயலும்.




தற்போது குளங்களில் இருந்து கிடைக்கும் குறைந்தளவிலான மீன்களை அநுராத புரம், பொலநறுவைப் பகுதிகளுக்கு இலாபநோக்கில் விற்பனை செய்கின்றனர்.
இதனால் வவுனியா பகுதி மக்களுக்கு குளத்து மீன்கள் கிடைப்பது அரிதாகிவிட்டது. இங்கு கடல் மீன்களும் கிடைப்பதில்லை. மன்னாரில் கடல் மீனையும், குளத்து மீன்களையும் நம்பியிருக்கும் மக்கள் ஏமாற்றமடைந்துள்ளனர்.
கடல் மீன்கள் கிடைக் காததால் குறைந்த விலையில்கிடைக் கும் குளத்து மீன்களுக்கு கிராக்கி அதிகரித்துள்ளது.
இந்த ஆண்டு வவு னியாவில் 18 லட்சம் மீன் குஞ்சுகள் குளங்களில் விடப்பட்டன. மன்னாரில்14லட்சம் மீன் குஞ்சுகளே விடப்பட்டன. மன்னார் கட்டுக்கரை குளத்தில் மீன் குஞ்சு உற்பத்தி நிலை யம் அமைக்கப்பட்டதன் மூல மாக மீன்களுக்கான தட்டுப்பாடு அடுத்த ஆண்டு குறையும் - என்றார். (க-402)

## கலைகளை வளர்க்க அறங்காவலர் கழகம்

முல்லைத்தீவு, டிசெ.20
கலைகளை மீண்டும் வளர்க்கும் பொருட்டு கற்சிலைமடுவில் இதற்கான அறங்காவலர் கழக நிர்வாகிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.
போசகராக வடமாகாண சபை உறுப்பினர் மருத்துவர் சி.சிவமோகன் தெரிவானார். தலைவராக சி.ஜெயரட்ணம், செயலாளராக கு.கிருஷ்ணராஜ், பொருளாளராக மு.சிவநேசன் ஆகியோரும் உப தலைவராக ச. தில்லை நடராசா, உப செயலாளராக இ.சத்தியமூர்த்தி ஆகியோரும் நிர்வாக சபை உறுப்பினர் களாக, சி.சிறீனிவாசகம், மு.ருக தாஸன், ச.தில்லையம்பலம், செ.காசிப்பிள்ளை, இ.விஜய குமார், ம.யோகேஸ்வரி, கு.ஜெயந்தினி, து.பெரியசாமி ஆகியோரும் தெரிவானார்கள். (க-500)

# சிறுத்தை நடமாட்டம்; கால்நடைகள் மாயம்

*கற்சிலைமடு கிராமத்தில்*



முல்லைத்தீவு, டிசெ.20
கற்சிலைமடு கிராமத்தில் சிறுத்தைகளின் நடமாட்டமும் கால்நடைகள்காணாமற்போகும்சம்பவங்களும் அதிகரித்துள்ளன.
குறிப்பாக கற்சிலைமடு 3 ஆம் கண்டத்தில் மக்கள் வசிக்கும் பகுதிகளில் சிறுத்தை நடமாடுவதை அவதானிக்க முடிகின்றது. கடந்த 13 ஆம் திகதி இங்கு கட்டி வைக்கப்பட்டிருந்த பசுமாடொன்றைச் சிறுத்தை பாய்ந்து பிடித்தது. அந்த மாடு அவலக் குரலெழுப்பியதுடன் நாய்களும் பலமாகக் குரைத்தன. இதன்போது அந்த வீட்டில் இருந்தவர்கள் வெளியே வந்து பலமாகச்சத்தமிட்டனர். இதனால் வெருண்ட அந்தச்சிறுத்தை காட்டினுள் தப்பியோடி விட்டது.
இங்கு இதுவரை மீள்குடியமராத சிலரின் காணிகள் துப்புரவு செய்யப்படாது காடுகளாக மாறி இருப்பதன் காரணமாகவே இங்கு யானை, கரடி, சிறுத்தை என்பனதங்கியிருந்து பொதுமக்களுக்குப் பாதிப் புக்களை ஏற்படுத்துவதாக இந்தப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். (க-500)

## சாவகச்சேரிநகராட்சி மன்றம்
### வழங்குநர்களையும் ஒப்பந்தகாரர்களையும் பதிவுசெய்தல் - 2014

சாவகச்சேரி நகராட்சி மன்றமானது 2014ஆம் ஆண்டுக்கான கீழ்க் குறிப்பிடப்பட்ட பொருள்கள், சேவைகளை வழங்குவதற்கு தம்மை பதிவு செய்து கொள்ளவிரும்பும் வழங்குநர்கள், உற்பத்தியாளர்கள், ஒப்பந்தகாரர்கள், அங்கீகரிக்கப்பட்ட சங்கங்கள், வியாபார நிறுவனங்கள் மற்றும் சேவையாளர்கள் ஆகியோரிடமிருந்து விண்ணப்பங்களை கோருகின்றது. விண்ணப்பப் படிவங்கள் எமது அலுவலகத்தில் 1000ரூபாவை செலுத்திப் பெற்றுக்கொள்ள முடியும். விண்ணப்பங்கள் யாவும் 10.01.2014 ஆம் திகதிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.
தொகுதிகள்

தொகுதி"A"–பொருள்கள் வழங்குதல் (பொது)
தொகுதி"B"–சேவைகள்/வேலை
தொகுதி"C"–வாகன திருத்தமும் சேவிஸ் செய்தலும்

| தொகுதி இல | பொருள்கள் வழங்குதல் (பொது) |
|---|---|
| A – 01 | காகிதாதிகள், எழுதுபொருள்கள், உபகரணங்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய பொருள்கள் |
| A - 02 | தளபாடங்களும், அலுவலக உபகரணங்களும் (மரம்/உருக்கு/இரும்பு ஏனையவை) |
| A - 03 | கணினிகள், கணினியுடன் தொடர்புடைய ஏனைய உபகரணங்கள், தொலைநகல் இயந்திரம் இவற்றுடன் தொடர்புடைய ரோனர்கள், றிபன்கள் மற்றும் ஏனைய அலுவலக மின் உபகரணங்கள் |
| A - 04 | பன்னல் திரைச் சீலைகள், சீருடைகள் மற்றும் துணிவகைகள் |
| A - 05 | குளியலறைப் பொருத்திகள், மாபிள்க்கல் வகைகள் நீர்வழங்கலுக்கான பொருள்கள் மற்றும் அதனோடிணைந்த பொருள்கள் |
| A - 06 | கட்டட இரும்புப் பொருள்கள், பெயின்ற், வாணிஸ் மற்றும் சகல ஹாட்வெயர் பொருள்கள். |
| A - 07 | மின்சாரப் பொருள்கள், அதன் உதிரிப்பாகங்கள், மின் இணைப்புக்கான பொருள்கள், மின் மோட்டார்கள், மின்சார பல்புகள், மின் விசிறிகள் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய பொருள்கள். |
| A - 08 | தும்புத்தடி, விளக்குமாறு, கால் துடைப்பம், மொப்பர் மற்றும் ஏனையவை |
| A - 09 | அழுக்கு நீக்கும் பவுடர்கள், விம் ஹார்பிக் மற்றும் கிருமிநாசினிகள், ஏனையவை |
| A - 10 | வாகன உதிரிப்பாகங்கள், துணைப்பொருள்கள் ரயர், ரியூப் மற்றும் ஏனையவை. |
| A - 11 | தோல் உற்பத்திப் பொருள்கள், கம், சப்பாத்துக்கள் |
| A - 12 | எரிபொருள்கள், உராய்வு நீக்கிகள். |
| A - 13 | நூலகங்களுக்கான நூல்கள் |
| A - 14 | இரும்புப் பொருள்கள் |
| A - 15 | கற்கள், மணல் வகைகள் |
| A - 16 | திராந்திகள், பலகைகள், சட்டங்கள் |
| A - 17 | பனைமரங்கள், சலாகைகள் |
| A - 18 | பாதணிகள், தோற்பொருள்கள் |
| A - 19 | அலங்காரப் பொருள்கள் |
| A - 20 | இலத்திரனியல் சாதனங்கள், துணைப்பொருள்கள் |
| **தொகுதி இல** | **சேவைகள் விவரம்** |
| B - 01 | ஒலியமைப்பு சாதனங்களும் அதனோடு தொடர்புடைய உபகரணங்களும், தொழில்நுட்ப ஆலோ சனையும் வழங்கல் |
| B - 02 | உருக்கு, மரத் தளபாடங்கள் திருத்தம் செய்தல். |
| B - 03 | மின் உபகரணங்கள் திருத்தம் செய்தல் (குளிரூட்டி, குளிராக்கி, தொலைநகல், நிழற்படப்பிரதி இயந்திரம், கணினி) |
| B - 04 | மின் மோட்டார்கள், நீர் இறைக்கும் இயந்திரங்கள், மின்விசிறிகள், ஜெனரேட்டர்கள் திருத்துதலும் மீளமுறுக்குதலும். |
| B - 05 | பதிப்பகவேலை--சகலவித படிவங்கள், ஏனையவை |
| B - 06 | கட்டட அமைப்பும், திருத்தவேலையும் |
| B - 07 | உள்ளகதொலைபேசி இணைப்பும், பராமரித்தலும். |
| B - 08 | இலத்திரனியல் சாதனங்கள் திருத்தல். |
| B – 09 | கோலவுடை தைத்தல். |
| B – 10 | இறப்பர் முத்திரை வகைகள் தயாரித்து வழங்கல். |
| **தொகுதி இல** | **வாகனத் திருத்தமும் சேவிஸ் செய்தலும்** |
| C - 01 | சகலவிதமான வாகனத் திருத்தமும், மின்சார வேலை, வாகன உட்பக்கம், சீற் என்பவற்றுக்கான குசன் வேலை |
| C - 02 | சகலவிதமான வாகனமும் சுத்திகரிப்பு |
| C - 03 | வாகனங்களுக்கு ரியூப் ஒட்டுதல், உலோகவேலைகள் |

நிபந்தனைகள் :-

1. வழங்கல்கள்/சேவைகள் 2014 ஆம் ஆண்டிற்கு மட்டும் செல்லுபடியானதாகும்.
2. திருப்திகரமற்ற வழங்கல்கள்/சேவைகள் நிராகரிக்கும் உரிமை தவிசாளருக்கு உண்டு.
3. பதிவிற்காகப் பெறப்பட்ட விண்ணப்பங்களை எதுவித காரணங்களும் தெரிவிக்காமல் நிராகரிக்கும் உரிமை தவிசாளருக்கு உண்டு.
4. மேலதிக விவரங்களை அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**இறப்பியேல் தேவசகாயம்பிள்ளை**
தவிசாளர்.
நகராட்சி மன்றம், சாவகச்சேரி.
(27611)(10.6)

## பழைய மாணவர் சங்க விசேட ஒன்று கூடல்

யா/ இமையாணன் அ.த.க. வித்தியாலயம்

தலைவர் : திரு. சி. வசந்தகுமார்
காலம் : 22.12.2013 ஞாயிற்றுக்கிழமை பி.ப. 2.30 மணி
இடம் : வித்தியாலய மண்டபம்

பாடசாலையின் அபிவிருத்தி தொடர்பாக இந்த ஒன்று கூடலில் கலந்துரையாடப் படவுள்ளதால் இங்கு கல்வி கற்று பல்வேறு மாவட்டங்களிலும் இருக்கும் சகல பழைய மாணவர்களையும் இந்த அறிவித்தலை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுத் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

சி. வசந்தகுமார்
தலைவர்

த. விஜயசங்கர்
செயலாளர்

## மரண அறிவித்தல்

### திருமதி பாக்கியலட்சுமி முத்துலிங்கம்



வேலணை 3ஆம் வட்டாரத்தைப் பிறப்பிட மாகவும், 63, சிவகுருநாதர் வீதி, பிறவுண் றோட்டை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பாக்கியலட்சுமி முத்துலிங்கம் நேற்று (19.12. 2013) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏறுக்கொள்ளவும்.

63, சிவகுருநாதர் வீதி,
பிறவுண் றோட், யாழ்ப்பாணம்.

தகவல் :
குடும்பத்தினர்.

(42787)(10.14)

## வன்முறைகளைக் கட்டுப்படுத்த அரச நிறுவனங்களில் புதிய பிரிவு

கொழும்பு,டிசெ.20

சிறுமிகள் மற்றும் பெண்க ளைக் குறிவைத்து நடத்தப் படும் அனைத்து விதமான வன்முறை களையும் தடுக்கும் வகையில் அரச நிறுவனங்க ளுக்குள் புதிய பிரிவுகளை நிறுவுவதற்கு சிறுவர் அபிவி ருத்தி மற்றும் மகளிர் விவகார அமைச்சு நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாகத் தெரி விக்கப்படுகிறது.

இதன் முதற்கட்ட நடவடிக்கை அமைச்சுக்கள் மட்டத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் இந்தச் செயற்றிட்டத்துக்கென பெண்பட்டதாரிகள் உதவி அதிகாரிகளாகப் புதிதாகச் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளதாகவும் சிறுவர் அபிவி ருத்தி மற்றும் மகளிர் விவகார அமைச்சு தெரி விக்கிறது.

எதிர்காலத்தில்ஏனைய அரச நிறுவனங் களி லும் இத்தகைய பிரிவுகளை உரு வாக்கி அதன் மூலம் நிறுவனங்களில் பணி யாற்றும் பெண் உத்தியோகத்தர்கள் எதிர்நோக்கும் பிரச் சினைகள் குறித்து ஆராய்ந்து பாது காப்பை ஏற்படுத்த அமைச்சு திட்டமிட் டுள்ளதாகவும் தெரி விக்கப்படுகிறது.

(ஜ-22)

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

## சுத்திகரிப்பு தொழிலாளர் தேவை

சூழலை சுத்தமாக்கும் சேவையை வழங்கும் எமது நிறுவனத்துக்கு சுத்திகரிப்பு தொழிலாளர் (ஆண் / பெண்) தேவை.
கீழ் குறிக்கப்பட்ட முகவரியில் அமைந்திருக்கும் எமது அலுவலகத்துக்கு 24.12.2013 செவ்வாய்க் கிழமைக்கு முன்னர் நேரில் வரவும்.

கிளின் வெல் (பிறைவேட்) லிமிட்டெட்
இல. 45 காட்டுக்கந்தோர் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல : 021 2226239, 077 2209566

## மரண அறிவித்தல்

### திருமதி இலட்சுமி கிருஸ்ணபிள்ளை



அல்வாய் வடக்கு கொத்திய வத்தையைப் பிறப்பிடமாகவும், கூத்தாடியம்பதியை வதிவிட மாகவும் கொண்ட திருமதி கிருஸ்ணபிள்ளை இலட்சுமி நேற்று (19.12.2013) வியாழக் கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கிருஸ்ணபிள்ளையின் அன்பு மனைவியும் கி.கணேசனின் (ஓய்வு நிலை அதிபர், சமாதான நீதிவான்) பாசமிகு தாயும் தயாழினியின் அன்புமாமியும் காலஞ்சென்றநல்லதம்பி மற்றும்திருமதி இராசையா, பவளம் ஆகியோரின் பாசமிகு சகோதரியும் பாரதிதாசன், கண்ணதாசன், பிறேமதாசன், திருமதி கல்யாணி, வரதன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் சௌமிதா; விதுர்ஷன், அனுஷன், வினுஜா ஆகியோரின் அன்புப்பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.12.2013) வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு நடைபெற்று அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைக்காக சுப்பர்மடம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

பொதிகை, கூத்தாடியம்பதி
அல்வாய் வடக்கு, அல்வாய்.

தகவல்:
கி. கணேசன்(மகன்) .







Softlogic உடன் பண்டிகை கால குதூகலத்தில் இணையுங்கள்.

பண்டிகைக் காலத்தில் எங்கும் இல்லாத சலுகை யாழ்ப்பாணம் Softlogic காட்சியறையில் மாத்திரம்

☞ மொத்த விலைக்கோ, வட்டி இல்லாத தவணைக் கொடுப் பனவுக்கோ கொள்வனவு செய்யும் ஒரு TV இக்கு Panasonic DVD Player + Panasonic Rice Cooker அல்லது ஒரு Toaster இலவசம்.

புதிய Panasonic 32" LED TV ஒன்றை 5,999/= மாத்திரம் முற்பணமாக செலுத்தி வட்டியில்லாத 12 மாத கால தவணைக் கொடுப்பனவு முறையில் பெற்றுக்கொள்ளுங்கள்.
(நிபந்தனைகளுக்குட்பட்டது)

2013 டிசெம்பர் 31 வரை மட்டுமே

உடனே விரையுங்கள்:
இல. 63, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
077 791 4272, 077 739 7734

(C10376)(10.14)


# மரண அறிவித்தல்

## திருமதி கலாநிதிதேவி (கலா) நடனசிகாமணி



வல்வெல்டித்துறை மதவடி கப்பலுடையவர் கோயிலடியைப் பிறப்பிட மாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கலாநிதிதேவி (கலா) நடனசிகாமணி நேற்று முன்தினம் (18.12.2013) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிர்காமத்தம்பி - தேவசிகாமணி தம்பதியரின் அன்புமகளும் காலஞ்சென்ற தேசோமயானந்தம் மற்றும் புஸ்பகாந்திஅம்மா தம்பதியரின் அன்புமருமகளும் நடனசிகாமணி (நடனி) அவர்களின் அன்புமனைவியும். விஜயராயன் (ராஜன்), விஜயராணி (ராணி), பாலராஜன் (பாலுக்குட்டி), தர்மராஜன்(கண்ணன்), பாலராணி (ரதி), செல்வராணி (மீரா), செல்வராஜன் (சுதன்) ஆகியோரின பாசமிகு தாயும் யோகராணி, செல்வராசா (ராஜன்), மனோஜா, ஜெகந்தா (சாந்தி), சாந்தமுரளி (முரளி), குகநாதன் (குகா), சரிதா ஆகியோரின் அன்புமாமியும் காலஞ்சென்ற மனோகரதாஸ் மற்றும் விமலதாஸ் காலஞ்சென்ற குணாநிதிதேவி மற்றும் சுரேந்திரதாஸ், சுலோசனாதேவி, பவானிதேவி, ரஜனிதேவி ஆகியோரின் அன்புச்சகோதரியும் அமரசிகாமணி, தேவசிகாமணி, கமலவேணியம்மா, புத்திரசிகாமணி, கிருஸ்ணவேணியம்மா, விமலவேணியம்மா, யோக சிகாமணி, வசந்தவேணியம்மா, நீலவேணியம்மா, சத்தியவேணியம்மா காலஞ்சென்ற உத்தமசிகாமணி ஆகியோரின் அன்புமைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (20.12.2013) வெள்ளிக்கிழமை நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் வல்வெட்டித் துறை ஊறணி இந்து மயானத்துக்கு பி.ப. 3.00 மணிக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கப்பலுடையவர் கோயிலடி உதயசூரியன் வீதி,
மதவடி, வல்வெட்டித்துறை.
தொடர்புகளுக்கு :
077 6461453, 077 2376112

தகவல் :
கணவர், பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள் மற்றும்
குடும்பத்தினர்

# அனைவருக்கும் நியமனம் வழங்குக இல்லையேல் போராட்டம் தொடரும்

## வைத்தியசாலை தொண்டர்கள் உறுதி



யாழ்ப்பாணம், டிசெ. 20

தமக்கு நியமனம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் வரை போராட்டத்தைக் கைவிடப் போவதில்லை என வைத்தியசாலைத் தொண்டர்கள் நேற்று அறிவித்துள்ளனர்.

ஒரு வாரமாக யாழ்.போதனா வைத்தியசாலையில் போராட்டத்தில் ஈடுபடும் தொண்டர்கள் குறித்து நேற்று வைத்தியசாலை தரப்பு பதில் அளித்தது. இதில் ஜீ.சீ.ஈ சாதாரண தரம் தேர்ச்சி பெற்ற 80 பேருக்கு நியமனம் வழங்குவது என்றும், ஏனைய 126 பேரையும் ஒப்பந்த அடிப்படையில் பணியாற்ற அனுமதிப்பதாகவும் குறிப்பிட்ட காலத்துக்குள் அவர்கள் கல்வி தகமையை பூர்த்தி செய்ய வேண்டும் என்றும் வைத்தியசாலை நிர்வாகம் அறிவித்தது.

நிர்வாகத்தினரின் அறிவிப்பை ஏற்க மறுத்த தொண்டர்கள் எம்மை ஏமாற்றுவதற்கு வைத்தியசாலை நிர்வாகம் முயற்சிக்கிறது. நாம் நீண்ட காலம் பணியாற்றி போதிய அனுபவம் உடையவர்கள். எமது அனுபவத்தைக் கொண்டு வைத்தியசாலை நிர்வாகத்தி னர் எமக்கு நியமனம் வழங்க வேண்டும். இதனை விடுத்து கல்வித் தகமையைக் காரணம் காட்டி சிலருக்கு நியமனம் வழங்கிவிட்டு எம்மை புறமொதுக்க முயற்சிக்கிறது. இதனை நாம் ஒரு போதும் ஏற்கமாட்டோம் அனைவருக்கும் சாதகமான பதில் கிடைக்கும் வரை போராட்டம் தொடரும் என தெரிவித்தனர் (ஜ-4)

# நோயாளியின் நகைகளை தந்திரமாக அபகரித்த நபர்

## யாழ்.போதனா வைத்தியசாலையில் சம்பவம்

யாழ்ப்பாணம், டிசெ. 20

சிகிச்சை முடிந்து வரும் வரை நகைகளைப் பாதுகாப்பாக வைத்துத் தருகிறேன் எனக் கூறித் தந்திரமாக 6 பவுண் நகைகளை வாங்கியவர் அவற்றுடன் மாயமாக மறைந்தார். இந்தசம்பவம் நேற்று வியாழக்கிழமை யாழ்.போதனா வைத்தியசாலையில் இடம்பெற்றது.

யாழ். போதனா வைத்திய சாலைக்கு இரத்தப் பரிசோதனைக்கு வந்த ஊர்காவற்றுறையைச்சேர்ந்த பெண்ணே இவ்வாறு 6 பவுண் நகைகளைப் பறிகொடுத்தவராவார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:-

வைத்தியசாலைக்குச் சிகிச்சைக்காக வந்த குறித்த பெண்ணுக்கு அருகில் சிவில் உடையில் ஒருவர் அமர்ந்திருந்துள்ளார். அந்தச் சந்தர்ப்பத்தில் ஏற்பட்ட அறிமுகத்தை அடுத்து அவர் வைத்தியசாலைப் பணியாளர் என எண்ணி அவரது பேச்சை நம்பி தான் அணிந்திருந்த 6 பவுண் நகையைக் கழற்றி பாதுகாப்பாக வைத்திருந்து தருமாறு கூறி குறித்த நபரிடம் நகையை ஒப்படைத்துள்ளார் அந்தப் பெண். சிகிச்சை நிறைவடைந்து வெளியே வந்து பார்த்த போது நகையை வாங்கியவர் தலைமறைவாகி விட்டார். அதன் பின்னர் அவரை எங்கும் தேடியும் காணாத நிலையில் அவர் தொடர்பாக விசாரித்த போது குறித்த நபர் வைத்திய சாலைப் பணியாளர் அல்ல என்பது தெரிய வந்தது.

இதனை அடுத்து இது தொடர்பாக நகையைப் பறிகொடுத்த பெண் யாழ். பொலிஸ் நிலையத்தில் இது தொடர்பாக முறைப்பாடு செய்துள்ளார். (த-4-400)

**“அந்தச் சந்தர்ப்பத்தில் ஏற்பட்ட அறிமுகத்தை அடுத்து அவர் வைத்தியசாலைப் பணியாளர் என எண்ணி அவரது பேச்சை நம்பி தான் அணிந் திருந்த 6 பவுண் நகையைக் கழற்றி பாதுகாப்பாக வைத்திருந்து தருமாறு கூறி குறித்த நபரிடம் நகையை ஒப்படைத் துள்ளார்.**

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

## முதல்வரின்

சித் திணைக்களத்திலேயே இவை காட்சிப் பொருளாக வைக்கப்பட்டிருக்கின்றன.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சினூடாக, நெல்சிப் வேலைத்திட்டத்தின் கீழ் வடக்கு மாகாணத்துக்கு கனரக வாகனங்கள் வழங்கப்பட்டுள்ளன. வீதிகள் செப்பனிடுவதற்குரிய சகல வகையான வாகனங்களும் கடந்த ஒக்ரோபர் மாதம் வழங்கப்பட்டுள்ளன.

8 றோலர் இயந்திரங்களும், 2 மோட்டர் கிரேட்டர் மற்றும் ஏனைய சில இயந்திரங்களும் வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சுக்கு வழங்கப்பட்டுள்ளன. இவை மாவட்ட ரீதியாக ஒதுக்கப்பட்டுள்ள போதும் ஒவ்வொரு மாவட்டத்திலும் எந்தெந்த உள்ளூராட்சிச் சபைகளுக்கு அவை வழங்கப்பட வேண்டும் என்று தெரிவிக்கப்படவில்லை.

வடக்கில் 34 உள்ளூராட்சிச் சபைகள் உள்ள நிலையில், கையளிக்கப்பட்ட வாகனங்களை எந்த உள்ளூராட்சிச் சபைக்கு வழங்க வேண்டும் என்பதைத் தெரிவிக்குமாறு கோரி உள்ளூராட்சி ஆணையாளர் திணைக்களத்தினால், உள்ளூராட்சி அமைச்சின் செயலாளருக்குக் கடந்த ஒக்ரோபர் மாதமே கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இதற்கு உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரினால், மேற்படி விடயம் மாகாண உள்ளூராட்சி அமைச்சரும், முதலமைச்சருமான க.வி.விக்னேஸ்வரனுக்குத் தெரியப்படுத்தப்பட்டுள்ளதாகப் பதிலளிக்கப்பட்டுள்ளது. இருப்பினும் இன்று வரை முதலமைச்சரினால் இது குறித்து எந்தவித பதிலும் வழங்கப்படவில்லை.

இதனால் குறித்த வாகனங்கள் வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகத்தில் வெயிலுக்கும் மழையிலும் காத்திருக்கின்றன. (த-5)

## கருத்தடையின்

கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த செப்ரெம்பர் மாதம் 50 பெண்களுக்கு மேற் கொள்ளப்பட்ட கட்டாயக் கருத்தடைக்குள் இவரும் உட்பட்டிருந்தார். கர்ப்பமான நிலையிலேயே குறித்த தாயாருக்குக் கருத்தடை மேற்கொளளப்பட்டிருந்தது. இதனால் கடுமையான நோய்ப் பாதிப்புக்குள்ளான இவர் கடந்த நவம்பர் மாதம் வைத்தியசாலைக்குச் சென்று கருத்தடையை நீக்கியுள்ளார்.

இதன் பின்னர் உடல்வலி காரணமாக அவதிப்பட்டு வந்த நிலையில் கடந்த நவம்பர் மாதம் 23 ஆம் திகதி கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். அதன் பின்னர் யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு அங்கு சிகிச்சை பலனளிக்காத நிலையில் நவம்பர் 28 ஆம் திகதி அவர் உயிரிழந்திருந்தார்.

இவர் நிமோனியாவினால் உயிரிழந்ததாக வைத்தியசாலை உடல்கூற்றுப் பரிசோதனை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இது தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்திருந்த வடக்கு மாகாண சுகாதார அமைச்சும், மேற்படி உயிரிழப்புக்கு வளப்பற்றாக்குறையே காரணம் எனத் தெரிவித்திருந்தது.

இந்த நிலையில் உயிரிழந்த பெண்ணின் கணவர், தனது மனைவியின் உயிரிழப்பு தொடர்பில் முழுமையான விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும், மரணவிசாரணை உரிய வகையில் நடத்தப்படவில்லை எனவும், சாட்சிகள் ஒழுங்காக விசாரிக்கப்படவில்லை எனவும் தெரிவித்து மனித உரிமைகள் சட்டத்தரணிகள் ஊடாக யாழ்.நீதிவான் நீதிமன்றில் நீதி கோரியிருந்தார்.

அவரது கோரிக்கையை ஏற்றுக் கொண்ட நீதிமன்றம், வழக்கை எதிர்வரும் ஜனவரி மாதம் 24 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளவுள்ளது. (த-5)

## பிரிட்டன்

பொது நலவாய மாநாட்டுக்கு அரச தலைவர்கள் வந்தபோது இஸ்ரேல் விமானமொன்று கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு வந்திருந்தது என்று நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர குறிப்பிட்டார். இஸ்ரேலுக்கும் பொது நலவாய அமைப்புக்கும் என்ன தொடர்பு என்று அவர் கேட்டிருந்தார்.

பொதுநலவாய மாநாடு நடைபெற்றபோது, அதற்குச் சமாந்தரமாக வணிக மாநாடும் நடைபெற்றது. பொது நல வாய அமைப்பில் அங்கம் வகித்து வந்த நாடுகளின் முன்னணி வர்த்தகர்கள் வர்த்தக மாநாட்டுக்கு அழைக் கப்பட்டிருந்தனர். இலங்கையில் மட்டுமல்ல, ஆஸ்திரேலியாவிலும் கடந்த முறை இப்படித்தான் நடைமுறை பின்பற்றப்பட்டது. எனவே, அடிப்படைத் தகவல்கள் தெரியாமல் நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள இதுதொடர்பில் பேசியமை கவலையளிக்கின்றது.

குறிப்பாக, பொதுநலவாய அமைப்பில் அங்கம் வகிக் காத 14 நாடுகளைச் சேர்ந்த முன்னணி வர்த்தகர்கள் வணிக மாநாட்டில் பங்கேற்றிருந்தனர். இதில் இஸ்ரேலிலிருந்தும் சிலர் வந்திருந்தனர். எல்.ஆர்.குரூப் என்ற நிறுவனத்தின் தலைவரும் அந்த நிறுவனத்தின் வாகனத்தில் இதற்கு வந்திருந்தார். இதில் என்ன தவறு உள்ளது?

அதேவேளை, பிரிட்டன் நாடாளுமன்ற உறுப்பினர்களும் விலை கொடுத்து வரவழைக்கப்பட்டனர் என்ற குற்றச்சாட்டு முன்வைக்கப் பட்டது. ஏற்கனவே, இலங்கை நாடாளுமன்றத்தில் இருந்தும் ஆளும், எதிரணி உறுப்பினர்கள் பிரிட்டனிலுள்ள விடயங்களை ஆராயும் பொருட்டு அங்கு சென்றிருந்தோம். இதற்குப் பிரிட்டனே பெரும் பகுதி பணத்தை செலுத்தியிருந்தது.

எமது நாட்டு நாடாளுமன்ற உறுப்பினர்கள் பிரிட்டன் சென்றிருந்தபோது அந்நாடு செலவிட்டதைப்போன்று அங்குள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களை இங்கு வருமாறு நாம் அழைப்பு விடுத்திருந்தோம். இங்கு வந்து நிலைமைகளை நேரில் பார்த்ததன் பின்னர் அவர்கள் கேள்விப்பட்டிருப்பதை விடவும் நிலைமைகள் வித்தியாசமாகவும் முன்னேற்றமாகவும் இருப்பதாகக் கூறுகின்றனர். அவர்கள் இங்கு வந்த பின்னர் உண்மையை அறிந்துள்ளனர். அதற்கான வாய்ப்பை வழங்குவது எமது பொறுப் பாகும்.

அதேவேளை, ஜனாதிபதியின் இணைப்புச் செயலர் ஒருவர் குறித்தும் மங்கள எம்.பி. குறிப்பிட்டிருந்தார். ஆனால், அப்படியான ஒருவர் ஜனாதி பதி செயலகத்தில் இல்லை. அவர் கூறிய பெயரை உடையவருக்கும் ஜனாதிபதி செயலகத்துக்கும் எவ்வித தொடர்பும் இல்லை - என்றார்.

## புலமைப்பரிசில்

தன்மை மிக்கதாகவே மாற்றமடைந்து வருகிறது. அதாவது, சிறந்த பாடசாலைகளுக்கு பிள்ளைகளைச் சேர்ப்பதிலேயே பெற்றோர்கள் ஆர்வமாக உள்ளனர்.

அது பிழையான எண்ணமாகும். இதை முதலில் மாற்ற வேண்டும். நாட்டைப் பொறுத்தவரை அனைத்துப் பாடசாலைகளுமே சிறந்த பாடசாலைகளே. 2016 ஆம் ஆண்டிலிருந்து முதலாம் தரத்திலிருந்து 5 ஆம் தரம் வரை கல்வி கற்ற மாணவர்களின் அடைவு மட்டத்தை மதிப்பிட மட்டுமே பரீட்சைகள் நடைபெறும். இதில் எவ்வித சிக்கலோ மாற்றமோ ஏற்படாது" என்றார்.

## சந்திரசிறியை

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக்குழுக் கூட்டத்திலேயே இந்த முக்கிய சந்திப்பு வவுனியாவில் நடத்துவது தொடர்பில் முடிவெடுக்கப்பட்டது.

இரா.சம்பந்தன் தலை மையில் நடைபெற்ற இந்த நாடாளுமன்றக்குழுக் கூட்டத்தில் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, பொன். செல்வராஜா, ஈ.சரவணபவன், சுரேஷ் பிரேமச்சந்திரன், பா.அரியநேத்திரன், செல்வம் அடைக்கலநாதன், சி.சிறிதரன், சிவசக்தி ஆனந்தன், சீ.யோகேஸ்வரன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்தக் கூட்டத்தில் இன்று நாடாளுமன்றில் நடைபெறவுள்ள 2014 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தின் இறுதி வாசிப்புக் கான வாக்கெடுப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எதிர்த்து வாக்களிக்கும் என்றும் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

வரவு - செலவுத் திட்டத்தில் வடக்கு, கிழக்கு மாகாணங்கள் அரசால் திட்டமிட்டுப் புறக்கணிக்கப்பட்டு பாதுகாப்பு அமைச்சுக்கே இம்முறையும் அதிக நிதி ஒதுக்கப்பட்டுள்ளமையால் மேற்படி முடிவைத் தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பு எடுத்துள்ளது என்று கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேற்று மாலை 'உதயனி'டம் தெரிவித்தனர்.

## இலங்கைக்கு

ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் பொதுநலவாயத்தின் உறுப்பு நாடுகளுடன் பிரிட்டன் தொடர்ச்சியாக கலந்துரையாடல்களை நடத்தி வருகின்றது.

இதன் தொடர்ச்சியான நகர்வாக, எதிர்வரும் மார்ச் மாதம் ஐ.நா மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கு எதிராகக் கூட்டுத் தீர்மானத்துக்கு ஆதரவளிப்பது தொடர்பில் ஆராயப்பட்டு வருகின்றது.

சர்வதேச மனித உரிமைச் சட்டங்களின் மீறல் தொடர்பில் இலங்கை சுயாதீன விசாரணை நடத்த வேண்டும் எனவும், எதிர்வரும் மார்ச் மாதத்துக்கு முன்னர் அது நடத்தி முடிக்கப்பட வேண்டும் என்பதையும் வெளிப்படுத்தியுள்ள பிரிட்டன், இல்லாவிடின் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையினூடாகச் சர்வதேச விசாரணையைக் கோரும் என்றும் தெரிவித்துள்ளது.

மார்ச் மாதம் நிறைவேற்றப்படவுள்ள பிரேரணைக்கு உறுப்பு நாடுகளின் ஆதரவைப் பெற்றுக்கொள்ளும் முயற்சியிலும் பிரிட்டன் ஈடுபட்டுள்ளதாக அமைச்சர் ஹூகோ ஸ்வயர் தெரிவித்துள்ளார். (த-5)

## அரச

என்று தெரிந்தும் தனிச் சிங்களத்தில் கடிதம் அனுப்புவது அவரைக் கத்தியால் குத்துவதற்கு சமனாகும் என்று தேசிய மொழிகள் ஒருமைப்பாட்டு அமைச்சர் வாசுதேவ நாணயக்கார நாடாளுமன்றத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை தெரிவித்திருந்தார்.

மும்மொழிக் கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்கு தனியான அமைச்சு அமைக்கப்பட்டு, அதற்குத் தனியான அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர். ஆனாலும் அவை செயலுருவாக்கம் பெறுவதில்லை என்று தெரிவிக்கப்படுகின் றது.

நிதி ஆணைக்குழுவினால் அனுப்பப்படுகின்ற கடிதங்கள் இன்னமும் சிங்கள மொழியிலேயே அனுப்பப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதனால் அந்தக் கடிதங்களை மொழி பெயர்ப்புச் செய்வதற்கு அதிகாரிகள் சிரமப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை -

கொழும்பு நீர்ப்பாசனத் திணைக்களத்தில் உதவியாளர் வெற்றிடத்துக்கான நேர்முகத் தேர்வுக்கு என அழைக்கப்பட்டுள்ளவர்களுக்கான அழைப்புக் கடிதம் தனிச் சிங்கள மொழியில் அனுப்பப்பட்டுள்ளது. இதனால் நேர்முகத் தேர்வுக்கு விண்ணப்பித்தவர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

நேர்முகத் தேர்வு இன்று வெள்ளிக்கிழமையும், நாளை சனிக்கிழமையும், பம்பலப்பிட்டியில் நடைபெறவுள்ளது. இந்நிலையில் தனிச் சிங்கள மொழியில் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளமையால் பலர் அவற்றைப் புரிந்துகொள்ள முடியாமல் நேர்முகத் தேர்வைத் தவறவிட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

மும்மொழிக் கொள்கை நடைமுறை கட்டாயம் பின்பற்றப் பட வேண்டும் என்று வலியுறுத்தப் பட்டு வருகின்றபோதும் அரச திணைக்களங்களே அதனை பெரும்பாலும் அலட்சியம் செய்து வருகின்றன என்று குற்றம் சாட்டப்படு கிறது. (த-5- 4)

## தெரிவுக்குழுவின்

அமைப்பதற்கான முன்மொழிவுகள் கடந்த வருடம் டிசெம்பர் மாதம் சமர்ப்பிக்கப்பட்டு அதன் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப் பட்டிருந்தன.

இனப் பிரச்சினைக்கான தீர்வை இழுத்தடிப்பதற்காகவே நாடாளுமன்றத் தெரிவுக் குழு அமைக்கப்படுவதாகக் குற்றம் சுமத்திய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் இதனைப் புறக்கணித்திருந்தன. ஆளும் கட்சியின் சார்பில் மாத்திரம் பெயர்கள் சிபார்சு செய்யப்பட்டு இதன் தலைவராக அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா நியமிக்கப் பட்டிருந்தார்.

இந்தத் தெரிவுக்குழு ஒரே ஒரு அமர்வை நடத்தியிருந்தது. அத்துடன் தேசிய இனப்பிரச்சினைத் தீர்வுக்கு யாரும் ஆலோசனை வழங்குவதற்குரிய வகையில் ஏற்பாடுகளை அமைத்து மேலும் ஆறு மாத காலத்துக்கு நீடிப்பைப் பெற்றிருந்தது.

இனப் பிரச்சினை தீர்வுக்கான எந்தவொரு முன்நகர்வுகளும் தெரிவுக்குழுவால் மேற்கொள்ளப்படாத நிலையில், மீண் டும் மேலும் ஆறு மாத காலத் துக்கு அதனை நீடிப்பதற்கு அதன் தலைவர் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா முன் வைத்த யோசனைக்கு நாடாளு மன்றம் அனுமதியளித்துள் ளது.

இதனடிப்படையில் ஜூன் 21 ஆம் திகதி வரை அது நீடிக்கப் பட்டுள்ளது. (த-5)

## இன்றைய ஆட்டம்

யாழ்ப்பாணம்,டிசெ.20

யாழ். உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் ஊரெழு றோயல் விளையாட்டுக் கழகம் நடத்தும் 'யாழ்ப்பாணச் சமர்' உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.


இதில் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் குருநகர் பாடும் மீன் விளை யாட்டுக்கழகத்தை எதிர்த்து மானிப்பாய் றெட்றேஞ்சர்ஸ் விளை யாட்டுக்கழகம் மோதவுள்ளது. (த-23)

* * *



வவுனியா வைரவப் புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகம் சாந்தன், யூட்கசன் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் வவுனியா வைரவப் புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழக மைதானத்தில் மின்னொளியில் இடம்பெற்று வருகின்றது.

இதில் இன்று வெள்ளிக்கிழமை 6 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஏ.பி.சி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து வடதாரகை விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (த-23)




முல்லைத்தீவு 591 ஆவது இராணுவப் படைப்பிரிவு நடத்திய உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இரண்டாமிடத்தைப் பெற்ற சிலாவத்தை இளம் பறவை விளையாட்டுக்கழக அணித் தலைவருக்கு நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தின் தலைவர் றஞ்சித் றொட்றிக்கோ வெற்றிக் கிண்ணம் வழங்குகிறார். (த-23)

## யுனிபைட், சண்சைன் ஆட்டங்களில் வெற்றி

வவுனியா, டிசெ.20

வவுனியா வைரவப் புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகம் சாந்தன்,யூட்கசன் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் வவுனியா வைரவப் புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டு மைதானத்தில் மின்னொளியில் இடம்பெற்று வருகின்றன.

இதில் கடந்த செவ்வாய், புதன் ஆகிய தினங்களில் இடம்பெற்ற ஆட்டங்களில் யுனிபைட், சண்சைன் விளையாட்டுக்கழக அணிகள் வெற்றி பெற்றுள்ளன.

செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் யுனிபைட் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து நண்பர்கள் விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது.

இதில் யுனிபைட் விளையாட்டுக் கழக அணி 4:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

புதன்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் அல்மதீனா விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சண் சைன் விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது.

இதில் சண் சைன் விளையாட்டுக் கழக அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (த-23)



"-"

அல்மதீனா விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சண் சைன் விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது.


# யாழ்ப்பாணத்தில் முதல் முறையாக தேசிய மேசைப் பந்தாட்ட போட்டி

### *நாளையும் நாளை மறுதினமும்*

யாழ்ப்பாணம், டிசெ.20

யாழ்ப்பாணம், வவுனியா மேசைப்பந்தாட்டச் சங்கங்கள், அபான்ஸ், ஸ்ரக் இன்ரர்நஷனல் நிறுவனத்தின் அனுசரணையுடன் நடத்தும் அகில இலங்கை ரீதியிலான மேசைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி ஆட்டங்கள் நாளை சனிக்கிழமையும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமையும் யாழ். மத்திய கல்லூரியில் இடம் பெறவுள்ளன.

இந்தத் தொடரில் யாழ்ப்பாணம், வவுனியா, கேகாலை,



காலி, கண்டி, கொழும்பு, மட்டக் களப்பு, இரத்தினபுரி, பண்டார வளை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த போட்டியாளர்கள் பங்குபற்றவுள்ளனர்.

நாளை சனிக்கிழமை காலை 7.30 மணிக்கு ஆரம்ப நிகழ்வு இடம்பெறும். இந்த நிகழ்வில் யாழ்.மத்திய கல் லூரி அதிபர் எஸ்.கே.எழில் வேந் தன், ஆனைக்கோட்டை றோ.க.தமிழ்க் கலவன் பாடசாலையின் அதிபர் திருமதி நவலக்ஷ்மி சந்திரகுமார் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொள்ளவுள்ளனர்.

சனிக்கிழமை பெண்களுக்கான போட்டிகள் இடம்பெற்று அன்று மாலை 6.30 மணிக்கு பரிசளிப்பு நிகழ்வு நடைபெறும். ஞாயிற்றுக்கிழமை ஆண்களுக்கான போட்டி இடம்பெற்று மாலை 7.30 மணிக்கு பரிசளிப்பு நிகழ்வு இடம்பெறும். பரிசளிப்பு நிகழ்வுக்கு வடக்கு மாகாண சபை உறுப்பினர் ஆனல்ட் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார். (த-23)

"-"

யாழ்ப்பாணம், வவுனியா, கேகாலை, காலி, கண்டி,கொழும்பு, மட்டக்களப்பு, இரத்தினபுரி, பண்டாரவளை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த போட்டியாளர்கள் பங்குபற்றவுள்ளனர்.

## தாச்சியில் வென்றது தாவடி காளியம்பாள்

வலி.வடக்கு, டிசெ.20

யாழ்.மாவட்டத் தாச்சி விளையாட்டுச் சங்கத்தின் அனுசரணையுடன் வலி.தெற்கு பிரதேச இளைஞர் கழகங்களின் சம்மேளனத்தினால் மின்னொளியில் நடத்தப்படும் தாச்சி சுற்றுப் போட்டியில் நேற்று முன்தினம் புதன்கிழமை இரவு இடம்பெற்ற போட்டிகளின் முடிவுகள் வருமாறு:-

தாவடி காளியம்பாள் விளையாட்டுக் கழகமும், மயிலிட்டி பாரதி விளையாட்டுக் கழகமும் மோதிக் கொண்டன. இதில் இரு அணிகளும் பலம் பொருந்திய அணிகள் என்பதை நிரூபிக்கும் வகையில் முதல் பாதி ஆட்டத்தில் மோதிக் கொண்டன.

ஆனாலும் இரண்டாம் பாதி ஆட்டத்தில் காளியம்பாள் விளையாட்டுக் கழகம் அதிரடியாக விளையாடி அதிக பழங்களைப் பெற்று அதிர்ச்சியைக் கொடுத்தது.

ஆட்ட நிறைவில் காளியம்பாள் விளையாட்டுக் கழகம் 13:3 பழம் என்ற அடிப்படையில் மயிலிட்டி பாரதி விளையாட்டுக் கழகத்தை வென்றது. (த-23)


## தாச்சிப் போட்டி

வலி.வடக்கு, டிசெ.20

யாழ்.மாவட்ட தாச்சி விளையாட்டுச் சங்கத்தின் அனுசரணையுடன் வலி.தெற்கு பிரதேச இளைஞர் கழகங்களின்



சம்மேளனத்தினால் மின்னொளியில் நடத்தப்படும் தாச்சி சுற்றுப் போட்டியில் நாளை வெள்ளிக்கிழமை இரவு 7 மணிக்கு உடுவில் உதயசூரியன் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெறவுள்ள காலிறுதிப் போட்டியில் தாவடி காளியம்பாள் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து சண்டிலிப்பாய் உதயசூரியன் விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது. (த-86)



சென்.ஜோன்ஸ் கல்லூரிக்கும் சென்.தோமஸ் கல்லூரிக்கும் இடையிலான சிநேக பூர்வ கிரிக்கெட் போட்டி கடந்த வாரம் சென். ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது.

இதில் கபில்ராஜ் சிறந்த துடுப்பாட்ட வீரராகத் தெரிவு செய்யப்பட்டார். அவருக்கான விருதை சென். தோமஸ் கல்லூரி அதிபர் வழங்குகிறார். (த-23)

## மாதனை வி.கவின் கரப்பந்தாட்டம்

வடமராட்சி, டிசெ.20

பருத்தித்துறை மாதனை விளையாட்டுக் கழகம் யாழ். மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையே மின்னொளியில் கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி ஒன்றை நடத்தவுள்ளது.

போட்டியில் கலந்து கொள்ள விரும்பும் விளையாட்டுக் கழகங்கள் செயளாளர், மாதனை விளையாட்டுக் கழகம் பருத்தித்துறை என்னும் முகவரியுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (த-8)

## 3 ஆம் இடத்துக்கான ஆட்டம் இன்று

பருத்தித்துறை,டிசெ.20

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் வதிரி டைமன்ஸ் விளையாட்டுக்கழகம் தமது நூற்றாண்டு விழாவை முன்னிட்டு வட மாகாண அணிகளிடையே நடத்தி வரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் 3 ஆம் இடத்துக்கான போட்டி இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.



இதில் நாச்சிக்குடா சென். மேரிஸ் அணியை எதிர்த்து இளவாலை யங்ஹென்றிஸ் அணி மோதவுள்ளது. (த-422)

# இலங்கை அணியை வீழ்த்தி பாக். வெற்றி




இலங்கை மற்றும் பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான முதலாவது ஒருநாள் சர்வதேச போட்டி, சர்ஜா சர்வதேச மைதானத்தில் நடைபெற்றது. நேற்று முன் தினம் இடம்பெற்ற இந்தப் போட்டியில் 11 ஓட்டங்களால் பாகிஸ்தான் அணி வெற்றி பெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற பாகிஸ்தான் அணி முதலில் துடுப்பெடுத்தாடி, 50 பந்துப்பரிமாற்றங்களில் 5 இலக்குகளை இழந்து 322 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

பாகிஸ்தான் அணி சார்பில் மொஹமட் ஹபீஸ் 122 ஓட்டங்களையும் சொஹிப் மஸ்சூத் 71 ஓட்டங்களை யும் சர்ஜீல் கான் 61 ஓட்டங்களை யும் பெற்றனர். பந்துவீச்சில் இலங்கை சார்பில் சுரங்க லக்மால் 2 இலக்கு களை வீழ்த்தினார்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி சார்பில் டில்சான் மற்றும் குசல பெரேரா சிறப்பான ஆரம்பத்தைக் கொடுத்தனர். இருந் தும் இலங்கை அணி 49.4 பந்து பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 311 ஓட்டங்களைப் பெற்று 11 ஓட்டங்களால் தோல்வி அடைந்தது.

இலங்கை அணி சார்பில் குசல பெரேரா 64 ஓட்டங்களைப் பெற்றார். போட்டியின் ஆட்டநாயகனாக மொஹமட் ஹபீஸ் தெரிவு செய்யப்பட்டார். (த)

# காலிறுதி போட்டிக்கு சண்டர்லாண்ட் அணி




லண்டன் லீக் உதைபந்தாட்டப் போட்டிகளில் காலிறுதிப் போட்டிக்கு சண்டர்லாண்ட் அணி தெரிவாகியுள்ளது. நேற்று முன்தினம் இடம் பெற்ற செல்சீ அணியுடனான போட்டியில் 2:1 என்ற கணக்கில் வெற்றி பெற்றதன் மூலம் சண்டர்லாண்ட் அணி இதற்கான தகுதியைப் பெற்றுக் கொண்டது. ஏற்கனவே மன்செஸ்டர் யுனைட்டட் கழகம் தொடரின் காலி றுதிப்போட்டிக்குத் தெரிவாகி யுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த)


# லலித் மோடிக்கு அனுமதி



ராஜஸ்தான் கிரிக்கெட் சங்கத் தேர்தலில் தலைவர் பதவிக்குப் போட்டியிட லலித மோடிக்கு அனுமதி கிடைத்துள்ளது. பிரிமியர் கிரிக்கெட் தலைவராக 2008-2010இல் இருந்தவர் லலித் மோடி. நிதி முறைகேடு செய்தது தொடர்பாக இவருக்கு இந்திய கிரிக்கெட் சபை வாழ்நாள் தடை விதித்தது. இந்நிலையில், இவர் ராஜஸ்தான் கிரிக்கெட் சங்கத்தேர்தலில் தலைவர் பதவிக்கு போட்டியிட, தனது சட்டத்தரணி மகமூத் அபிடி மூலம் மனுத் தாக்கல் செய்தார். இதை அறிந்த இந்திய கிரிக்கெட் சபை இதற்கு ஆட்சேபம் தெரிவித்ததுடன், அதை மீறும் பட்சத்தில் சங்க உரிமையை இழக்க நேரிடும் எனவும் எச்சரித்தது.

உயர்நீதிமன்றில் தேர்தல் பார்வையாளராக நியமிக்கப்பட்டுள்ள முன்னாள் நீதிபதி நரேந்திர மோகன் இருதரப்பினரிடமும் இது குறித்து விசாரித்தார். முடிவில், தேர்தலில் மோடி போட்டி யிட நரேந்திர மோகன் அனுமதி வழங்கினார். தேர்தலில்லலிதமோடிபங்கேற்பது உறுதியாகியுள்ளது.

# ஜோகோவிச்சின் புதிய பயிற்சியாளர்



சர்வதேச ரென்னிஸ் தரவரிசையில் 2ஆவது இடத்தில் உள்ள சேர்பியாவின் ஜோகோவிச், ஜேர்மனியைச் சேர்ந்த போரிஸ் பெக்கரை தன் புதிய பயிற்சியாளராக நியமித்துள்ளார்.

முன்னாள் வீரரான பெக்கர், 6 கிராண்ட்ஸ்லாம் மற்றும் 64 ஏடிபி பட்டங்களை வென்றுள்ளார். தமது 17ஆவதுவயதில்கிராண்ட்ஸ்லாம் பட்டம் வென்று சாதனை படைத்தார். ஜனவரியில்தொடங்கவுள்ள ஆஸ்திரேலிய ஓபன் தொடருக்குத் தயாராகும் விதமாக ஜோகோவிச், தமது பயிற்சியாளரை மாற்றியுள்ளார். இருப்பினும் தனது நீண்ட நாள் பயிற்சியாளரான மரியான் வஜ்டாவும் பயிற்சியாளர் குழுவில் இடம்பெறுவார் என ஜோகோவிச் தெரிவித்தார்.

பெக்கருடன் இணைந்து செயற்பட எனக்கு அருமையான வாய்ப்புக் கிடைத்துள்ளது. அவரது அனுபவம் மேலும் பல கிராண்ட்ஸ்லாம் பட்டங்களை வெல்ல உதவும்' என, ஜோகோவிச் தெரிவித்தார். (த)

# பேர்த் மைதானத்தில் இனி டெஸ்ட் இல்லை



உலகின் அதிவேக ஆடுகளம் மற்றும் பாரம்பரிய பெருமை மிக்க பேர்த் மைதானத்தில் இனி டெஸ்ட் போட்டிகள் நடைபெறாது என்று ஆஸ்திரேலிய ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. இந்தியாவுக்கு எதிராக அடுத்த ஆண்டுக் கடைசியில் நடைபெறவுள்ள 4 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் பேர்த் மைதானம் உள்ளடக்கப்படவில்லை. (த)

# வாழ்நாள் சாதனையாளர் விருது கபில்தேவுக்கு

இந்திய அணிக்கு முதன் முறையாக உலகக் கிண்ணத்தை வென்று கொடுத்த முன்னாள் அணித்தலைவர் கபில் தேவுக்கு. இந்த ஆண்டுக்கான சி.கே.நாயுடு வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கப்படும் என. இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை தெரிவித்துள்ளது.

1994ஆம் ஆண்டு முதல் ஆண்டுதோறும் இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை சார்பில். முதல் இந்திய டெஸ்ட் அணியின் தலைவர் சி.கே நாயுடுவின் பெயரில் வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கப்பட்டு வருகிறது. 2012-2013ஆம் ஆண்டுக்கான விருதுக்கு சகலதுறை வீரர் கபில்தேவ் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை தலைவர் சீனிவாசன். செயலர் சஞ்சய் படேல் மற்றும் மூத்த பத்திரிகையாளர் ஏயாஸ் மேமன் ஆகியோர் அடங்கிய விருதுக் குழு சென்னையில் புதன்கிழமை கபில் தேவை ஏகமனதாகத் தேர்வு செய்தது. விருது வழங்கும் நிகழ்ச்சியின்போது அவருக்கு கிண்ணத்துடன்., ரூபா 75 லட்சத்துக்கான காசோலை வழங்கப்படும் என. சஞ்சய் படேல் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது

கபில்தேவ் 131 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி 434 இலக்குகள் வீழ்த்தியுள்ளார். தவிர, டெஸ்ட் போட்டிகளில் 5 ஆயிரம் ஓட்டங்களைக் கடந்து. 400 இலக்குகளை வீழ்த்திய முதல் வீரர் என்பதும் குறிப்



பிடத்தக்கது. இவர் 225 ஒரு நாள் ஆட்டங்களில் 3,783 ஓட்டங்கள் குவித்து 253 இலக்குகள் வீழ்த்தியுள்ளார். 1983 ஆம் ஆண்டு இவரது தலைமையிலான இந்திய அணி முதன்முறையாக உலகக் கிண்ணத்தை வென்றது. (த)

# மேற்கிந்தியத் தீவுகள் மிகச்சிறப்பான ஆட்டம்



நியூசிலாந்துக்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கும், நியூசிலாந்து அணிக்குமிடையிலான 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரின் மூன்றாவது போட்டியின் முதலாம் நாள் முடிவில் மேற்கிந்தியத் தீவுகள் அணி சிறப்பான துடுப்பாட்டத்தை வெளிப்படுத்தியுள்ளது.

ஹமில்ற்றனில் இடம்பெறும் இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற நியூஸிலாந்து அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள் அணி நேற்றைய நாள் முடிவில் 6 இலக்குகளை இழந்து 289 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

முதலாவது இலக்குக்காக 41 ஓட்டங்களைப் பகிர்ந்த அந்த வணி. ஒரு கட்டத்தில் ஒரு இலக்கை இழந்து 77 ஓட்டங்களுடன் பலமான நிலையில் காணப்பட்ட போதிலும். அதன் பின்னர் இலக்குகளைத் தொடர்ச்சியாக இழந்து. 5 இலக்குகளை இழந்து 86 ஓட்டங்களுடன் தடுமாறியது. ஆனால் 6ஆவது இலக்குக்காக ஷிவ்நரின் சந்தர்போல், டினேஷ் ராம்டின் இருவரும் 200 ஓட்டங்களைப் பகிர்ந்து மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு முன்னிலையை வழங்கினார்.

துடுப்பாட்டத்தில் டினேஷ் ராம்டின் 107 ஓட்டங்களையும். ஷிவ்நரின் சந்தர்போல் ஆட்டமிழக்காமல் 94 ஓட்டங்களையும், கேர்க் பிறெத்வெய்ற் 45 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் நியூசிலாந்து அணி சார்பாக கொரே அன்டர்சன் 3 இலக்குளையும், ரிம் சௌத்தி 2 இலக்குகளையும், நீல் ப்க்னர் ஒரு இலக்கையும் கைப்பற்றினர்.

3 போட்டிகள் கொண்ட இத் தொடரில் 2 போட்டிகளின் நிறைவில் நியூசிலாந்து அணி 1-0 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (த)

# வொட்சனை புகழும் கிளார்க்

ஆஸ்திரேலிய அணியின் சகலதுறை வீரர் ஷேன் வொட்சன் அணிக்காக விளையாடினார் என ஆஸ்திரேலிய அணியின் தலைவர் மைக்கல் கிளார்க் தெரிவித்துள்ளார். மூன்றாவது போட்டியில் ஷேன் வொட்சன் விளையாடிய விதத்திஜன அவர் புகழ்ந்துள்ளார்.

ஆஸ்திரேலியாவின் பிரதான வீரர்களில் ஒருவரான ஷேன் வொட்சன். டெஸ்ட் போட்டிகளில் துடுப்பாட்ட வீரராகப் பிரகாசிக்காத நிலையில் விமர்சனங்களுக்கு உள்ளாகியிருந்தார்.

அத்தோடு. ஷேன் வொட்சனுக்கும். அணித்தலைவர் மைக்கல் கிளார்க்குக்குமிடையில் முரண்பாடுகள் காணப்பட்டதாகக் கருதப்பட்டது. முன்னாள் பயிற்றுவிப்பாளர் மிக்கி ஆர்தரின் கருத்தின் படி ஷேன் வொட்சனை மைக்கல் கிளார்க் புற்றுநோய் என அழைத்ததாகத் தெரிவிக்கப்பட்டது.



எனினும், மூன்றாவது ஆஷஸ் போட்டியில் ஷேன் வொட்சன் இரண்டாவது இன்னிங்ஸில் அதிரடியான சதத்தைப் பெற்று ஆஸ்திரேலியாவின் வெற்றியில் முக்கிய பங்கை வகித்தமை தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த மைக்கல் கிளார்க், அதன் போது ஷேன் வொற்சன் மிகச்சிறப்பாக விளையாடியிருந்ததாகக் குறிப்பிட்டார்.

அன்றைய நாளில் ஷேன் வொட்சன் அணியை முன்னிறுத்தி ஆடியிருந்ததாகக் குறிப்பிட்ட மைக்கல் கிளார்க், அந்த நேரத்தில் ஆஸ்திரேலிய அணி வேகமாக ஆட வேண்டிய தேவையிருந்ததாகவும், அதைப் புரிந்து கொண்ட ஷேன் வொட்சன் மிகச்சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தியிருந்ததாகக் குறிப்பிட்டார். (த)

**தேவை**

தனியார் உயர்கல்வி நிறுவனம் ஒன்றுக்கான வரவேற்பாளர், ஆங்கில, கணினி ஆசிரியர்கள் உடனடியாகத் தேவை

தொடர்பு: 0777 444225

(சி/10380)(10.14)

**போட்டிப் பரீட்சைக்கான விசேட கருத்தரங்கு**

திறந்த பல்கலைக்கழக சட்டமாணி (LLB) போட்டிப் பரீட்சை வகுப்புக்கள்
பிரதி சனி - 9.00 - 1.00 pm

காணி வெளிக்கள போதனாசிரியர் போட்டிபரீட்சை வகுப்புகள்
பிரதி சனி - 9.00 - 1.00 pm

SLEAS பகுதி II போட்டிப்பரீட்சைக்கான வழிகாட்டல் வகுப்புகள் பிரதி சனி - 2.00 - 5.00 pm
(சிங்கள மொழி மூல கருத்தரங்கின் மொழி பெயர்ப்பு விளக்கங்களுடன்)

விரிவுரையாளர் : P. உமாசங்கர்
வழமையான விரிவுரையாளர்

நாவலர் கல்வி நிலையம்
ஆனைப்பந்தி யாழ். நகர் T .P : 077 4596695

**யாழ் நகரின் பிரமாண்டமான மழலைகளுக்கான SHOW ROOM**

**ABI BABY MART**

நத்தார் புதுவருடத்தை முன்னிட்டு
10% கழிவுடனும் பரிசு மழையுடனும்
புதுவருடத்தை குதூகலத்துடன் ஆரம்பிக்க
ABI BABY MART இக்கு
விரையுங்கள்..! முந்துங்கள்......
267, Brown Road (கலட்டிச் சந்திக்கு அருகில்)

மீண்டும் ....... தனித்துவமான மிடுக்குடன்

**ஆஸ்திரேலியா குடும்ப விசா**

விசா வகை 888, தற்போது Jet வேகத்தில்.....வெற்றிபெறலாம். மிக அதிரடியாக, இன்றிலிருந்து விசா ஆலோசனை ஆரம்பமாகின்றது.
குறிப்பு: முன்னர் இத்திட்டத்திலிருந்து விலகியவர்கள் சேர்த்துக்கொள்ளப்பட மாட்டார்கள். (42783)(10.14)
திசைகாட்டி (பிறை) லிமிட்
175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம். 021 221 9016, 021 568 9090
www.thisaivisa.com

**Townace தேவை**

CR41,42 டீசல்,
Manual Townace தேவை
தொடர்பு: 077 360 4934
(42777)(10.14)

**மணல் விற்பனைக்கு**

கட்டட வேலைகளுக்கும், பூச்சு வேலை களுக்கும் சிறந்த மணல் விற்பனைக்கு உண்டு.
$4\frac{1}{2}$ ரக்ரர் 19,000/=
தொடர்பு: கண்ணா
077 676 6499, 077 759 0792
(40472)(4.6.3)



கபிலா
பாதணியகம்
13, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.
பாடசாலை மாணவர்களுக்கான
Bata DSI பாதணிகளைப் பெற்றுக்கொள்ள
பொறுத்த விலையைவிடக் குறைவான விலையில்.... அசத்தலான தள்ளுபடி
கபிலா
காலணியகம்
24, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 20.12.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.